3006.

[illegible]

01.11.1959 மலர் 20. இதழ் 9.

16.11.1959 மலர் 20 இதழ் 10

JL
12/11/09, NOTA
N89.20.
127081.


தமிழரசு
1-11-1989 ரூ.1



அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாளன்று (2-10-89) சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற சென்னை மாவட்ட [illegible] உதவிகள் வழங்கும் விழாவில் [illegible]

# மக்களின் தேவையை நிறைவு செய்யும் அரசு



எங்கள் அரசு மக்களின் அடிப் படைத் தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவு செய்கிற பொறுப் பான அரசாக இருக்கும். உங்கள் நம்பிக்கையைப் பெறுவதற்கும். பெற்ற நம்பிக்கையை மேலும் பெருக் கிக் கொள்வதற்கும் எங்கள் சிந்தனை யையும் செயலையும் பயன்படுத்து வோம்!

நிர்வாகப் படகில் ஏறி, தூய்மை என்னும் துடுப்பு கொண்டு, அதனை நேர்மையாக, வேகமாகச் செலுத்தி, இலட்சியக் குறியை அடைவோம்!

-முதல்வர் கலைஞர்

(27-1-89-இல் தொலைக் காட்சியில், ஆற்றிய உரையிலிருந்து)

## இந்த இதழில்...


| | |
|---|---|
| 'தமிழரசு' கொட்டும் வெற்றி முரசு | 2 |
| ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல | 3 |
| நிர்வாகத்தில் தூய்மை | 7 |
| சாதனை படைக்கும் சமூகநலத் திட்டங்கள் | 9 |
| மகளிர் நலம் காக்கும் மகத்தான திட்டங்கள் | 11 |
| அரசு ஊழியர்களுக்கு அடுக்கடுக்கான நன்மைகள் | 13 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினருக்கு ஒரு வரப்பிரசாதம் | 15 |
| மகளிரை வாழ வைக்கும் மறுமலர்ச்சித் திட்டம் | 21 |
| சென்னையில் வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள் | 24 |
| மாதம் ஒரு தொழிற்சாலை | 48 |



திருவள்ளுவர் ஆண்டு 2020
சுக்ல ஐப்பசி 16
1-11-1989

தமிழரசு
மலர்:20 இதழ்:9


மதுரை, ஈரோடு ஆகிய நகரங்களில் முதல்வர் கலைஞர் கலந்து கொண்ட அரசு நலத்திட்ட உதவி வழங்குவிழாக் காட்சிகள் முன்புற-பின்புற அட்டைகளில் இடம் பெற்றுள்ளன.

# தமிழரசு கொட்டும் வெற்றி முரசு



மாண்புமிகு செய்தி - தொழிலாளர் நலத் துறை அமைச்சர்
திரு. பொன். முத்துராமலிங்கம்

உங்கள் கரத்தில் தவழும் தமிழரசு இதழின் விற்பனை இப்பொழுது 75,000 எண்ணிக்கையை எட்டிவிட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் முன்பு முதல்வராக இருந்தபொழுது 1971-ஆம் ஆண்டில் தமிழரசு இதழ் ஒரு இலட்சம் பிரதிகள் அச்சேற்றப் பட்டு விற்பனையாகியது. அதன்பின் இதழின் வளர்ச்சி குன்றியது. 1976 ஜனவரிக்குப் பின் அதன் வளர்ச்சி தளர்ச்சி அடைந்ததை அனைவரும் அறிவார்கள்.

அரசு சார்பில் வெளியிடப்படும் இதழ் என்றாலே வனப்பு குன்றியதாக ஏதோ ஒப்புக்கு அச்சடிக்கப்படுவதாக இருந்தமையை மாற்றி அமைத்து அரசின் சார்பில் நடை பெறும் இதழும் பொலிவோடு வெளிவர முடியும் என்பதை எடுத்துக் காட்டியது கலைஞர் அவர்கள் அரசுதான்.

1970-ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்த தமிழரசு இதழ் மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்ற பிறகு மகத்தான வளர்ச்சி அடைந்துள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களில் தமிழரசு இதழ் கண்ட வளர்ச்சியைத் தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறையும் கண்டு வருகின்றது.

முடங்கிக் கிடந்த நிருவாக இயந்திரம் பழுதுபட்டு இருந்ததை அறிந்து செம்மைப் படுத்தி வருகின்றோம்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னதையெல் லாம் செயல்படுத்தி வருகிறார்கள். ஏறத்தாழ 90 சதவிகிதத் தேர்தல் உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டு விட்டன. இந்திய அர சியல் வரலாற்றில் குறுகிய காலத்தில் தேர்தல் வாக்குறுதிகளை நிறை வேற்றிய அரசு கலைஞர் அரசு.

மக்களின் நலனுக்காக நிறைவேற்றப் படும் பணிகளை மக்கள் அறிந்து கொள்ள பெருந்துணையாக விளங்குகிறது தமிழரசு.

இன்று தமிழரசு மக்களைக் கவர்ந்து வெற்றி முரசு கொட்டுவது போல, தமிழக



அரசின் பணிகள் வெற்றி முரசைக் கொட்டியே தீரும்!

தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு ஏற்ற செயல் இதுதான்!

'தமிழரசு' வளர்ச்சி நமக்குக் காட்டும் உண்மை இதுவே!





# ஏழை எளியோர்க்கு இலவச வேட்டி-சேலை

## மாண்புமிகு முதல்வர் கலைஞர் வழங்கினார்

● 50 இலட்சம் ஏழைகள் பயன் அடைகின்றனர்.

● பொங்கலுக்கு மேலும் 33 இலட்சம் ஏழைகளுக்கு வழங்கப்படும்.

மாத வருமானம் ரூ. 200, அதற்குக் கீழும் உள்ள ஏழை எளிய மக்கள் 50 இலட்சம் பேருக்கு தீபாவளியை ஒட்டி இலவச வேட்டி-சேலை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்திருந் தார். அதற்கான ஆணைகள் 3-10-89 அன்று வெளியிடப்பட்டன.

அதன்படி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் 23-10-89 அன்று சென்னை துறைமுகம் தொகுதியில் இரண்டு இடங்களில் இலவச வேட்டி, சேலை களை ஏழை மக்களுக்கு வழங்கினார். தமிழகத்தின் பல் வேறு இடங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அக்டோபர் 23, 24, 25 ஆகிய தேதிகளில் இலவச வேட்டி, சேலைகளை ஏழை எளிய மக்களுக்கு வழங்கினர்.

23-10-89 அன்று சென்னை துறைமுகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் இலவச வேட்டி சேலை களை ஏழைமக்களுக்கு வழங்கிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்ச்சி இன்றைக்கு தமிழகத்தில் இதேபோல நூற்றுக் கணக்கான இடங்களில் நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. கடந்த காலத்தில் ஏழை களுக்கு இலவசமாக வேட்டி, சேலை வழங்குவதென்பது ஆயிரம் பேருக்கு, இரண்டாயிரம் பேருக்கு அதிகமானால் ஒரு இலட்சம் பேருக்கு இரண்டு இலட்சம் பேருக்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் நிகழ்ச்சிகள் இருந்திருக்கக்கூடும்.

ஆனால் இன்றைய தினம் இருநூறு ரூபாயும், இருநூறு ரூபாய்க்குக் கீழும் மாத வருமானமுள்ள ஏழை, எளிய குடும்பங்களுக்கு-ஐம்பது இலட்சம் குடும்பங்களுக்கு ஒரு வேட்டியும், ஒரு சேலையும் வழங்கப்

மின் உற்பத்திக்காக 1988-89ல் 350 கோடி ரூபாய்களாக இருந்த ஒதுக்கீடு 1989-90ல் 460 கோடி ரூபாய்களாக உயர்ந்துள்ளது. மின் விநியோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில், 40 ஆயிரம் குடிசைகளுக்குப் புதிதாக மின் இணைப்பும், 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்பும் தரப்படும்.



# மின் உற்பத்தி

மின்உற்பத்தி நிதி ஒதுக்கீடு ரூ. 350 கோடியிலிருந்து ரூ. 460 கோடிக்கு உயர்த்தப் பட்டது.

வடசென்னை அனல் மின்சாரத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

மேட்டூரில் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது கட்ட மின் உற்பத்தி தொடங்கப் பட்டது.

ஏப்ரல் மாதத்தில் 60 சதவிகிதமாக இருந்த மின்வெட்டு. பின்னர் 40 சதவிகிதமாகக்குறைக் கப்பட்டது.

குறைந்த அழுத்த மின்சக்தி உள்ள தொழிற் சாலைகளுக்கும் புதிய தொழிற்சாலைகளுக்கும் மின்வெட்டு அறவே நீக்கப்பட்டது.

படுகிற நிகழ்ச்சி இப்பொழுதுதான் முதல் தடவையாக இந்தியாவி லேயே தமிழ்நாட்டில் இந்த ஆட்சி யிலே இன்றைக்கு நடைபெறத் தொடங்கியிருக்கின்றது.

இதிலே ஏழை, எளியவர்களுக்கு இலவசமாக வேட்டியும், சேலையும் கிடைப்பது மாத்திரமல்ல, நீண்ட காலமாக, துன்ப துயரங்களுக்கு ஆட்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிற கைத்தறிநெசவாளர்களுக்கும் இதன் மூலமாக வேலைவாய்ப்பும் அவர் களுடைய வயிறு குளிரக் கூடிய நிலையும் இன்றைக்கு உருவாகி யிருக்கின்றது.

கைத்தறிச் சேலை, கைத்தறி வேட்டி இவைகளையே வழங்க வேண்டுமென்றும் அதற்காகச் செல விடப்படுகின்ற கோடிக்கணக்கான ரூபாய் நெசவாளர்களுடைய குடும் பங்களுக்குப்போய்ச் சேர வேண்டு மென்கிற எண்ணத்தோடு, கொள்கை வகுக்கப்பட்டு இன்றைய தினம் ஐம்பது இலட்சம் குடும்பங்களுக்கு இந்தப் பணியினை நாங்கள் ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்த இலவச வேட்டி சேலை வழங்குவதன் மூலம் ஏழை எளி யோர்களுக்கு மகிழ்ச்சியை உண் டாக்குவது மாத்திரமல்ல, வறுமை யிலே வாடிக் கொண்டிருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்கும் நல் வாழ்வு அளிக்கின்ற-அவர்களுடைய. குடும்பங்களில் விளக்கு எரிகின்ற நிலையை உருவாக்குகிற வகையில் நாம் செலவழிக்கின்ற முப்பது அல்லது நாற்பது கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை அந்தக் குடும்பங் களுக்குப் போய்ச் சேர வேண்டு மென்பதற்காக கைத்தறி வேட்டி, சேலைகளை நாம் வழங்குகிறோம்.

முன்னூறு ரூபாயும் அதற்குக் குறைவாக வருமானம் உள்ளவர் களுக்கும் என்று எடுத்துக் கொண் டால் எண்பத்தி மூன்று இலட்சம் பேருக்குத் தரவேண்டும். இருநூறு ரூபாயும், அதற்குக் குறைவான மாத வருமானம் உள்ளவர்களுக்கு என்று இப்பொழுது ஐம்பது இலட்சம் குடும்பங்களுக்குத் தருகிறோம். எங் களுக்குக் கிடையாதா என்று கேட் கிற அருமைச் சகோதரிகளையும், தாய்மார்களையும், சகோதரர்களை யும் அறிவேன்.

எனவே, தீபாவளிக்கு ஐம்பது இலட்சம் பேருக்கும், பொங்கலன்று இப்பொழுது கொடுக்கப்படாத மீதமுள்ள முப்பத்தி மூன்று இலட் சம் குடும்பங்களுக்கும் இலவச வேட்டி சேலை வழங்கப்படுமென்ற உறுதியையும் நான் இங்கே தெரி வித்துக் கொள்கிறேன்.''





# இலவச அரிசி வழங்கும் திட்டம்

83 லட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன் அடையும்

வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அதாவது முந்நூறு ரூபாய்க்குக் குறைந்த மாத வரு மானம் உடைய குடும்பங்களுக்கு ஐந்து கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்பது தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையிலே தரப்பட்ட உறுதிமொழி. ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு, நிதி நிலை அறிக்கை யில் அறிவித்தபடி மூன்று தடவை யோடு மட்டுமல்லாமல், ஜூன் 3 செப்டம்பர் 15 ஆகிய தேதிகளை யும் சேர்த்து, ஆண்டு ஒன்றுக்கு ஐந்து தடவை ஐந்து கிலோ அரிசி இலவசமாக ஏழை எளியோருக்கு அளிப்பது என்று தமிழக அரசு முடிவு செய்து மூன்று தடவைகள் இலவச அரிசியை முன்பு வழங்கியது.

இப்போது நான்காவது தடவை யாக தீபாவளிப் பண்டிகையை ஒட்டி, தமிழ்நாடெங்கும் அக்டோபர் 25, 26, 27 ஆகிய தேதிகளில் ஐந்து கிலோ அரிசி இலவசமாக ஏழை எளிய மக்களுக்கு வழங்கப் பட்டது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 25.10.89 அன்று சென்னைத் துறைமுகம் தொகுதியில் இலவச அரிசி வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, ஏழை எளியோ ருக்கு இலவச அரிசியை வழங்கி னார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டப்பேரவை உறுப் பினர்களும், தமிழகம் முழுவதும் இலவச அரிசி வழங்கும் நிகழ்ச்சி களில் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் இலவச அரிசியை வழங்கிய பிறகு ஆற்றிய சிறப்புரையில், சென்னை மாநகரத் தின் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டதாவது:-

''சென்னை மாநகரத்தின் தண் ணீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, முன்பு நான் முதலமைச்சராக இருந்தபோது வீராணம் திட்டத்தை உருவாக்கி, அந்தத் திட்டத்தின் பாதி வேலைகள் முடிந்த நிலையில் ஆட்சி அகற்றப்பட்ட காரணத்தால், அப் போது இருந்த ஆளுநர் சுகாதியா ஆட்சியில் வீராணம் திட்டம் நல்ல திட்டமா என்று ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆளுநர் ஆட்சியில் அந்தக் குழுவில் 'வீராணம் திட்டம் சாத்தியக்கூறான நல்ல திட்டம்' என்று அறிவிக்கப்பட்ட பிறகும் கூட, ஆளுநர் ஆட்சி முடிந்து, அடுத்த வந்த அ.தி.மு.க. ஆட்சியில் இது கருணாநிதி கொண்டு வந்த திட்டம் என்ற காரணத்தால், அதை நிறைவேற்றாமலேயே போட்டு விட் டார்கள். எனவே, சென்னை மாநகரத்தில் தண்ணீர்தட்டுப்பாடு அதிகமாயிற்று.

''ஆனால் கடந்த 86-ஆம் ஆண் டுக்கு முன்பு, எம்.ஜி.ஆர். ஆந்திர



பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும், சந்ததிகள் வாழ்க்கை சீர்பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

முதலமைச்சரோடு பேசி, தெலுங்கு-கங்கை என்ற ஒரு திட்டத்தை நிறைவேற்ற அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. ஆனால், அந்தப் பணிகள் நடைபெறாமல் அவர்களே அதைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். பிறகு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், இது எம்.ஜி.ஆர். கொண்டு வந்த திட்டம் என்று கிடப்பில் போடாமல், கருணாநிதி கொண்டு வந்த திட்டமாயிற்றே என்று வீராணம் திட்டத்தைக் கிடப்பிலே போட்டார்களே அது போல, நான் போடாமல், யார் கொண்டு வந்த திட்டமானாலும், சென்னை மாநகர மக்களுக்குத் தண்ணீர் கிடைத்தால் போதும் என்கிற எண்ணத்தோடு ஐதராபாத்திற்குச் சென்று ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்துப் பேசி, அந்தப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடிந்து, உடனடியாக அத்திட்டப் பணிகள் தொடங்கப்பட வேண்டும் என்று 30 கோடி ரூபாயைத் தமிழக அரசின் சார்பாக அவர்களுக்குக் கொடுத்தோம். மீதமுள்ள பணத்தையும் தவணை முறையில் கொடுத்து விடுவதாக உறுதியளித்தோம். ஆந்திர முதலமைச்சர் என்.டி. ராமராவ் அவர்களும் நான் ஐதராபாத்திலிருந்து திரும்பிச் சென்னை வருவதற்குள்ளாகவே அந்தப் பணிகளை மீண்டும் தொடங்கிவிட்டார் என்று கேள்விப்பட்டு மனமகிழ்ந்தேன். இப்போது கூட நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் துரை முருகனும் மற்றவர்களும், அமைச்சர் பொன்முடியும் சென்று ஆந்திராவில் நடைபெறும் தெலுங்கு-கங்கைத் திட்டப் பணிகளைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். எனவே இந்த ஆட்சி தொடர்ந்து நீடிக்கும். நீடித்தால் இன்னும் மூன்று ஆண்டுக் காலத்தில் சென்னை மாநகரத்திலே கிருஷ்ணா நதி நீரைச் சாப்பிடுகின்ற தொகுதிகளில் ஒன்றாகத் துறைமுகத் தொகுதியும் இருக்கும் என்பதை இங்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்றார்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

## விவசாயிகளுக்கு உதவும் அரசு

விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ. 16 என நிர்ணயிக் கப்பட்டது.

சிறுவிவசாயிகள் மின்சாரம் பெற ஆண்டுதோறும் சான்றிதழ் அளிக்கத் தேவையில்லை என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குத்தகைப் பாக்கி வழக்கிற்கு ஆளான 4 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களைக் காப்பாற்ற அரசு உத்தரவு பிறப்பித்தது.

தக்க நடவடிக்கைகள் எடுத்து சிறுவிவசாயிகளின் மீதுள்ள கடன் பளுவை அரசு குறைத்துள்ளது.

(அ) ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடன்கள், தவணை தவறிய கடன் தொகைகள் அனைத்தும், அறவே ரத்து செய்யப்பட்டன.

(ஆ) குறுகிய கால. மத்திய காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும், அறவே ரத்து செய்யப்பட்டது.

(இ) நீண்ட காலக் கடன்கள் மீது ஒத்தி வைக்கப்பட்டு உள்ள வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்பட்டது.

இச்சலுகைகளால் 9.36 இலட்சம் விவசாயிகள் பயன் அடைவர். இச்சலுகைகளின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய தொகை ரூ. 39 கோடி, கடந்த கால அரசு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்ட வேண்டிய ஈட்டுத் தொகை மேலும் ரூ. 67 கோடி பாக்கி. இவ்விரண்டையும் சேர்த்து மொத்தம் ரூ. 106 கோடியை நிதி நிலை நெருக்கடியான இந்த நேரத்தில் இவ்வரசு ஏற்றது.

தமிழ்நாட்டில் 3 வேளாண்மைக் கல்லூரிகள் உள்ளன. நான்காவதாக திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி-அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில் ரூ. 13.73 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆடுகள் வளர்ப்புப் பெருந்திட்டம் ஒன்று புதிதாகத் தொடங்கப்படும், செங்கை-அண்ணா, தென் ஆர்க்காடு. வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நீர்வளத்தை மேம்படுத்தி வேளாண்மையைப் பெருக்கிடப் பாசன மேம்பாட்டு நிலைக்குழு அமைக்கப்பட்டது.

குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் மத்திய காலக் கடனாக மாற்றப்படுகிறது. விளைச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி ரத்து செய்யப்படுகிறது.

கூட்டுறவுக் கடன் வசூலில் ஜப்தி கூடாது என அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஐந்து எச்.பி.யும் அதற்குக் குறைவாக எச்.பி.யும் கொண்ட பம்பு செட் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு இதுவரை ஆண்டொன்றிற்கு வசூலிக்கப்பட்டு வந்த மின் கட்டணம் ரூ. 75, ரூ. 50 ஆகக் குறைக்கப்பட்டது. இதனால் 9 இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடைகிறார்கள்.



# நிர்வாகத்தில் தூய்மை

நிர்வாகச் செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் பொருட்டு, சில வாரியங்கள் தவிர மற்றவை கலைக்கப்பட்டன. நடைபெற்று வரும் வாரியங்களுக்கு அரசு அதிகாரிகளே தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

சாராய சாம்ராஜ்யம் தரைமட்டமாக்கப்பட்டது. முறை கேடாக மது உற்பத்தியாளர்களுக்கு அளித்திருந்த சலுகைகளை அரசு நீக்கிவிட்டது.

பரம்பரை கிராம அதிகாரிகள் பதவி ஒழிப்பால் ஏற்பட்ட சீர் கேடுகளைக் களைய கிராம நிர்வாகச் சீரமைப்புக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போதுள்ள கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு எந்தவித பாதிப்புமில்லாமல் இப்பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

தொழில் வளர்ச்சி மேம்பாட்டுக்காக குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாநில திட்டக் குழு சீரமைக்கப்பட்டது. தொழில் வளர்ச்சிக்கு இது ஒரு சிந்தனைக் களஞ்சியம். இப்படிப்பட்ட மாநிலத் திட்டக் குழு இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன் முதலாக அமைக்கப்பட்டது.

மருத்துவமனைகள், மருத்துவக் கல்வி மேம்பாட்டுக்காக வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்து அறநிலையத் துறை மற்றும் ஆலயங்களின் நிர்வாகம் ஆகியவற்றைச் செம்மையுடன் நடத்துவது குறித்து ஆராய்வதற்காக இந்து அறநிலையத்துறை ஆக்கப் பணி ஆலோசனைக் குழுவை அரசு, 10-3-89-இல் அமைத்தது. அந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எஸ்.எஸ்.எல்.சி. +2 தேர்வுகளில் மாணவ மாணவியர் காப்பியடிப்பதைத் தடுக்கவும், வினாத்தாள் வழங்கப்படுவதில் முறை கேடுகள் நடந்தால் அவற்றைக் கண்டு பிடிக்கவும், காவல்துறை, கல்வித் துறை, வருவாய்த்துறை கலெக்டர் அலுவலகம், ஆகியவற்றைச் சேர்ந்த திடீர் சோதனைக் குழுக்கள் மொத்தம் 47 அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீராமச்சந்திராமருத்துவமனையை அரசு ஏற்றுக் கொண்டது. 'தாமரை' (TAMARAI) என்ற பெயரில் உயர் திறன்மிக்க தமிழ்நாடு அரசு மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது.

சென்னையில் பழைய மிருகக் காட்சிசாலைக்கு அருகில் உள்ள அரசுக்குச் சொந்தமான அல்லிக் குளம் என்று பெயர் பெற்ற 324 கிரவுண்ட் இடத்தை, கடந்த கால ஆட்சி தனிநபர் ஒருவருக்குத் தவறான ஒதுக்கீடு செய்திருந்தது.

### சாதனைக்குச் சான்று



மக்களாட்சி ஏற்பட்ட இந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்தவும், துரிதப்படுத்தவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் வரவேற்கின்றேன். கவர்னர் ஆட்சிக் காலத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மக்கள் வரவேற்று அப்பொழுது மக்கள் மத்தியிலே ஓர் அச்சமும் கூட இருந்தது. மக்களாட்சி வந்தால் மறுபடியும் பல ஊழல்கள் வந்து விடுமோ என்கின்ற ஒரு பயம். அதற்கு இடமில்லை என்பதைக் கலைஞர் அவர்கள் நிரூபித்துக் காட்டி வருகிறார்கள்.

''அதில் முக்கியமாக இந்த வாரியங்களையும், கழகங்களையும் அதிகாரப் பற்றலாதவர்கள் தலைமையில் இருந்ததை நீக்கி, அதிகாரிகளிடம் ஒப்படைத்தது மட்டுமில்லாமல், இந்த எண்ணிக்கையையும் குறைத்தது வரவேற்கத்தக்க ஒரு நடவடிக்கை.

மக்களுடைய மனதைப் பெரிதும் கவர்ந்த ஒரு நிகழ்ச்சி, இந்தச் சாராய ஊழலைச் சட்டசபையிலே வெளிப்படுத்தியது. எந்த அளவிற்கு நிர்வாகம் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது ஓரளவிற்கு இதன் மூலமாக வெளியாயிற்று. இதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

**முன்னாள் அமைச்சர்**
**திரு. சி. சுப்பிரமணியம்**

ஏறத்தாழ 40 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்து ஒரு கோடியே 75 இலட்சரூபாய் என்று குறைத்து மதிப்பிடப்பட்டுத் தனி நபர் ஒருவருக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டதைத் ரத்து நிறுத்தி மீண்டும் அந்த இடத்தை அரசு கைப்பற்றியது.

கடந்த காலத்தில் மதுவிலக்குக் குற்றங்களுக்கான தண்டனை கடுமையாக்கப்பட்டிருந்ததனால், 6 இலட்சத்துக்கு மேற்பட்ட வழக்குகள் முடிவடையாமல் தேங்கிக் கிடந்தன. இந்த ஆட்சியில், அதற்கான தண்டனை குறைக்கப்பட்டதனால் வழக்குகள் தேங்கிடாமல் தடுக்கப்பட்டன.

அரசு அலுவலகங்களில் நிர்வாகத் திறனையும் செயற்பாட்டையும், மேம்படுத்தும் வகையில் சுயமாகச் சிந்தித்து ஆலோசனை வழங்கும் அரசு ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கிடும் (1969-ஆம் ஆண்டு) திட்டத்தை நிரந்தரப்படுத்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியில் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துத் திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது. இப்போது அதில் ஒரு மாற்றம் செய்து, திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, 'திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்' என்றும், காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்ட செங்கல்பட்டு மாவட்டத்திற்குச் செங்கை-அண்ணா மாவட்டம் என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நெய்வேலி 2-வது சுரங்கத்திற்காக வீடு-நிலம் ஆகியவற்றை இழந்தவர்களுக்கு ஈட்டுத்தொகை, வேலை வாய்ப்பு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அடுக்குமாடிக் கட்டடங்கள் பலவற்றுக்கு அனுமதி அளித்ததிலும், வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்ததிலும் நடைபெற்ற ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அத்துமீறிப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள், வீடுகள் ஆகியவை கட்சிக் கண்ணோட்டமின்றி, மீட்கப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டன.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், இவர்களின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்தினை விரைவுபடுத்திட, தனியாக ஒருதுறை அமைக்கப்பட்டது.

### சாதனைக்குச் சான்று



ஆலயங்களுடைய நிர்வாகம், பூஜைகள், விழாக்கள் ஆகியவை சிறப்பாக நடைபெறவும், மேலும் செம்மைப்படுத்தவும், எந்தெந்த வகையில் நிர்வாக அமைப்பில் காரியங்கள் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், சமயச் சான்றோர்கள் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார். அதற்காக இந்து அறநிலையத்துறை ஆக்கப் பணி ஆலோசனைக் குழுவினையும் அமைத்துள்ளார். இது, வரவேற்கப்பட வேண்டிய, பாராட்டப்படவேண்டிய செயல்.

**திருமுருக கிருபானந்தவாரியார்**

மாமல்லபுரத்தில் அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ஆண்டு ஒன்றுக்கு ஒன்றரை இலட்ச ரூபாய் இலாபத்தோடு நடத்தப்பட்டு வந்த விடுதியை மிகக்குறைவாக மதிப்பீடு செய்து தனிநபர் ஒருவரிடம் முந்தைய அரசு ஒப்படைத்தது. அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து, ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அந்தச் சொத்துக்களை இந்த அரசு மீட்டது.

சென்னை-திருவான்மியூர் மாமல்லபுரம் கடற்கரைச் சாலையில், திருவிடந்தை என்ற இடத்தில் அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 299 ஏக்கர் நிலத்தைத் தனியார் ஒருவருக்கு ஒதுக்கீடு செய்து முந்தைய அரசு ஆணை பிறப்பித்தது. இந்த அரசு இப்போது அந்த ஆணையை ரத்து செய்து, ஆலயத்திற்குச் சொந்தமான அந்த நிலத்தை மீட்டுத் தந்தது.

திருவான்மியூர்-மாமல்லபுரம் சாலையில் உள்ள மற்றொரு இடம் முத்துக்காடு. அங்கே, 1975-இல் ஊனமுற்றவர்களுக்கு ஒரு தொழிற்சாலை அரசால் அமைக்கப்பட்டது. அங்கேயும் ரூ.70 இலட்சம் மதிப்புள்ள 50 ஏக்கர் நிலத்தைத் தனியார் ஒருவருக்கு மிகக்குறைந்த விலையில் விற்க, பிறப்பிக்கப்பட்ட ஆணையை ரத்து செய்து, நிலத்தை இந்த அரசு மீட்டது.

வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே, சுமார் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள 83 கிரவுண்ட் நிலம், தனியார் ஒருவருக்கு நட்சத்திர ஓட்டல் நடத்துவதற்கென, மிகக் குறைந்த விலையில் விற்பதற்கு, முந்தைய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. இந்த அரசு, அந்த ஆணையை ரத்து செய்து, அந்த இடத்தை மீட்டு உள்ளது.

சென்னையில் தோட்டக்கலைச் சங்கத்திடமிருந்து 317 கிரௌண்ட் நிலத்தை தமிழக அரசு மீட்டுக் கொண்டது. இங்கு ஒரு தோட்டக் கலை ஆராய்ச்சி மையமும், பொழுது போக்கு விளையாட்டு மையமும் உருவாக்கப்படும்.

நீலகிரி மற்றும் மலைப்பகுதிகளில் விவசாயத்திற்காகப் புதிதாக நிலம் ஒதுக்கீடு செய்வதற்குத் தடைவிதித்து அங்குள்ள மண்வளத்தையும், நீர்வளத்தையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள ஆக்கிரமிப்புகள் உயர்மட்டக் குழுவால் மறு ஆய்வு செய்யப்படும்.

சான்றோர்கள்-அறிஞர்கள்-கவிஞர்கள்-நிபுணர்கள் எனப் பல்வேறு பெருமக்கள் இடம் பெற்று அரசுக்கு ஆலோசனை கூறும் வகையில் விளங்கிய சட்டமன்ற மேலவை முந்தைய அரசினால் கலைக்கப்பட்டது. அதனை மீண்டும் அமைப்பதற்குரிய மசோதாவை இந்த அரசு 20-2-89 அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றியது.

ஸ்கூட்டர், மொபெட் போன்ற இரு சக்கர வாகனங்களில் பயணம் செய்பவர்களை கட்டாயமாக தலைக் கவசம் அணிய வேண்டும் என்றிருந்த நடைமுறையை மாற்றி, அவர்கள் விரும்பினால் அணிந்து செல்லலாம் என்ற விதிமுறையை அரசு ஏற்படுத்தியது.



# சாதனை படைக்கும் சமூக நலத் திட்டங்கள்

**சை**க்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்த நிதி உதவி, வட்டிச் சலுகை அளிக்கப்பட்டது.

மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, கார் வாங்கி ஓட்டுநருக்குக் கடன் உதவி, மானியம், வட்டிச் சலுகை அளிக்கப்படுகிறது.

83 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ஐந்து முறை ஐந்து கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது.

தைப்பொங்கல் திருநாளில் ஆதரவற்ற முதியோருக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படும்.

ஊனமுற்றோர், கைம்பெண் ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட உதவித்தொகை ரூ. 35-லிருந்து ரூ. 50-ஆக உயர்த்தப்பட்டது.

குடும்பத் தலைவர்களை இழந்த ஏழைக் குடும்பங்களுக்கு ரூ. 2,000 நிதி உதவி.

விபத்தில் இறக்கும் ரிக்ஷா, ஆட்டோ, டாக்சி, லாரி, பேருந்து ஓட்டுநர், கட்டடத் தொழிலாளர் ஆகியோர் குடும்பங்களுக்கு ரூ. 10,000 நிதியுதவி.

உடல் ஊனமுற்றவர்களால் பெருமளவில் உபயோகப்படுத்தப்படும் தாங்கிகள் (Crutches), சக்கர நாற்காலிகள், மோட்டார் பொருத்தப்பட்ட வண்டிகள், மோட்டார் பொருத்தப்படாத மூன்று சக்கர வண்டிகள், பலவித ஊன்றுகோல்கள் போன்ற சாதனங்கள் அனைத்தின் மீதான வரிகள் பணித்தேய அடிப்படையில் நீக்கப்பட்டன.

அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு தமிழக அரசின் சார்பாக முன்னர் ஆண்டுதோறும் மானியத்தொகை ரூ. 9 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு முதல் அந்தத் தொகை ரூ. 12 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.

தொழுநோயர் இரவலர் இல்லங்களில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 4.50 செலவிடப்படுவது ரூ. 5.50 ஆக உயர்த்தப்பட்டது. இதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 10 இல்லங்களுக்கும் சேர்ந்து ஆண்டொன்றிற்கு ரூ. 15 இலட்சம் அரசுக்கு அதிகச் செலவு ஏற்படுகிறது.

ஆதரவற்ற முதியோருக்கு அரசு வழங்கி வந்த உதவித் தொகை ரூ. 35-லிருந்து ரூ. 50-ஆக 1-5-89 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. உதவி பெறும் முதியோர் எண்ணிக்கைக்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த வரம்பு தற்போது முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. அதனால், தகுதியுடைய அனைவரும் உதவி பெறலாம்.

சங்கிலியில் கோக்கப்படாத தங்கத் தாலிக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

### சத்துணவு

சத்துணவுத் திட்டம் சீராக்கப்பட்டு, 85 இலட்சம் குழந்தைகளுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை முட்டை வழங்கப்படுகிறது. வாரந்தோறும் முட்டை வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சத்துணவுத் திட்ட ஊழியர்களை நிரந்தரமாக ஆக்கி, பணிப்பாதுகாப்பு தரப்பட்டுள்ளது.

90 ஆயிரம் சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு முழு ஊதியத்துடன் மூன்று மாதம் பேறு கால விடுப்பு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.



## TNPSC Advt No 56

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு துறைமுகப் பணியில் துறைமுக அலுவலர் பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (இட ஒதுக்கீடு விதி இப்பதவிக்குப் பொருந்தாது).

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ. 5100-150-5700

**வயது:** 40க்குக் குறைவாக

**தகுதிகள்:**

(i) வெளிநாடுகள் செல்லும் கப்பலில் மாஸ்டராக இருப்பதற்கான காமன்வெல்த்
நாடுகள் முழுவதும் செல்லுபடியாகும் (Valid) திறமைச் சான்றிதழ்பெற்று முதன்மை
அலுவலராக (Chief Officer) பணியாற்றியிருக்க வேண்டும் மற்றும்|(ii) இந்திய அரசாங்கத்தின்
மெர்க்கன்டைல் மரைன் துறையினரால் (Mercantile Marine Department) வழங்கப்படும்
'Certificate of sight test in form vision only' பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு:** துறைமுக அலுவலருக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்படும்:

(i) வாடகை இல்லாத வீட்டு வசதி (ii) சொந்தமாகக் கப்பல்களைச் சரிபார்த்து (Survey of
vessels) அதற்கான ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (iii) எந்த இந்தியக் கப்பல்
கம்பெனிகளின் கப்பல்களிலும் காலமுறைப்படி வேறு வேலைக்காக (on deputation)
கடலில் சென்று வரலாம். அப்படிச் செல்லும்போது அவர்களின் தகுதிக்குப் பொருந்து
கிற கடல் ஊதியத்தை அந்தக் கப்பல் கம்பெனிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**இறுதி நாள்: 27.11.1989 அன்று மாலை 5.30 மணி**
**வயது வரம்பு: 1.7.1989 அன்றுள்ளபடி**

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர்
மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள்,
முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக
உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில
அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து
அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்
வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர்,
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு
எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது
ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு
எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2
அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.10.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து
ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை தபால் அலுவலகத்தில்
செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank
of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாள
ருக்கு வழங்கக்கூடிய 1.10.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-6
ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் Code No.0800ல் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்
கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Account Payee Demand Draft) உடன் சுய
விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள்
பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்
பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்
படமாட்டா.

DIPR/2180/MS/89/MCS



# மகளிர் நலம் காக்கும் மகத்தான திட்டங்கள்

தமிழ்நாட்டில் பரம்பரைச் சொத்தில் ஆண்களுக்கு உள்ளது போலவே, பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கச் சட்டம் இயற்றப்பட்டது.

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் இத்தகைய சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு அலுவலகங்கள், அரசுச் சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்களில் ஏற்படும் வேலை வாய்ப்புகளில் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

முதல் இரண்டு வகுப்புகளுக்கு ஆசிரியராகப் பெண்களே நியமனம். படிப்படியாக ஐந்தாம் வகுப்பு வரை பெண்களையே ஆசிரியர்களாக நியமனம் செய்ய, கொள்கை அளவில் முடிவு.

எட்டாம் வகுப்புவரை படித்த ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு ரூ.5,000 நிதி உதவி, ஐந்தாம் வகுப்பு வரை படித்த பழங்குடிப் பெண்களுக்கும் இந்த நிதி உதவி உண்டு.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ. 200 நிதியுதவி.

ஆட்டோ ரிக்ஷா ஓட்ட, பெண்களுக்கு உரிமம். கடன் உதவி வழங்கப்படுகிறது.

200 பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்குவதற்கு 13 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், 10 பெண்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா வாங்குவதற்கு 60 ஆயிரம் ரூபாயும் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழகத்தில் பெண்களுக்கெனத் தனியாக தொழிற் பயிற்சி நிலையங்கள் 5 இடங்களில் உள்ளன. மேலும் 5 இடங்களில் ரூ. 10 கோடியே 50 இலட்சம் செலவில் பெண்களுக்கென்று தனியாக தொழிற் பயிற்சி (ஐ.டி.ஐ.) நிலையங்கள் அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.




இதுதவிர கரும்புச்சாறு பிழியும் இயந்திரம், ஐஸ்கிரீம் வண்டி போன்றவை வாங்கவும், பிளாஸ்டிக் பாய் முடைதல் போன்றவற்றுக்காகவும் இந்த ஆண்டு ரூ. 33 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,500 பெண்கள் இந்த ஆண்டு பலன் அடைவார்கள்.

தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கென ரூ. 46 கோடி அளவில் பெரிய திட்டம் ஒன்றை, 45 ஆயிரம் பெண்கள் பயன் பெறத்தக்க அளவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாடு வாரியம் வகுத்துள்ளது.

கதர் கிராமத்தொழில் வாரியம் மூலமாக நடப்பு ஆண்டின் தொடக்கத்தில் மட்டும் 3.31 இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டுள்ளது. 1.25 இலட்சம் மலைவாழ், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வேலை தரப்பட்டுள்ளது.

## சாதனைக்குச் சான்று

### "அரசின் அறிவிப்புகளை வரவேற்றுப் பாராட்டுகிறேன்!"

-திருமதி சரோஜினி வரதப்பன்



அரசுத் துறைக்கான பணிகளில் வரும் வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு முப்பது சதவீதம் இடம் தரப்படும் என்கிற தமிழ்நாடு அரசின் அறிவிப்பை நான் மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

எந்தச் சட்டமானாலும் திட்டமானாலும் அறிவிப்பதோடு இருந்துவிடாமல், அதை நிறைவேற்றத்தக்க வழிவகைகளிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். (Perspective Plan) என்பது மேலே இருப்பதைக் கீழே கொண்டுவருவதல்ல; கீழே இருப்பதை மேலே உயரச்செய்வதுதான். இதையெல்லாம் மனதில்கொண்டு தமிழக அரசு அந்த அடிப்படையில் இதை அறிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

பிதுரார்ஜித சொத்துக்களில் பெண்களுக்கு உரிமை அளிக்கப்படும் என்றும், ஏழை-நடுத்தரக் குடும்பப் பெண்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படும் என்றும், ஏழை எளிய கர்ப்பிணிப்பெண்களுக்கு ஐம்பது ரூபாய் உதவித்தொகை கொடுக்கப்படும் என்றும், ஏழைத் தாய்மார்களுக்குப் பண்டிகை நாட்களில் இலவசச் சேலை தரப்படும் என்றும், வரவு செலவுத் திட்டத்தில் முதல் அமைச்சர் அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்க நல்ல திட்டங்களாகும்.

TNPSC Advt No 58

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உதவிப் பதிப்பாசிரியர் (Assistant Editor) பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பகிரங்கப் போட்டி: 1

***சம்பளம்:*** *மாதம் ஒன்றுக்கு ரூ.1640-60-2600-75-2900*

***வயது:*** *35 வயதிற்குக் குறைவாக*

***தகுதி:*** *பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் ஒரு முதுநிலைப் பட்டம் முதல் வகுப்பில் வரலாறு அல்லது சமூகவியல் அல்லது அரசியல் அல்லது பொது நிர்வாகம் அல்லது மனித இயல் அல்லது புவிஇயல் அல்லது பொருளாதாரம் அல்லது வணிகவியல் அல்லது பன்னாட்டுச் சட்டம் அல்லது அரசியல் அமைப்புச் சட்டம் அல்லது நூலக அறிவியல் அல்லது புள்ளிஇயல் அல்லது பத்திரிக்கையியல்அல்லது அயல்நாட்டுப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட மேற்கண்ட பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சமமான முதுநிலைப் பட்டம்.*

***இறுதி நாள் : 13.11.1989 அன்று மாலை 5.30 மணி***

***வயது வரம்பு: 1.7.89 அன்றுள்ளபடி***

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், 40 வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியில் இருக்கின்ற தற்காலிக மாநில அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு சென்னை-2, அண்ணா சாலை அஞ்சல் நிலையத்தில் வழங்கக்கூடிய 1.9.89 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2, அவர்களுக்காகப் பெறப்பட்ட, ரூபாய் 10/-க்கான கேட்புக் காசோலை (A/c Payee Demand Draft) பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்கு, சென்னை-6 (குறியீட்டு எண்.0800)க்கு செலுத்தத் தக்கதாகவும், சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

DIPR/2126/MS/89



# அரசு ஊழியர்களுக்கு அடுக்கடுக்காக நன்மைகள்

ஐந்தாவது ஊதியக்குழு அறிக்கை கிடைத்த மூன்று வாரங்களுக்குள் அதன் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டன. புதிய ஊதிய விகிதம் 1988 ஜூன் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அரசு ரூ.437 கோடி அதிகம் செலவிடுகிறது. ஊதியக் குழு பரிந்துரைத்ததற்கும் அதிகமாகவே 206 பிரிவுகளுக்கு அடிப்படை ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றைத் தமிழக அரசு வழங்கியுள்ளது. குறைந்த பட்ச ஊதிய உயர்வு ரூ.100 லிருந்து ரூ. 150-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 11 இலட்சம் அரசு ஊழியர்களுக்கு. அரசு உதவியுள்ளது.

பொறியியற் கல்லூரிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அனைத்திந்தியத் தொழிற் கல்விக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மரணமடையும் அரசு ஊழியர் குடும்பத்திற்கு, குடும்ப நல நிதியாக வழங்கப்பட்டு வந்த ரூ. 20,000 என்பது ரூ. 40,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஏற்கெனவே அரசு அலுவலாளர்கள், ஆசிரியர்கள் மீது போடப்பட்ட 90 வழக்குகள் இந்த அரசு பொறுப்பேற்ற பின் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

அரசு அலுவலர்கள் வீடு கட்டிக் கொள்ளவென நிதிநிலை அறிக்கையில், அறிவிக்கப்பட்ட ரூ. 13 கோடி உயர்த்தப்பட்டு தற்போது ரூ. 28 கோடி என அறிவிக்கப்பட்டு உள்ளது.

1982-இல் நடந்த என்.ஜி.ஓ. போராட்டத்தின் போது கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டு, வேலை நீக்கம் செய்யப்பட்ட என்.ஜி.ஓ. யூனியன் அமைப்புச் செயலாளர் இரா. நவநீதகிருஷ்ணனுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட்டதன் மூலம் ஏழாண்டுக் காலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

அரசு ஊழியரின் மகள், மகன் ஆகியோர் திருமணத்திற்காக வழங்கப்பட்டு வந்த திருமண முன்பணத் தொகை ரூ. 3,000, ரூ. 1,500 முறையே ரூ. 5,000, ரூ. 3,000 என உயர்த்தப்பட்டது.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர் 2 இலட்சம் பேருக்கு ஓய்வு ஊதியம் ரூ. 245-லிருந்து ரூ. 375 ஆக உயர்த்தப்பட்டது.

பயிற்சி டாக்டர்களின் மாத ஊதியம் ரூ. 750-லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன் அரசு ஊழியர்களின் ஊதியம், ஊதியக் குழுவினால் பரிசீலிக்கப்படும்போது, பயிற்சி மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் உதவித்தொகை குறித்தும் பரிசீலிக்கப்படும் என உறுதி வழங்கப்பட்டு உள்ளது.

1988 ஜூன்-ஜூலைத் திங்களில் நடந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தின் விளைவாக அவர்கள் மீது எடுக்கப்பட்ட அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளையும் அரசு விலக்கிக் கொண்டது.

ஊழியர்களைப் பாதிக்கும் வகையில் வழங்கப்பட்ட தண்டனை ஆணைகள் ரத்து செய்யப்பட்டன.

தாற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை அளிக்கப்பட்டது. அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த காலத்தை விடுப்பாகக் கருதிட ஆணையிடப்பட்டது.

ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்குப் பொங்கல் பரிசு ரூ.100 வழங்க ஆணையிடப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணம் (திருப்பிச் செலுத்த வேண்டியது) ரூ.100 லிருந்து 300 ஆக உயர்த்தப்பட்டது.

சட்டப் பேரவையின் பொன் விழாவினையொட்டி சட்டப் பேரவையில் முறைப்படுத்தப்பட்ட அலுவலர்களுக்கு ரூ. 100, தற்காலிக அலுவலர்களுக்கு ரூ. 50 பரிசாக அளிக்கப்பட்டது.

பணிக் காலத்தில் இறக்கும் கூட்டுறவு ஊழியர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த ரூ. 12,000, தற்போது ரூ. 20,000 என உயர்த்தப்பட்டது.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளைச் சேர்ந்த 12,074 தொழிலாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் போனசாக ரூ.154 இலட்சம், கருணைக் கொடையாக ரூ. 78 இலட்சம், சிறப்பு ஊக்குவிப்புத் தொகையாக ரூ. 12 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 244 இலட்சம், தீபாவளிப் பண்டிகையையொட்டி வழங்கப்பட்டது.

*ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கையை, குழுவின் தலைவர் நீதிபதி ஜி. ராமானுஜம் அவர்கள் 16.5.89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் அளித்தல்.*



TNPSC விளம்பர எண். 59

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு சட்டக் கல்விப்பணியில் சட்டக் கல்லூரிகளில் புகுமுக சட்ட வகுப்பு இளநிலைப் பேராசிரியர் பதவி (Junior Professor of Pre-Law Course) ஒன்றுக்கு அரசியல் சார்ந்த அறிவியல் பாடத்தில் (Political Science) நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய ஆதி திராவிடர் வகுப்பினர் மற்றும் பழங்குடி வகுப்பினரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.3000-100-3500-125-5000

**வயது:** வயது வரம்பு இல்லை

**தகுதி:**

(அ) அரசியல் சார்ந்த அறிவியல் பாடத்தில் முதுநிலைப் பட்டத்தில் (M.A Degree) அல்லது சமமான பட்டத்தில் குறைந்த பட்சம் இரண்டாம் வகுப்பில் 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) எம்.எல். பட்டத்தில் அல்லது சமமான பட்டத்தில் குறைந்த பட்சம் இரண்டாம் வகுப்பில் 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

(இ) வழக்கறிஞர் மன்றத்தில் (Bar Council) பதிவு செய்திருக்க வேண்டும்.

**இறுதி நாள்: 13.11.89 அன்று மாலை 5.30 மணி**

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மற்றும் ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், 40 வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியில் இருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்[illegible]ணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' [illegible]ட்டுள்ளன.

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு[illegible]விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 [illegible]அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு இருக்க வேண்டும், கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/2132/எம்எஸ்/89/ஏடிடி




சாதனைக்குச் சான்று

# மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு ஒரு வரப்பிரசாதம்

தமிழகத்தில் உள்ள மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் இருபது சதவிகித தனி ஒதுக்கீட்டினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 13-3-'89 அன்று அறிவித்தார்கள்.

இதன் தொடர்பாக மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினரின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்தினை விரைவுபடுத்திட 'மிகவும் பிற்படுத்தப் பட்டோர்-சீர்மரபினர் துறை' என, தனித் துறை ஒன்றினை தமிழக அரசு ஏற்படுத்தியது.

இத்துறையின் இயக்குநராக, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த திரு. இ. தசரதன், இ.ஆ.ப. அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இட ஒதுக்கீட்டு அறிவிப்பினை வன்னியர் சமூகத்தார் உள்ளிட்ட பல்வேறு வகுப்பினரும் அமைப்புகளும் வரவேற்றுப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**திரு. வன்னிய அடிகளார்:**

''இப்போழுது வன்னியர்கள் சார்ந்திருக்கின்ற மிகவும் பிற்பட்ட தொகுப்பிற்கு 20 சதவிகித ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறது. அந்த 20 சதவிகித ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு 107 ஜாதிகள் அதிலே சேர்க்கப் பட்டிருந்தாலும், வன்னியர்தான் அதிலே மிகவும் பலமான மக்கள் தொகை அதிகமான சமூகம்; ஆகவே அதிலே கிடைக்கக்கூடிய 20 சதவிகித ஒதுக்கீட்டை, ஒதுக்கீட்டின் பலன்களை வன்னியர் சமூகம் பெரும்பான்மையாகப் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.

''தனியாக வன்னியர்களுக்கென்று ஒதுக்கீடு செய்வதைவிட 2, 3 சதவிகிதங்கள் அதிகமாகவே இதிலே கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. ஆகவே இந்தத் திட்டம் வன்னியர்களைப் பொறுத்தவரையிலும் மிகவும் லாபகரமான திட்டம். அவர்கள் இதைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். அதேபோல மற்ற பிற்பட்ட சமுதாய மக்களுக்கும், அதேபோல சீர்மரபினருக்கும் இது நன்மை பயக்கக்கூடிய திட்டம். ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற பலன்களை நாம் அனுபவிப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும்.



திரு. வன்னிய அடிகளார்

**திரு. ஏ.என். சட்டநாதன்:**

''இந்தப் புதிய திட்டம், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும். சீர் மரபினருக்கும் அதிலும் குறிப்பாக வன்னிய சமூகத்தினருக்கு நிச்சயமாகப் பலன் அளிக்கும்.''

**திரு. ஜே. ஏ. அம்பாசங்கர்:**

''பிற்படுத்தப்பட்டோரில் மிகப் பெரும்பான்மையாக உள்ள வன்னியர்கள் இச்சலுகையினால் பெரிதும் பயன் பெறுவார்கள்.

''தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை இழந்துவிட்டுத் தவிப்பவர்களைப் பற்றி வரலாறு நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

''இப்பொழுது வழங்கப்பட்டு உள்ள இந்தச் சலுகையை வன்னியர்கள் ஏற்றுக்கொள்ளத் தவறுவார்களேயானால் ஒரு பொன்னான சந்தர்ப்பத்தை வன்னியர்கள் தவறவிட்டவர்கள் என்று எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் எழுதமாட்டார்களா? எனவே, இதற்கு வன்னியர்கள் தங்களது முழுமையான ஒத்துழைப்பைத் தந்திட வேண்டும்.''

**திரு. எம்.ஏ. மாணிக்கவேலர்:**

''வன்னியர் உட்பட மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர்மரபினருக்கும் இருபது சதவிகிதம் இந்த அரசின் மூலமாக பள்ளி, கல்லூரிகளில் படிப்பதற்கும், அரசாங்க

வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்கும் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த இருபது சதவிகித ஒதுக்கீட்டில் குறிக்கப்பட்டுள்ள 39 சாதிகளில் வன்னியர்கள்தான் மக்கட்தொகை அடிப்படையில் பெரும்பாலான ஜனத்தொகை உடையவர்கள்.

எனவே, இந்த இருபது சதவிகித ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு அதிகமாக ஜனத்தொகையின் அடிப்படையில் பார்க்கும்போது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் குறிப்பாக தொழிற் கல்லூரிகளில் சேர்வதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும் வேலைகளில் சேர்வதற்கும் அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இதை வரவேற்கிறேன். இது அமலுக்கு வரவேண்டும்.''

**திரு. பொன். பரமகுரு:**

''39 மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும், 68 சீர்மரபினருக்கும் சேர்த்து 107 சாதியினருக்குக் கல்வி, வேலைவாய்ப்பில் 20 சதவிகிதம் தனி ஒதுக்கீட்டையும், மீதமுள்ள 95 பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீட்டையும் தமிழக அரசு உறுதி செய்துள்ளது. மேலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கெனத் தனித்துறை உருவாக்கி ஆணை பிறப்பித்துள்ளது.

சீரிய முறையில் மேற்கண்ட ஆணையைப் பிறப்பித்துள்ள தமிழக முதல்வருக்கும், தமிழக அரசுக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள். உளமார்ந்த நன்றி''.

## சமூக நீதி

புதிய இட ஒதுக்கீட்டுக் கொள்கை, வன்னியர்கள் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமுதாய மாணவர்களின் எண்ணிக்கையை தொழிற் கல்லூரிகளில் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகிய பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசப் பட்டப் படிப்புக்கான வருமான உச்ச வரம்பு முற்றிலும் நீக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் ஆகியோருக்காக ஒதுக்கப்பட்டு காலியாக உள்ள இடங்களை நிரப்பிட முனைப்புத் திட்டம்; தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் அச்சமுதாயத்திலிருந்து தகுதியுடையோர் இல்லை என்ற நிலையில் இவ்விடங்களில் முற்பட்ட வகுப்பினரை நியமிக்கும் போக்குக்கு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.

### அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையால் மிகவும் பிற்படுத்தப்பட்ட இன மாணவர்கள் பெற்ற பலன்!

**மருத்துவக் கல்லூரியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் சேர்க்கை**

| கடந்த ஆண்டு (1988-89) | இந்த ஆண்டு (1989-90) |
|---|---|
| 68 | 187 |

**இவர்களில் வன்னிய மாணவர்கள்**

| கடந்த ஆண்டு | இந்த ஆண்டு |
|---|---|
| 26 | 75 |

**பொறியியல் (இஞ்சினீயரிங்) கல்லூரியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் சேர்க்கை**

| கடந்த ஆண்டு (1988-89) | இந்த ஆண்டு (1989-90) |
|---|---|
| 354 | 685 |

**இவர்களில் வன்னிய மாணவர்கள்**

| கடந்த ஆண்டு | இந்த ஆண்டு |
|---|---|
| 109 | 292 |



# வளரும் தருமபுரி மாவட்டம்

அரசின் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களாலும், வளர்ச்சிப் பணிகளாலும் தருமபுரி மாவட்டம் முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோட்டு வருகிறது.

பட்டு உற்பத்தியில் இம்மாவட்டம் தமிழகத்திலேயே முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. பால் உற்பத்தியிலும், மாமபழ உற்பத்தியிலும் தன்னிறைவு பெற்று விளங்குகிறது.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதி ஆண்டிற்கு ரூ.719.928 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 3528 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 3412 வேலைகள் துவக்கப்பட்டுள்ளன. ரூ.205.105 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 12.353 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் இம்மாவட்டத்திற்கு ரூ. 209.124 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 8148 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதுவரையில் 5726 கடன் மனுக்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு 836 நபர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன. இதற்காக ரூ. 14.63 இலட்சம் மானியத் தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் 5 குழுக்கள் ஏற்படுத்த ரூ. 1.62 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு வரை 538 குழுக்கள் அமைக்கப்பட்டு, 9525 கிராமப்புற மகளிர் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 256.669 இலட்சம் மானியத் தொகை பயன்படுத்தப்பட்டு உள்ளது. கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், நடப்பாண்டிற்கு 560 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது 167 இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

வேளாண்மைப் பெருக்குத் திட்டத்தின் கீழ் சிறுபாசனத்திற்காக நடப்பு ஆண்டுக்கு ரூ. 26.873 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் 153 எக்டேர் நிலம் மேம்படுத்தப்பட்டு, 189 பேர்கள் பயனடைய உள்ளனர். இந்த ஒதுக்கீட்டில் இதுவரை ரூ. 5.891 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் இந்தத் திட்டத்தில் மேம்பாட்டுப் பணிக்காக, நடப்பு ஆண்டில் ரூ. 7,393 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதனால் 45.34 எக்டேர் நிலம் மேம்படுத்தப்பட்டு 56 பேர்கள் பயன் பெறுகின்றனர். இதுவரை ரூ. 0.507 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 1382 குழந்தைகள் காப்பகங்களும் 2098 சத்துணவு மையங்களும் இயங்கி வருகின்றன. 15-1-83 முதல் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு 10,889 ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கும் உணவு வழங்கப்படுகிறது. பள்ளி மையங்களில் 3,18,502 மாணவர்களும், குழந்தைகள் காப்பகங்களில் 9 5,6 41 குழந்தைகளும் பயன்பெறுகின்றனர். மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகள் நல மையங்களிலும் இரண்டு வயதுக்குட்பட்ட 30 குழந்தைகளுக்கும், 20 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஆக மொத்தம் மையமொன்றிற்கு 50 நபர்கள் வீதம் 1,282 மையங்களில், 38,460 குழந்தைகளும், 23,640 தாய்மார்களும் சத்துருண்டை அன்றாடம் பெற்றுப் பயன் அடைகின்றனர். மாவட்டத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 3-6-89 முதல் இலவச முட்டை வழங்கும் திட்டம் துவங்கப்பட்டு 1,382 குழந்தை நலக்காப்பகங்களில் 88,484 குழந்தைகளுக்கும், 2,098 பள்ளிகளில் 2,67,729 மாணவர்களுக்கும் முட்டைகள் வழங்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் தளி ஊராட்சி ஒன்றியத்தில் 100 குழந்தை நலக் காப்பகங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கி வருகின்றன. நடப்பு ஆண்டில் ஓசூர் மற்றும் மொரப்பூர் ஆகிய ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படவிருக்கிறது.

சாண எரிவாயுத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில். சென்ற ஆண்டு அரசால் அளிக்கப்பட்ட இலக்கு 500க்கு 532 சாண எரிவாயுக் கலன்கள் கட்டி முடிக்கப்பட்டன. நடப்பு ஆண்டுக்கான இலக்கு 600க்கு நாளது வரை 139 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 91 கலன்கள் முன்னேற்றத்தில் உள்ளன.

நடப்பு ஆண்டு இம்மாவட்டத்திற்கு 4,500 புகையில்லா அடுப்புகள் அமைக்க நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை 3,825 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் செயல்படுத்த தருமபுரி மாவட்டத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ.183 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் நில நீர் மேம்பாடு, காடு வளர்ப்பு, பழச்செடிகள் வளர்ப்பு மற்றும் பசும்புல் தீவன வளர்ப்பு போன்ற பணிகள் 6147 எக்டேர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனஇத்திட்டத்தில் இதுவரை 48.02 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் காவேரிப்பட்டினம், கிருட்டிண

# முன்னேற்ற பாதையில் வெற்றிநடை போடும் டான்சி



டான்சி, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், பல்வேறு தொழிற்துறை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள 47 தொழிற் கூடங்கள் மற்றும் 7 விற்பனை நிலையங்களைக் கொண்ட டான்சியின் தொகுப்பு, நாடு முழுவதும் நன்கு அறிமுகமாகியுள்ளது.

கடந்த ஆண்டில் டான்சியின் சாதனைகளைக் கணக்கில் கொண்டால், இன்று டான்சி முன்னேற்றப் பாதையில் வெற்றிநடை போடும் நிறுவனமாக மாறி வருகிறது. தயாரிப்பு கூடங்களில் உற்பத்தி அதிகரித்துள்ளது. விற்பனை நிலையங்களில் விற்பனை அதிகரித்துள்ளது.

சென்ற விழாக்காலத்தில், எஃகு மற்றும் மரச்சாதனங்களை டான்சி ரூ. 1 கோடிக்கும் அதிகமாக விற்பனை செய்து அரிய சாதனை புரிந்துள்ளது.

டான்சியின் தரமிகு தயாரிப்புகள் :
* தரமேன்மையான எஃகு மற்றும் மரச்சாதனங்கள் (ஃபர்னிச்சர், * ஸ்பிரிட் சார்பு பொருட்கள்
* ஆழ்த்துளை கைப்பம்புகள் * காஸ்கெட் ஷெல்லாக் காம்பௌண்ட் இயந்திரங்கள் தேவைக்கு
* கனரக கட்டுமானங்கள் * இயந்திரக் கருவிகள்
* விண்வெளி ஆராய்ச்சி மற்றும் இராணுவத் தொழில்களுக்கான உபகரணங்கள் * சூரியசக்தி மூலம் சுடுநீர் தயாரிப்பு சாதனங்கள் * கருவிகள் மற்றும் வார்ப்புகள் * அழுத்தப்பட்ட வார்ப்பட உறுப்புகள்.

அதிக வளர்ச்சி - பன்முனை இயக்கங்கள், உயர்தர தயாரிப்புகள் - ஆம் இவைதான் டான்சியின் உயிர்நாடி - இவற்றின் பிரதிபலிப்புத்தான் தேசிய அளவில் அவர்களது சேவையும், நுகர்வோர் மனநிறைவும்.



**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
(விற்பனைப் பகுதி)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி : 862161 தந்தி : TANSI
டெலக்ஸ் : 41-7496 TNSI

டான்சி விற்பனை நிலையங்கள் : * 1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014. தொலைபேசி : 862273 * 681, அண்ணா சாலை, சென்னை-600 006. தொலைபேசி : 860816 * 23-27, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், மதுரை-625 002. தொலைபேசி : 43832 * 20-23, நேரு ஸ்டேடியம், வ.உ.சி. பூங்கா, கோயம்புத்தூர்-641 018. தொலைபேசி : 30755 * 28-ஏ, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620 002. தொலைபேசி : 26983 * 13-15, முனிசிபல் ஷாப்பிங் காம்பிளெக்ஸ், நெடுஞ்சாலை, திருநெல்வேலி-627 001. தொலைபேசி : 23880 * சாரங்கபாணி கிழக்கு சந்நிதி தெரு, கும்பகோணம்-612 001. தொலைபேசி : 21605.

**டான்சி - நாட்டுக்கான சேவையில் 24வது ஆண்டு.**

DIPR /MS/89 (R)




# தரத்திற்குப் பெயர் டான்சி

"டான்சி" என்ற பெயரில் நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமாகியிருக்கும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், பல வகைப் பொருட்கள் உற்பத்தியை மேற்கொண்டுள்ள அரசு சார்பு நிறுவனமாகும். 47 உற்பத்தித் தொழிற் கூடங்களும் 7 விற்பனை நிலையங்களும் டான்சி தன்னகத்தே கொண்டுள்ளது.

டான்சியின் உற்பத்தி 1965-66-ஆம் ஆண்டில் ரூ. 390 இலட்சமாக இருந்து, படிப்படியாக அதிகரித்து, 1988-89-ஆம் ஆண்டில் ரூ. 3106 இலட்சத்திற்கு உயர்ந்து உள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் டான்சியின் விற்பனை இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலே குறிப்பிடப்பட்ட உற்பத்திப் பொருட்கள் மட்டுமில்லாமல், சமீபத்தில், பல மாநிலங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற பணி ஆணைகளின்படி தேர்தலுக்குத் தேவைப்படும் வாக்குப் பெட்டிகளும், மற்றும் கரும்பலகை வழங்கும் திட்டத்தின் கீழ், கல்வி பயிற்றுவிப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்களும் டான்சி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன.

பெங்களூரிலுள்ள இந்தியன் தொலைபேசி நிறுவனத்திற்காக, மற்ற போட்டியாளர்களைவிட மிக விரைவாக, 100 மீட்டர் வரையில் உயரம் கொண்ட 31 நுண் அலைக் கோபுரங்களை வடிவமைத்து இராஜஸ்தான் மாநிலத்தின் தொலைப் பகுதிகளில், கடினமான சூழ்நிலையில் நிறுவிக் கொடுத்து சாதனை புரிந்துள்ளது.

சமீபகாலத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கடத்திக் கோபுரங்கள், தமிழ்நாட்டின் வைகை, பைகாரா மற்றும் பவானி நீர் மின் விசை உற்பத்தித் திட்டங்களுக்காகக் கனரகக் கட்டுமானங்கள், தமிழ்நாட்டில் சிமெண்ட் ஆலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் கட்டுமானக் கட்டமைப்புகள் வழங்குதல் போன்ற பணிகள் டான்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அதன் "பி.எஸ்.எல்.வி." விண்வெளித் திட்டத்திற்காக "ஸ்ரவுடு அசம்பௌி" மற்றும் "வெப்பத் தகடுகளை"யும் ஏற்கெனவே டான்சி வழங்கியுள்ளது. கனரகக் கட்டுமானம் மற்றும் வான்வெளிக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் உற்பத்தியை மேற்கொள்ள, திருச்சியிலுள்ள டான்சி கட்டுமானத் தொழிற்கூடம் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

சமீபத்தில் ஏற்பட்ட வறட்சியினைச் சமாளிப்பதற்கு மேற்கொண்ட பெரும் முயற்சியில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்திற்குக் குறிப்பிட்ட காலத்தில் கைப்பம்புகளை வழங்கியதன் மூலம் டான்சி அரிய சேவை செய்துள்ளது.

கிண்டியிலுள்ள டான்சியின் துணை நிறுவனமாகிய தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனம், தனது உற்பத்தி வழியில் விரிவாக்கம் காண எடுத்த முயற்சியின் விளைவாக, இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் கோட்பாடுகளுக்கு உட்பட்டுச் சான்றிதழைப் பெற்று, "டான்சி பளேம்" என்ற பெயருடன் எல்.பி.ஜி. அடுப்பு விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் விழாக்கால விற்பனை, பெரிதும் பொதுமக்களுக்கும்-குறிப்பாக அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் குறைந்த விலையில் டான்சியின் பொருட்களை வாங்குவதற்கு ஓர் அரிய வாய்ப்பினை ஏற்படுத்துகிறது. 1988-ஆம் ஆண்டு விழாக்கால விற்பனை ரூபாய் 100 இலட்சத்தையும் தாண்டிச் சாதனை அடைந்தது. இவ்வாண்டு ரூபாய் 130 இலட்சம் மதிப்புடைய பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

கிரி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் தவிர இதர 14 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் வேலையில்லாதோர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஒரு முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்த தளி வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டது. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ரூ. 143.20 இலட்சத்தில் நிலநீர் மேம்பாட்டுத் திட்டம் சமூகக்காடு வளர்ப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 9 இலட்சம் மனித சக்தி நாட்கள் கிராம மக்களுக்கு ஏற்படுத்தப்பட உள்ளது.

இம்மாவட்டத்தில் 347 மி.மீ. மழை பெய்துள்ளது. நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கரும்பு மற்றும் பருத்தி ஆகியவைகள் 19,850 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகின்றன. இதுவரை 56,000 எக்டேரில் சாகுபடி முடிக்கப்பட்டுள்ளது. 265 மெட்ரிக் டன் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மரக்கன்றுகள் மற்றும் பழக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்படும். ரூ. 6.15 இலட்சம் மதிப்புள்ள தொகையை விவசாயிகள் பெறுவார்கள். வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் கீழ், சிறு, குறு விவசாயிகளுக்கு இடு பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் புதியதாக தேசீய நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, 4 கிராமங்களில் 1250 எக்டேரில் விவசாயிகளுக்கு இடு பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்த மானாவாரி அபிவிருத்திப் பணியில் 472 விவசாயிகள் பயன் அடைகின்றனர்.

தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல உதவித் திட்டம் 1989-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இதில் சிறு விவசாயிகள், சிறப்பு உதவியாக ரூ. 2,000 பெறுகின்றனர். அரசு இதற்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

**-மு. கிருஷ்ணன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்.

# மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்

## சிதம்பரனார் மாவட்டம்

### தூத்துக்குடி

## 1989-1990

## நலிந்தோர் நல வாழ்வுத் திட்டங்கள்

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

| | | |
|---|---|---|
| பயனடைவோர் | ... | 6,106 |
| வழங்கப்படும் மானியம் | ... | ரூ. 122.120 இலட்சம் |
| இதுவரை பயன்பெற்றவர் | ... | 4,068 |
| வழங்கப்பட்ட கடன் | ... | ரூ. 196.53 இலட்சம் |
| வழங்கப்பட்ட மானியம் | ... | ரூ. 65.51 இலட்சம் |

## ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டம்

| | | |
|---|---|---|
| செலவிடும் தொகை | ... | ரூ. 479.56 இலட்சம் |

### நடைபெறும் வேலைகள் மற்றும் முன்னேற்றம் 20.9.89

| வ. எண் | எடுக்கப்பட்ட வேலையின் பெயர் | எண்ணிக்கை | முடிக்கப்பட்ட வேலைகள் | நிதிஒதுக்கீடு இலட்சத்தில் ரூபாய் | செலவு இலட்சத்தில் ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | குளம் வார்கால் ஆழப் படுத்துதல்-சாலை வேலைகள் | 1,827 | 1,008 | 235.53 | 104.22 |
| 2. | ஆதிதிராவிடர் குடியிருப்புகள் | 943 | ... | 133.92 | 60.66 |
| 3. | ஜீவன்தாரா பாசனக் கிணறுகள் | 145 | ... | 22.50 | ... |
| 4. | கிராம மற்றும் நகரப் பேரூராட்சிகள் மூலமாக | 226 | 19 | 39.40 | 8.00 |
| 5. | பஸ் போக்குவரத்துக்கான சாலை மேம்பாடு மற்றும் இதர வேலைகள் | 37 | ... | 77.76 | 51.22 |
| | மொத்தம் | 3,178 | 1,027 | 509.11 | 224.10 |

**பி.ஜி.ஜி. பிச்சை, பி.ஏ.,**
திட்ட அலுவலர்

**மா. கனகசபாபதி, இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர்
சிதம்பரனார் மாவட்டம்



பயன் அடைந்தோர் பகர்வன:


தமிழ்ச்செல்வி-ஜெயராஜ்

# மகளிரை வாழவைக்கும் மறுமலர்ச்சித் திட்டம்

கன்னிப் பெண்களின் கண்ணீரைத் துடைக்க, கருணை உள்ளத்தோடு தீட்டப்பட்ட திட்டம்தான், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் திருச்சிமாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 864 மணப்பெண்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 43.20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 466 திருமணப் பெண்களுக்கு நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு, திருச்சி மாவட்டத்தில் நல்ல வரவேற்பு உள்ளது.

முதலில் துவாக்குடி மாதாகோவில் தெருவில் வசிக்கும் தேன்மொழி-மைக்கேல் புதுமணத் தம்பதியரைச் சந்தித்தோம். திருமதி தேன்மொழி கூறுகிறார்:

"என்னை பொண்ணு பார்க்க வந்தவங்க எல்லாரும் பணங்காசு கேட்டாங்க. எங்கப்பா விவசாயக் கூலிதாங்க. அவரு..... பணங்காசு பொறட்டி எனக்குக் கல்யாணம் செஞ்சி வைக்க ரொம்பக் கஷ்டப் பட்டாருங்க. இந்த நேரத்துலதான் வாளவந்தான்கோட்டை, ஞானப் பிரகாசம், என்னை மாதிரி ஏழைக் கல்யாணப் பொண்ணுக்கு முதலமைச்சர் ரூ. 5,000 கல்யாண உதவி பண்றதா திருவெறும்பூர் யூனியன் ஆபீஸ்ல கேள்விப்பட்டு, எங்கப்பா கிட்ட சொன்னாரு.

"நான் பத்தாம் வகுப்பு வரை படிச்சிருக்கேன். யூனியன் ஆபீஸ்ல

> தமிழக அரசு பல்வேறு சமூக நலத் திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. அவற்றுள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டமும் ஒன்று. இந்தத் திட்டத்தின் மூலம் பயன் அடைந்தவர்கள், "இது ஒரு அருமையான திட்டம், எங்களை வாழ வைக்கும் திட்டம்" என்று மனமுவந்து கூறுகிறார்கள். அவர்களில் சிலரைப் பேட்டி கண்டோம்






" யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் எனக்கு மிகவும் தேவைப்பட்ட நேரத்தில் உதவியது...அதுவும் மிக விரைவில்!





நல்ல காலம், நான் அதிக செலவு இல்லாத அவர்களுடைய கால்நடை இன்ஷூரன்ஸ் பாலிசியை எடுத்திருந்தேன்.

அது ஒரு புத்திசாலித்தனமான முடிவு. என்னுடைய பசு மாடு நோயுற்று இறந்தபோது, அதற்கான தொகை எனக்குத் திரும்பக் கிடைத்தது. அதைக் கொண்டு உடனே இன்னொரு பசு மாடு வாங்கிவிட்டேன்.

இப்போது என்னுடைய நண்பர்கள் பலர் என்னைப் பின் பற்றுகிறார்கள்.

நீங்களும் இந்த இன்ஷூரன்ஸ் பாலிசி எடுக்கலாமே? இதற்கு செலவு அதிகம் இல்லை! "

யுனைடெட் இந்தியாவின்
கால்நடை இன்ஷூரன்ஸ் பாலிசி

மேலும் விவரங்களுக்கு, யுனைடெட் இந்தியா அலுவலகம் அல்லது உங்கள் பகுதியிலுள்ள ஏஜெண்டை அணுகவும்.

UNITED INDIA

யுனைடெட் இந்தியா
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)
24 ஒயிட்ஸ் ரோடு, சென்னை 600 014

HTA 7365


போய் மனு கொடுத்தோம். எனக்கு கல்யாணத்துக்கு முன்னாடி ஒரு வாரம் இருக்கிறப்போ 5,000 ரூபாய் ரொக்கமாக குடுத்தாங்க. அதுல ஏற்கெனவே கல்யாணத்துக்காக வாங்கிய கடன் 1,500 ரூபாய் குடுத்துட்டு, மிச்சமிருந்த பணத்துல துணிமணி பாத்திரம் வாங்கினோம்.

"அந்தச் சமயத்துல பண உதவி இல்லன்னா, கல்யாணம் நடந்துருக்குமான்னே பயமாயிருந்துச்சுங்க. சரியான நேரத்துல உதவி செஞ்ச இந்த அரசாங்கத்துக்கு நாங்க ரொம்ப நன்றிக் கடன் பட்டுருக்கோங்க."

அரசங்குடியில் உள்ள தங்கப்பொண்ணு-சுப்பிரமணி; அந்த தம்பதியரைச் சந்தித்தோம். அவர் கூறினார்:

"நிச்சய தாம்பூலம் முடித்த கையோடு கல்யாணச் செலவுகளுக்காகக் கடன் கேட்டுத் திரிந்திருக்கிறார், எங்க அப்பா சண்முகம். அந்த நேரத்தில், திருவெறும்பூர் ஒன்றிய ஆணையர் திரு. முஸ்தபா கமாலைச் சந்தித்து, மனு கொடுக்க, மனு பரிசீலிக்கப்பட்டு திருமண நிதியுதவி, திருமணத்திற்கு முன்பே கொடுக்கப்பட்டது."



திருமதி தங்கப்பொண்ணு

கண் கலங்கிய தங்கப்பொண்ணுவின் தந்தை சண்முகத்திற்கு, அந்தத் தொகை மிகப்பெரிய உதவியாக இருந்தது.

பாப்பாக்குறிச்சி அண்ணாநகரில் உள்ள தமிழ்ச்செல்வி-ஜெயராஜ் தம்பதியரைச் சந்தித்ததில் அவர்கள் கூறியதாவது:

"எங்களைப் போன்ற ஏழைக் குடும்பத்துக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுத்து, திருமணம் நடக்க உதவி செய்து வரும் முதலமைச்சருக்கு நாங்கள் நன்றி சொல்கிறோம்." என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்கள்.

-மா. அசோகன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.


# HOTEL CITY TOWER

Phone: 37681 - 8 Lines
: 37641 - 8 Lines
Telex : 0855 - 543 HCT IN
Cable : CITYTOWER
Post Box No: 2418
COIMBATORE-641 009

**FACILITIES:**

Telex:
Telephone in all Rooms
Channel Music
Travel Counter
Car Parking
Laundry Service
Doctor on Request
Shopping Centre
24 Hours Hot & Cold Water
Credit facilities Diners Club, Can card Central Bank card & Mastercard Mercard Andra Bank Card Visa Card & Bob card Room Service (Veg & Non Veg) 6 A.M. to 11 P.M.
Orchard (Veg) Restaurant
CLOUD '9' Non-Veg Restaurant with Separate Kitchen & See through Tandoor in Roof Top 9th floor
Conference Hall
Mini Conference Hall
Safe Deposit facility
T.V. with close circuit Video
Post Office Next door
Air Port Coach Available
CHECK OUT TIME 24 HOURS

# சென்னையில் வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள்

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரும், சென்னை மாநகராட்சி ஆணையரும் இணைந்து 2-10-89 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் சென்னை மாவட்ட நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா வினை ஏற்பாடு செய்திருந்தார்கள். இவ்விழாவில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை மாநகராட்சி, ஆதி திராவிடர் நலத் துறை இயக்ககம், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சமூக நலத்துறை இயக்ககம், தமிழ்நாடு ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஆகிய துறைகள் பங்கேற்றன.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நலத்திட்டஉதவி களை நலிந்தோர்க்கு வழங்கிச் சிறப் புரை ஆற்றினார். விழாவிற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

சென்னை மாநகராட்சி தனி அலுவலர் திரு. எல். எம். மெனெசஸ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆர்க்காடு நா. வீராசாமி அவர் களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கோ. சி. மணி அவர்களும், மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி சுப்பு லட்சுமி ஜெகதீசன் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் டாக்டர் ஏ. இராம கிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மாநிலங்களவை உறுப்பினர்கள் திரு. முரசொலி மாறன் அவர் களும், திரு. டி.ஆர். பாலு அவர் களும், மக்களவை உறுப்பினர் திருமதி வைஜயந்திமாலா பாலி அவர்களும், மாண்புமிகு சிறு சேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. அ. இரகுமான்கான் அவர்களும், சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு. சா. கணேசன், திரு. ஆர். மதிவாணன், திருமதி எஸ். பி. சற்குணம், திரு. செங்கை சிவம், திரு. பரிதி இளம் வழுதி, திரு. திரு. என். கணபதி, திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ஆகியோரும் விழாவில் பங்கேற்றனர்.



மாண்புமிகு முதல்வர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"இந்தியத் திருநாட்டின் விடுதலைக் காகக் குரல் எழுப்பி, அகிம்சைப் போராட்டத்தால் நர்ட்டினுடைய விடுதலையைப் பெற முடியும் என்று உலகுக்கு உணர்த்திய தியாகச் செம் மல் அண்ணல் காந்தியடிகள், அந்த





வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். (2-10-89)

காந்தியடிகளுடைய சீடர்களிலே ஒருவராக இருந்து, அகில இந்திய அளவிலே பெரும்புகழ் எய்தியிருந்தாலும்கூட, தமிழ் நாட்டு மக்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுக்கத் தவறமாட்டேன் என்று சூளுரைத்துப் பாடுபட்டு மறைந்துவிட்ட பெருந் தலைவர் காமராஜர், இந்த உத்தம தியாகி காந்தியடிகளையும், கர்ம வீரர் காமராஜரையும் ஒருங்கே நினைத்துக் கொள்ளக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி அமைந் திருக்கிறது.

"இந்த நிகழ்ச்சியில் எனக்கு முன்னால் இங்கே உரையாற்றி யதைப் போல் இன்றைய தினம் சென்னை மாவட்டத்தின் சார்பில் நலிவுற்ற மக்களுக்கு நல்வாழ்வுத் திட்ட உதவிகள் ஒரு கோடியே பதினைந்தாயிரம் ரூபாய் அளவில் வழங்கப்படுகின்றன.

"இங்கே பல புதிய திட்டங்கள்- மூவலூர் இராமாமிர்தம் அம்மை யார் பெயரால் மற்றும் வீரத்தாய்மார்கள்-பொது வாழ்க்கைக் குத் தங்களை அர்ப்பணித்துக் கொண் டவர்கள்-அந்தத் தாய்மார்கள் பெய ரால் பல திட்டங்கள் அறிவிக்கப்பட் டதை நம்முடைய பேராசிரியர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள்.

"**இன்றைக்கு மாநிலம் முழுதும் இன்றுள்ள கணக்கின்படி 4,571 பெண்களுக்குத் திருமண உதவிக்காக 5 ஆயிரம் ரூபாய் உதவி வீதம் 2.28 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக் கிறது.**

"டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்-கருவுற்ற பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொகை 12 ஆயிரத்து 800 பேருக்கு ரூ. 25.78 இலட்சம் இதுவரையிலே வழங்கப்பட்டிருக்கிறது. இதில் சில பெண்களுக்கு முதல் தவணையாக நூறு ரூபாயும் பிரசவத்திற்குப் பிறகு மேலும் நூறு ரூபாயும் வழங்கப் படும்.

"டாக்டர் தர்மாம்பாள் அம்மை யாருடைய நினைவாக விதவைகள் மறுமண உதவித்திட்டம் இதுவரை யில் மாநில அளவில் 97 பேருக்கு 4.85 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டி ருக்கிறது.

"விதவைகள் மறுமணத் திட்டம் கடந்த காலத்திலேயே கழக ஆட்சி. நடைபெற்ற அந்தக் காலத்திலேயே தொடங்கப்பட்டு, இந்தப் பணத்தை அவர்களுக்கு ரொக்கமாகத் தந்து விடாமல் அவர்களுக்கெல்லாம் இந்தப் பணத்தைத் தேசிய சேமிப்புப் பத்திரங்களாக வழங்கி வருகின் றோம்.

"இந்த ஆறு ஏழு மாத காலத் தில் 97 பேருக்கு ஏழை எளிய வீட்டுப் பெண்களுக்கு மறுமணத்திற் காக 5 ஆயிரம் ரூபாய் சேமிப்புப் பத்திரம் வீதம் வழங்கப்பட்டிருக் கிறது.

"இவையன்றி ஈ.வெ.ரா. நாகம் மையார் நினைவுத் திட்டம் என்ற பெயரால் ஏழை எளிய பெண்கள் அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்த வர்களாக இருந்தாலும், பொருளா தாரத்திலே பின் தங்கியிருக்கின்ற யாராக இருந்தாலும் அந்தப் பெண் களுக்கு கல்லூரியிலே பட்டப்படிப்பு வரை இலவசமாகக் கல்வி இப் போது இந்த ஆட்சி மீண்டும் உதய மான பிறகு அறிவிக்கப்பட்டு நடை முறையிலே இருந்து வருகின்ற திட்ட மாகும்.

"ஜனநாயகச் சிற்பியாகத் திகழ்ந்த வர் ஜவகர்லால் நேரு. எனவே, அவருடைய பெயரால் நடத்தப்படு கின்ற ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தை இந்தியாவிலேயே பீகார் மாநிலத்திற்கு அடுத்தபடியாகச் சிறப்பாக நடத்துகின்ற மாநிலம் தமிழ்நாடு. அகில இந்திய சராசரி 15 சதவிகிதம்தான். ஆனால், தமிழ் நாட்டின் சராசரி 35 சதவிகிதம். அந்த அளவிற்கு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தை ஒழுங்காக நிறைவேற்றிய காரணத்தால்தான், நமக்கு இரண்டாவது தவணையாகப் பணமும் வந்து மூன்றாவது தவணை யும் தயாராக உள்ளது."- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை நுங்கம் பாக்கம் நெடுஞ்சாலைக்கு "உத்தமர் காந்தி சாலை" என்று பெயர் சூட்டினார்.

விழாவின் இறுதியில் தமிழக அரசு வருவாய்த் துறைச் செயலர் திரு. ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப., நன்றியுரை கூறினார்.

நல்ல தரமான
சமையலுக்கேற்ற
தேங்காய் எண்ணெய்க்கு

"என்.பி.ஆர்"

தயாரிப்பாளர்கள்:
என்.பி. ராஜா ஆயில் மில்ஸ்,
போல்நாயக்கன் பேட்டை
தூத்துக்குடி
தொலைபேசி எண்: 23134

Kirtilal Kalidas & Co.

Diamonds & Jewellery
Since 1939

601, Raja Street,
Post Box 32, Coimbatore-641 001.
Cable: 'DIAMOND'
Phone: 24782, 24704






# தென்-ஆர்க்காடு மாவட்டத்தில்

## வழங்கப்பட்ட

## நலத்திட்ட உதவிகள்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில், விழுப்புரத்தில் 29.9.89 அன்று, அரசு நல்வாழ்வுத் திட்ட உதவிகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி அவர்கள் தலைமை வகித்தார்.

செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. ந. இராமச்சந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி. பூவராகன் ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் ரூ.9.78 கோடி மதிப்பிற்கு நலத்திட்ட உதவிகளை 34,163 நபர்கள் பயன் அடையும் வகையில் வழங்கினார்கள்.

11,180 நபர்களுக்கு ரூ.50 இலட்சத்து முப்பத்தாறாயிரத்து எண்ணூற்று ஐம்பது மதிப்பில் வீட்டுமனைப் பட்டாக்கள், ரூ. 71 ஆயிரத்து ஐநூற்று முப்பது மதிப்பில், 30 நபர்களுக்கு 10.430 எக்டேர் நிலப்பட்டா, 3,619 நபர்களுக்கு நத்தம் மனைப்பட்டா, நலிந்தோர் குடும்பநல உதவித் திட்டத்தின் கீழ் ஐநூற்று தொண்ணூற்று ஐந்து நபர்களுக்கு ரூ.11,90,000, விபத்து நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் 15 நபர்களுக்கு ரூ.1,50,000, தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடிசை வாசிகள் 1,186 நபர்களுக்கு ரூ.13,04,600, குடும்ப நல நிதியின் கீழ் 14 நபர்களுக்கு ரூ.3,40.000, கிராமக் காவலர் பணியாளர் ஓய்வுக் காலப் பணிக்கொடை 18 நபர்களுக்கு ரூ.1,15,702, மின் விபத்தால் இறந்தவரின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து 3 நபர்களுக்கு ரூ.17,000, ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 130 நபர்களுக்கு ரூ.80,990 மதிப்பில் சலவைப் பெட்டிகள், 44 நபர்களுக்கு ரூ.6,600 மதிப்பில்

“குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!”

கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!



தன்னிகரற்ற

பான்மின்த்*

(மொரண்ட்டல் ஸிட்ரேட்)

குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

"பாமும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு : பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சுது —அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!"

**பால் இழப்பே இல்லை.**

"அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது."

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

"என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ! ஆறுதலான சுகம்!"

**வசதி மிக்கதும் கூட.**

சாப்பிட வெகு இலகு பான்மின்த். சுண்டி விடுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — எங்கமாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு. உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!"

பால் இழப்பே இராது
பான்மின்த்
விசேஷமய ஈடு செய்வது

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் : சிறந்த மருந்து**

**பான்மின்த்***

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 4 2217 TM

*யு எஸ் ஏ ஃபைஸர் நிறுவன டிரேடு மார்க்

pfizer

மேலும் விவரமறிய எழுதுவீர் இம் முகவரிக்கு: ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.


சவரக் கருவிகள், ஊரக வளர்ச்சி முகமையில் கடன்களாக 5,720 நபர்களுக்கு 3,83,13,000 ரூபாய் ஆகியவை வழங்கப்பட்டன. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.57 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 411 தொகுப்பு வீடுகளை மாண்புமிகு முதல்வர் திறந்து வைத்தார்.

விழாப் பேருரையாற்றும்போது மாண்புமிகு முதல்வர்கலைஞர்அவர்கள் குறிப்பிட்டதாவது:-

"கழக அரசு பெண்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டு அவர்களுக்காகவே பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டியுள்ளது.

"மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 207 ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 8-ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.5,000 வீதம் ரூ.10 இலட்சத்து முப்பதாயிரமும், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் 540 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.54,000 ரூபாயும் வழங்கப்பட்டதைக் கண்கூடாகப் பார்த்தீர்கள். அது மட்டுமின்றி, உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர நாற்காலிகள், விதவை மகள் திருமண உதவி தையல் இயந்திரங்கள், காதொலிக் கருவிகள், தானிய உற்பத்திச் சிறப்புத் திட்டத்தின் கீழ், மானிய விலையில் தெளிப்பான்கள், விவசாயக் கருவிகள் ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

"தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்க 58 நபர்களுக்கு 16 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் கடனுதவியும், வாடகைச் சீருந்து வாங்க 13 நபர்களுக்கு 15 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் கடனுதவியும், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வாங்க 135 நபர்களுக்கு 6 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கடனுதவியும் வழங்கப்படுகின்றன. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 28 புதிய வழித் தடங்களில் பேருந்துகள், புறநகர் மற்றும் நகர வழித்தடங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் சார்பில், சிறுவெள்ளி மேடுபேட்டைக் குடிநீர்த்திட்டம் ரூ.4,57,000 மதிப்பிலும், குமரப்பன் பேட்டை குடிநீர்த் திட்டம் ரூ.3,17,000 மதிப்பிலும், கண்டமானடி குடிநீர்த் திட்டம் ரூ.1,81,000 மதிப்பிலும், சாலவழிக் கூட்டுக் குடிநீர்த்திட்டம் ரூ.2,16,000 மதிப்பிலும், பெண்ணாடம் குடிநீர்த்திட்டம் ரூ.35,17,000 மதிப்பிலும் துவக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்படி பல்வேறு நலப் பணிகள் செய்யப்பட்டு வருவதை நீங்கள் நேரிடையாக இப்போது பார்த்தீர்கள்.

"இந்தக் குறுகிய கால கட்டத்தில் நாம் ஆற்றியுள்ள பணி ஏராளமாக இருந்தாலும், தொடர்ந்து நாங்கள் நல்லமுறையில் செயலாற்றிட, இன்று போல் என்றும் உங்களுடைய முழு ஒத்துழைப்பைத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

மாவட்ட வருவாய் அலுவலர் ந. சண்முகம் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

**நா. தில்லை கோவிந்தன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
தென் ஆர்க்காடு மாவட்டம்


# எங்கள் நல்வாழ்த்துக்கள்

# ரோஜா

**சுகந்த பாக்குத்தூள்**

**இந்தியாவில் புகழ்பெற்றது**

Licenced Dealer

**N.V.K.M. and Sons P. Ltd.**

95, Market Road, Dindigul.

Authorised Agent

**M/s. J.M. Edward Nadar and Company**

403, 404, Rangai Gouder Street,
Coimbatore-641 001

TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## தொகுதி ஐந்து பணிகள்

1987-88 தொகுதி ஐந்தில் அடங்கிய பதவிகளுக்குத் தேர்வாணையத்தால் 16.8.89 முதல் 24.8.89 வரை நடத்தப்பட்ட பிரதான எழுத்துத் தேர்வு முடிவின் அடிப்படையில் கீழ்க்கண்ட பதவி எண்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உதவியாளர்கள்

650 20362 19503

### தஞ்சை தகவல் நிலையத்தில் உதவியாளர்

10465

### தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியில் உதவியாளர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 159 | 199 | 205 | 246 | 316 | 349 | 387 | 391 |
| 421 | 561 | 600 | 743 | 872 | 970 | 1015 | 1720 |
| 2229 | 2338 | 2702 | 2710 | 2728 | 2797 | 2919 | 2961 |
| 3104 | 3164 | 3190 | 4960 | 5216 | 5405 | 5439 | 6051 |
| 6615 | 6645 | 6760 | 7064 | 7157 | 7475 | 7615 | 7675 |
| 8026 | 8298 | 8777 | 9662 | 9823 | 10384 | 10967 | 11160 |
| 11246-A | 11599 | 11995 | 12033 | 12363 | 12450 | 12474 | 12750 |
| 13004 | 13035 | 13071 | 13145 | 13248 | 13536 | 13659 | 13706 |
| 13864 | 13884 | 14121 | 14202 | 14210 | 14224 | 14314 | 14428 |
| 14568 | 14628 | 14801 | 14840 | 15004 | 15028 | 15144 | 15213 |
| 15528 | 15537 | 15754 | 15762 | 16202 | 16548 | 16642 | 16761 |
| 16956 | 17089 | 17091 | 17108 | 17366 | 17576 | 17597 | 17711 |
| 17774 | 17861 | 17864 | 17873 | 18040 | 18048 | 18057 | 19102 |
| 19180 | 19249 | 19312 | 19343 | 19368 | 19391 | 19521 | 19723 |
| 20245 | 20278 | 20371 | 20465 | 20494 | 20502 | 20626 | 20825 |
| 20842 | 20905 | 21190 | 21725 | 21755 | 21787 | 22144 | 22600 |
| 22607 | 22999 | 23175 | 23183 | 24249 | 24252 | | |

மேற்படி பதவிகளுக்கு நடத்தப்பட்ட பிரதான எழுத்துத் தேர்வில் தேர்வு எழுதிய மற்ற விண்ணப்பதாரர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.





# அன்பளிப்புப் பொருட்களை அரசுக்கு வழங்கினார் முதல்வர்

திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டத் தொடக்க விழாவிலும், வட ஆர்க்காடு-அம்பேத்கார் மாவட்டத் தொடக்க விழாவிலும் தமக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கச் செங்கோல், போன்ற பொருட்களை 'முதலமைச்சர் பொது நிவாரண நிதியில்' சேர்ப்பதாக சென்னையில், 2-10-89 அன்று நடைபெற்ற அரசு விழாவில் குறிப்பிட்ட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார். இதுபற்றி தமது உரையில் முதல்வர் குறிப்பிட்டதாவது:-

"அண்ணா வழி நின்று பணியாற்றுகின்ற இந்த ஆட்சி உங்கள் ஆதரவோடு மேலும் சிறந்த தொண்டுகளை ஆற்ற வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் முக்கியமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் எதிர்க்கட்சித் தலைவனாக இருந்த போது என்னுடைய அறுபதாவது பிறந்த நாளில்-மணி விழாவில் திருச்சியில் அன்பில் தர்மலிங்கம் முன்னின்று அறுபது பவுன் கொண்ட ஒரு மாலையை அணிவித்தார். அதைக் கட்சி நிதிக்குத் தந்து விட்டேன். அதற்குப் பிறகு மதுரை பழனிவேல்ராஜனும், பொன். முத்துராமலிங்கமும் முன்னின்று அறுபது பவுன் கொண்ட மாலையை எனக்கு அணிவித்தார்கள். அதையும் கட்சி நிதிக்குக் கொடுத்து விட்டேன். கோவையிலே கண்ணப்பன் முன்னின்று அறுபது பவுன் கொண்ட ஒரு மாலையை அணிவித்தார். அதையும் கட்சி நிதிக்குக் கொடுத்து விட்டேன். அதைப்போல, செஞ்சியில் ஒரு அரசு நிகழ்ச்சியில் செம்மறி ஆடு ஒன்று கொடுத்தார்கள். அதை இன்று காலையில் வண்டலூர் அறிஞர் அண்ணா வனவிலங்குப் பூங்காவிற்கு அளித்து விட்டேன்.

"நேற்றைக்கு முன்தினம் ஆரம்பமான சம்புவராயர் மாவட்டம், அம்பேத்கார் மாவட்டம் இந்த இடங்களில் என்னிடத்திலேயே ஒரு செங்கோல், ஒரு மணிமாலை, இரண்டொரு மோதிரங்களை வழங்கினார்கள். இவை ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ளவை. அவற்றை இதுபோல் நலிந்தோருக்குப் பயன்பட முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்குச் சேர்க்கிறேன். சேர்ப்பதன் அடையாளமாக அரசுத் தலைமைச் செயலாளர் இராஜேந்திரனிடத்தில் அவற்றை ஒப்படைக்கிறேன்." (தங்கச் செங்கோல், மணிமாலை, மோதிரங்கள் ஆகிய அனைத்துப் பரிசுப் பொருட்களையும் பலத்த கரவொலிக்கிடையே முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலாளரிடம் ஒப்படைத்தார்)

# விவசாய சகோதரர்களே! உங்கள் வாழ்க்கையின் பளுவைத் தாங்குகின்றன உங்கள் காளைமாடுகள்

விவசாய குடிமக்களுக்கு காளை மாடுகள் எவ்வளவு முக்கியத்வம் வாய்ந்தவை என்பது ஒவ்வொரு விவசாயிக்கும் நன்ருகத் தெரியும். விதை விதைப்பது, வயல் உழுவது, பாசனம் செய்ய நீர் இறைப்பது, போா அடித்து நெல் குவிப்பது—அதாவது விவசாயிகளின் எல்லா முக்கிய வேலைகளையும் காளை மாடுகளே செய்கின்றன.

ஆனல காளை மாடுகளுக்கு வியாதி வந்து விட்டாலோ, அவை விபத்திஞல் பயனில்லாமல் போய்விட்டாலோ, அல்லது இறந்து விட்டாலோ விவசாயியின் வாழ்க்கையே பாழாய்ப் போய்விடும்.

இந்த மாதிரி கஷ்ட காலத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்கிறது நியூ இந்தியாவின் மாட்டு இன்சூரன்ஸ்.

மாட்டு இன்சூரன்ஸ் ப்ரீமியம்: மாட்டு விலையிலே ஒவ்வொரு 100 ரூபாய் மீது ஆண்டுக்கு கூடிப்போனு 3 ரூபாய்தான். மாட்டு இன்சூரன்ஸ் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வந்தால் ப்ரீமியம் இன்னும் குறைவாகவே இருக்கும்—அதாவது ஆண்டுக்கு ரூபாய் 2.25 மட்டுமே!

நியூ இந்தியாவின் 1000க்கும் அதிகமான அலுவலகங்கள் நாடு பூராவும் பரவியுள்ளன.

மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள அலுவலகத்தில் விசாரியுங்கள் அல்லது ஏஜெண்டை சந்தியுங்கள். உங்களுக்கு சேவை செய்யவே எட்டாத தூரத்தில் உள்ள கிராமங்களில் கூட நியூ இந்தியாவின் கிராம பிரதிநிதிகள் காத்திருக்கிருர்கள்.





மாட்டு இன்சூரன்ஸுக்கு

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியாவின் துணை நிறுவனம்

கஷ்ட காலத்தில் உங்களுக்கு ஆதரவு

RKSWAMY/NIA 4292 TM-A


# கல்வி வளர்க்கும் பணி

**வரவு செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளது. ஏறக்குறைய ரூ.900 கோடி, கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதிலிருந்தே கல்வியின் பெருமை எளிதில் விளங்கும்.**

ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவியருக்கு, பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1989-90-ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப் படிப்புத் திட்டம் எனப்பெயரிடப்பட்டு உள்ளது. இத்திட்டம் அரசு மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவியருக்கு அமல்படுத்தப்படும்.

மாணவர்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் பேனாக்கள், உருள்முனைப் பேனாக்கள், பென்சில்கள், ரீபில்கள், எழுத்தழிப்பான், எழுத்துமுனை கூராக்கும் கருவிகள், கரும்பலகைகள், கரும்பலகைத் துடைப்பான்கள், ரப்பர் விளையாட்டுப் பந்துகள், அறுவைக் கருவிகள் அடங்கிய பெட்டிகள் போன்ற கல்வி சம்பந்தப்பட்ட பல பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. அனைத்து மக்களாலும் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சீப்புகளுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு போன்றவைகளுக்கான வசதிகளும், அதைத் தவிர ஆராய்ச்சிக்கான பி.எச்.டி. போன்ற வசதிகளும் இருக்கின்றன. இதனைப் பயன்படுத்திக்கொண்டும் - நாமக்கல்லில் இருக்கின்ற கல்லூரியை இணைத்துக் கொண்டும் - பல்வேறு ஆராய்ச்சி மையங்களை இணைக்கின்ற வகையிலும் புதிதாகத் தொடங்கவிருக்கின்ற உழவர் பயிற்சி நிலையங்களை இணைக்கின்ற வகையிலும் சென்னையிலே கால்நடைப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் முதன்முதலாக இந்தப் பல்கலைக்கழகம் அமைகிறது.

தொழிற் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு பாரதிதாசன் பல்கலைக் கழக துணைவேந்தர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது.

மேல்நிலைக் கல்வித்தேர்வு, பள்ளி இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ மாணவியர்க்கு ரொக்கப் பரிசுகளை இவ்வாண்டு முதல், அரசு வழங்கி வருகிறது. இதுவரை எந்த அரசாலும் நடைமுறைப்படுத்தப்படாதது இந்தத் திட்டம். இந்த ரொக்கப் பரிசுகள் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளன்று வழங்கப்படுவது சிறப்பம்சம் ஆகும்.

முன்னாள் முதல்வர் டாக்டா எம்.ஜி.ஆர். பெயரால் மருத்துவப் பல்கலைக் கழகம்தொடங்கப்பட்டது.

முறைகேடாகவும், ஒழுங்கீனமாகவும் நடைபெற்று வந்த தனியார் சுயநிதி பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்விக் கூடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றின் மீது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தகுதியில்லாதவை மூடப்பட்டன.

## ஆசிரியர் நலன்

**உயர்நிலைப்பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பணிகளை முறைப்படுத்த விரைவான ஆணைகள். இந்த ஆணையின் மூலம் 898 ஆசிரியர்கள் பயனடைவர்.**

**ஆசிரியர்கள் எவரும் பணியில் இருக்கும்போது இயற்கையெய்தினால், அவரது மகன் அல்லது மகள் ஆசிரியராகப் பணிபுரிவதற்குரிய கல்வித் தகுதியைப் பெற்றிருந்த போதிலும், அவருக்கு ஆசிரியர் பதவி அளிக்கப்படுவதில்லை. அதற்கு மாறாக, காலியாக இருக்கும் எழுத்தர் பதவிகளில் அவர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். ஆனால் தற்போது பணியில் இருக்கும்போது இயற்கை எய்தும் ஆசிரியரின் மகன் அல்லது மகள் இடைநிலை ஆசிரியர் பயிற்சி, பி.எட். முதலிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால் காலியாக உள்ள ஆசிரியர் பதவிகளில் நியமிக்கப்படுகிறார்கள்.**

**கடந்த 3 ஆண்டுக் காலமாக எந்தவொரு பணியையும் ஆசிரியர் வீட்டுவசதி வாரியம் செய்யாமலிருந்தது. இந்த வாரியத்தின் மூலம் 2,000 வீடுகள் கட்டித் தரப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அரசின் நிதிக்குப் பல்வேறு வாரியங்கள் வீண்செலவை ஏற்படுத்துகின்ற காரணத்தால், இவ்வாரியமும் தேவையில்லை என்று முடிவெடுக்கப்பட்டது என்றாலும் ஆசிரியர்களுக்கு ஏமாற்றம் ஏற்படக் கூடாது என்பதற்காக இந்த வாரியத்தினுடைய பணியைக் கல்வித் துறையே ஏற்றுக் கொண்டு அதற்காக ஒரு தனி அமைப்பு, கல்வித் துறையின்கீழ் உருவாக்கப்பட்டு இந்த 2 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.**

**பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.**

**கல்லூரி ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய விகிதம் 1986-ஆம் ஆண்டிலிருந்தே முன் தேதியிட்டு இந்த அரசால் அமல் படுத்தப்பட்டுள்ளது.**

**குடும்ப நலத் திட்டம், சிறு சேமிப்பு போன்ற கல்வித் துறை தொடர்பில்லாத பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.**

TNPSC Advt No 61

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் விளம்பர எண் 55-இல் தொகுதி-I மற்றும் இதர தொகுதிப் பணிகளுக்குத் தேர்வாணையத்தால் நடத்தப்படவிருக்கும் முதனிலைத் தேர்வுக்கு (Preliminary Examination) விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, தமிழ்நாடு காவல் பணியில் காவல் துணைக் கண்காணிப்பாளர் (Category—I) பதவிக்கு 155 செ.மீ. உயரத்திற்குக் குறையாத பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விளம்பர எண் 55-இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் 13.11.89 மாலை 5.30 மணிக்குள் ஆணையத்தின் அலுவலகத்திற்கு வந்து சேருமாறு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மார்பளவும், உயரமும் இவர்களுக்குப் பொருந்தாது. மற்றபடி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வயது வரம்பு, கல்வித் தகுதி மற்றும் கட்டணம் (Fees) போன்றவை இதற்கும் பொருந்தும். விளம்பர எண் 55-ன்படி ஏற்கனவே விண்ணப்பம் அனுப்பியுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

குறிப்பு: வருகைத் தாள் என்று மாதிரி படிவத்தில் குறிப்பிட்டுள்ளது ஆளறி சான்றிதழைக் குறிக்கும்.

டி.ஐ.பி.ஆர்/2156/எம்எஸ்/89



## விரைந்து வரும் தெலுங்கு கங்கை



சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக முன்பு உருவாக்கப்பட்ட திட்டம் தெலுங்கு - கங்கைத்திட்டம்.

மிக உற்சாகத்தோடு ஆரம்பிக்கப்பட்டு, மூன்றாண்டுகளாகக் கவனிக்கப்படாமல் நின்று விட்ட அத்திட்டத்தை மீண்டும் தொடருவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு.என்.டி. ராமராவ் அவர்களுடன் 18.6.89 அன்று ஐதராபாத்தில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

அந்தப் பேச்சு வார்த்தை 20 நிமிடத்திலேயே முடிவுற்றது. சிக்கல்கள் தீர்க்கப்பட்டு விட்டன. 1992-93 ம் ஆண்டிற்குள் தெலுங்கை கங்கை திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, சென்னைக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற இனிக்கும் செய்தியை முதல்வர் கலைஞர் அறிவித்தார்கள்

அத்துடன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்களையும் மற்றும் அரசு உயர் அலுவலர்களையும் நேரில் சென்று பணிகள் எந்த அளவுக்குத் துரிதமாக நடைபெறுகின்றன என்பதைப் பார்த்து வரும்படியும் பணித்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர்களும், உயர் அலுவலர்களும் தெலுங்கு - கங்கைத் திட்ட வேலைகளை நேரில் சென்று பார்த்து வந்தார்கள். பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

## தொழிலாளர் நலம் காக்கும் அரசு

மூடப்பட்ட ஆலைகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பாட்டாளி மக்களுக்கு தலா ரூ.250 வீதம் ரூ.30 இலட்சம் நிவாரண நிதி தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலைகள் திறக்கப்படுவதில் கால தாமதம் ஏற்படுகிற காரணத்தால், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மேலும் தலா ரூ.200 வீதம் வழங்கப்பட்டது.

ஆறு மாதங்களுக்கு மேலாக மூடிக்கிடக்கின்ற சென்னை வண்டலூர் ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படுவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. இதற்கிடையில், அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் 3,036 தொழிலாளர்களுக்குக் கருணை அடிப்படையில், முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நபர் ஒருவருக்கு, ரூ.200/- வீதம், மொத்தம் ரூ.6,07,200/- வழங்கப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர் ஆகியோருக்கு அடிப்படைக் கூலி நிர்ணயிக்கப்பட்டது.

தீப்பெட்டி மீதான 2 சதவிகித விற்பனை வரி ரத்து செய்யப்பட்டது. இதன்மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.3 கோடி இழப்பு ஏற்படும் என்றபோதிலும், இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயத்தைத் தடுப்பதற்காக இந்தச்சலுகையை அரசு அளித்தது.

# தமிழ்நாடு மின்சார வாரியம்
# வடசென்னை அனல்மின் திட்டம்

## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1 மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் | : | வட சென்னை அனல் மின்திட்டம் - முதல் கட்டப் பணி - மின்திட்டம் நோக்கிச் செல்லும் புதிய நிரந்தரச் சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கேயும், புலிக்காடு காயலின் (Pulicot Back-Waters) குறுக்கேயும் முன் தகைவு செய்யப்பட்ட கான்கிரீட் பாலங்கள் (Prestressed concrete Bridges) கட்டுதல். |
| 2. | ஒப்பந்த வரையறை எண் | : | எஸ்.இ.சி.டி.1 - 8 |
| 3. | பிணை வைப்புத் தொகை | : | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| 4. | ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் | : | 1989, நவம்பர் 15-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி வரை |
| 5. | தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் | : | 1989, நவம்பர் 15 ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி |
| 6. | **ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை** | | |
| | தமிழ்நாட்டிற்குள் | : | ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| | தமிழ்நாட்டிற்கு வெளியே | : | ரூ.550/- (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்) |
| 7. | ஒப்பந்தத்தை அனுப்புதல் | : | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு என்பதால் ஒப்பந்தம் கேட்பதும் இரு பிரிவுகளாகத் ''தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தம்'' என்றும் ''ஏல விலைக் குறி ஒப்பந்தம்'' என்றும் குறிப்பிடப்பட்டு மூடி அரக்கு முத்திரையிட்டு தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும். உரிய நாளில் தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறக்கப்படும். தொழில் நுட்ப இனங்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு ஏல விலைக்குறி ஒப்பந்தங்கள் திறக்கப்படும் நாள் அறிவிக்கப்படும். தொழில் நுட்ப இன ஒப்பந்தத்தில், விலைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தல் கூடாது. |

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை - 600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 23.10.89 காலை 10-30 மணி முதல் 13.11.89 மாலை ஐந்து மணி வரை பெற்றுக் கொள்ளலாம். பொதுவாக, ஒருவருக்கு ஒரே ஒரு ஒப்பந்த வரையறை மட்டும் தான் வழங்கப்படும். குறைந்த பட்சம் இந்தியாவில் எங்காவது இரு முன் தகைவு செய்யப்பட்ட கான்கிரீட் பாலம் கட்டி உள்ளவருக்கே ஒப்பந்த வரையறை வழங்கப்படும். இதற்கான விவரங்களை ஒப்பந்த வரையறை வேண்டிக் கொடுக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். ஒப்பந்த வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத்தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50/- கூடுதலாகச் செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணைவைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும் போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

**தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு**

டிஐபிஆர்/556/செ.அ./89/ஏடிடி



ஆதிதிராவிடர், பழங்குடியினர், மீனவர் முதலானோருக்கு 1989-90 ஆம் ஆண்டில் இலவசமாக 45 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தருவதற்காக 49 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.




## ஆதி-திராவிடர் நலன்

ஆதி-திராவிட விவசாயிகளுக்கு மானிய விலையில் தெளிப்பான், தழை மிதிக்கும் கருவி, மண்வெட்டி போன்ற வேளாண்மைக் கருவிகள் வாங்குவதற்கு ரூ.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி ஆதி-திராவிடர் பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கும், சீர்மரபினருக்கும் கல்லூரி இளங்கலைப்பட்டப் படிப்பு வரை (பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்) இலவசமாக்கப்பட்டது.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படும்.

1974-இல் ஆதி-திராவிடர்களுக்கு வீடு கட்டும் வாரியம் அமைக்கப்பட்டு ஒரே ஆண்டில் 30,022 வீடுகள் கட்டித் தரப்பட்டன. கடந்த 13 ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 34,650. ஆனால் 1989-90-ஆம் ஆண்டில் அதாவது, ஒரே ஆண்டில் மட்டும் சுமார் 45,000 வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 3 கோடியாக இருந்த தொகை ரூ.49 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.




படப்பிடிப்பின் போது விபத்தில் இறக்கும் தொழிலாளர் குடும்பத்துக்கு ரூ.10,000 நிதியுதவி.

சிறந்த படங்கள், சிறந்த நடிகர்கள் என்ற வரிசையில் ஸ்டண்ட் மாஸ்டர்கள், நடன ஆசிரியர், ஆர்ட் டைரக்டர் ஆகியோருக்கும் சிறப்புப் பரிசுகள்.

தேர்வுக்குழுவில் திரைப்படத் தொழிலாளர்கள் பெடரேஷனிலிருந்து ஒரு பிரதிநிதி இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சிறந்த திரைப்படங்களுக்கும் கலைஞர்களுக்கும் ஆண்டுதோறும் அரசு வழங்கி வந்த விருது, பரிசு 83-ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 1989 முதல் அவை மீண்டும் தொடர்கின்றன.

விபத்தில் மறைந்த பின்னணிப் பாடகர் திரு. ஏ.எம். இராஜா அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.50 ஆயிரம் அளிக்கப்பட்டது.

திரையரங்குகளுக்கு விதிக்கப்பட்டு வந்த வரி 53 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக ஜூலை 1 ஆம் தேதி முதல் (1989) குறைக்கப்பட்டு உள்ளது.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான படங்களுக்கு ரூ.1.5 இலட்சம் வரை மானியமாக முன்பு கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது அந்தத் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சம் வரை (1.1.89 முதல்) வழங்கப்படுகிறது.

நலிவுற்ற நிலையில் உள்ள கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை ரூ.150, 1.4.89 முதல் ரூ.250 ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன் 1989-90 ஆம் ஆண்டில் பயன்பெறும் கலைஞர்களின் எண்ணிக்கை 200லிருந்து 300 ஆக அதிகரிக்கப்பட்டது.

# தியாகிகளைப் போற்றும் நேயமிக்க முதல்வர்

இதந்தரு மனையின் நீங்கி, இடர்மிகு சிறைப்பட்டு, இன்னலுற்ற விடுதலைப் போர்த் தியாகிகளிடத்தில் மிகுந்த மரியாதையும் ஈடுபாடும் கொண்டிருப்பவர் முதல்வர் கலைஞர்.

முதல்வர் கலைஞர், முதன் முதலாக கவியரங்கத் தலைமை ஏற்றதே 'விடுதலை வீரர்கள்' என்னும் தலைப்பில் வானொலியில் நடைபெற்ற கவியரங்க நிகழ்ச்சியில் தான் (1967) என்பது குறிப்பிடத் தக்க செய்தி.

விடுதலைப் போர் வீரரான டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் மறைவெய்திய பின்னர், அவரது மனைவியார் ருக்மணி அம்மாள், அரசினர் தோட்டத்தில், அரசுக்குச் சொந்தமான வீட்டில் வசித்து வந்த போது, அந்த வீட்டைக் காலி செய்ய வேண்டும் என்று அரசுத் துறையிலிருந்து அவருக்கு ஆணை விதிக்கப்பட்டது.

அது தொடர்பான கோப்பு அன்றைய பொதுப்பணி அமைச்சரான கலைஞர் அவர்களுக்கு அனுப்பப் பட்டபோது, அவர் பிரச்சினையை மிகவும் பரிவுடன் அணுகினார்.

''ருக்மணி அம்மாளின் கணவர் வரதராஜுலு நாயுடு அவர்கள் தேசத் தியாகி. அவருடைய மறைவிற்குப் பிறகு அவருடைய துணைவியார் அங்கிருந்து அகற்றப்படுவது முறையல்ல. எனவே அவருடைய ஆயுட்காலம் வரையில் உரிய வாடகையைச் செலுத்தி அரசினர் தோட்டத்தில் அந்த வீட்டிலேயே அவர்கள் வாழட்டும்'' என்று 1968-ஆம் ஆண்டிலே, அந்தக் கோப்பில் எழுதினார் கலைஞர். (அந்த அம்மையார் அண்மையில் மறைவெய்தினார்)

விடுதலைப் போராட்டக் கவிஞரும், அரசவைக் கவிஞருமான நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் சட்டமன்ற மேலவையில் இருமுறை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அவர் நலிவுற்ற நிலைக்கு ஆளானார். அதனை அறிந்த முதல்வர் கலைஞர் அவர்கள், நாமக்கல் கவிஞருக்கு மாத உதவித் தொகையாக ரூ.250 வழங்குவதற்கு 1969-இல் ஆணை இட்டார். அதுமட்டுமல்ல அந்தத் தொகை 1967-ஆம் ஆண்டிலிருந்தே அவருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

நாமக்கல் கவிஞர் அவர்களிடம் முதல்வர் கொண்டிருக்கும் பற்றுக்கு மேலும் ஒரு சான்றாக, தற்போது ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது.

19.10.89 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நாமக்கல் கவிஞர் நினைவு அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட முதல்வர் கலைஞர், விழா நிகழ்ச்சி நடைபெற்ற 10 மாடிக் கட்டடத்திற்கு 'நாமக்கல் கவிஞர் மாளிகை' என்று பெயர் சூட்டியுள்ளார்.

மாளிகையின் பெயரும், நாமக்கல் கவிஞரின் 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்ற பாடல் வரிகளும், நியான் சைன் விளக்கில் அமைக்கப் பட வேண்டும் எனவும் ஆணையிட்டார்.

பெருந்தலைவர் காமராசர் இடத்திலும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு. காமராசர் மறைவெய்திய போது (1975) அவருக்கு நினைவகம் ஏற்படுத்தும் பணிக்குரிய இடத்தை, தானே நேரிற்சென்று பார்த்து, நினைவகம் விரைவில் உருவாவதற்கு வழிவகையை மேற்கொண்டார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிரியத்திற்குரிய, விசுவாசமிக்க தொண்டராக அவரது இல்லத்தில் பணியாற்றிய திரு. வைரவனை முதல்வர் கலைஞர், ரூ.1105 சம்பளத்தில் காமராசர் நினைவில்லத்தில் வழிகாட்டியாக ஆகஸ்ட் திங்களில் (1989) நியமித்ததுடன், லாயிட்ஸ் குடியிருப்பில் அவருக்கு வீடு ஒன்றையும் வழங்கினார்.

8.10.89 அன்று காமராசர் மாவட்டத்தலைநகரான விருதுநகரில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள், அங்குள்ள காமராசர் நினைவகத்திற்குச் சென்றதுடன், காமராசரின் தமக்கையார் நாகம்மையார் அவர்களையும் சந்தித்தார். முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவியை அந்த அம்மையாருக்கு வழங்கினார்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அரசு வழங்கி வந்த மாத ஒய்வூதியத் தொகையை ரூ.250 லிருந்து 350 ஆக உயர்த்தினார். இதன் வாயிலாக 5,783 தியாகிகள் பயன்பெறுகின்றனர்.



விடுதலைப் போராட்டம், மொழிப் போராட்டம், எல்லைப் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்ட தியாகிகள் மரணம் எய்தினால், அவர்களுக்கு, தாசில்தார் தகுதிக்குக் குறையாத அரசு அலுவலர் ஒருவர் நேரிற் சென்று இறுதி மரியாதை செலுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார் முதல்வர்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதேசிக் கப்பலைச் செலுத்தியவர் வ.உ. சிதம்பரனார். கப்பல் ஓட்டிய தமிழன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற அவர், விடுதலைப் போராட்டக் காலத்தில் கோவைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது, அங்கு பலவித கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். கல்லுடைத்தார். செக்கிழுத்தார்; தொல்லைப்பட்டார். அவர் இழுத்த செக்கை நினைவுச் சின்னமாக்குவதற்கு எண்ணிய முதல்வர் கலைஞர், 1972-இல் அதனை கோவையிலிருந்து சென்னைக்கு வரவழைத்து, அரசினர் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் இடம் பெறச் செய்து, பல்லாயிரக்கணக்கான மக்களின் பார்வைக்கு வைத்தார். இதன் மூலம் சிதம்பரனாரின் தொண்டினை அனுதினமும் நினைவு கூரச் செய்தார்.

சிதம்பரனாரிடம் அவருக்குள்ள அன்பை - ஈடுபாட்டைத் தெரிவிக்கும் வகையில் அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

சிதம்பரனாரின் பேத்தி திருமதி ஏ.எஸ். சிதம்பரவடிவாம்பாள் அவர்கள், ''என் மருமகன் பி.எஸ்சி, பிஎட் படித்து விட்டு, வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து 13 ஆண்டுகளாகியும் வேலை கிடைக்கவில்லை. மிகவும் கஷ்டப்படுகிறார். அருள்கூர்ந்து வேலை வாய்ப்பை அவருக்கு ஏற்படுத்தித் தரவேண்டும்'' என்ற விண்ணப்பத்தை முதல்வர் கலைஞர் அவர்களுக்கு அனுப்பினார். அதனைக் கண்ணுற்ற முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தார். தமிழகப் பள்ளிக்கல்வித் துறையில் பள்ளி உதவி ஆசிரியர் பணியில் சிதம்பரவடிவாம்பாளின் மருமகனை நியமிப்பதற்கு ஆணையிட்டார்.

மகாகவி பாரதியின் நண்பரும் அவரது நூலை முதன் முதலில் பதிப்பித்தவரும், விடுதலைப் போராட்ட வீரருமான பரலி சு. நெல்லையப்பருக்கு அரசு ரூ.100 மாத ஓய்வூதியமாக வழங்கியது. பின்னர் 1971-இல் அவர் மறைவெய்தியதால் ஓய்வூதியம் நிறுத்தப் பட்டுவிட்டது. தற்போது நலிவுற்ற நிலையில் உள்ள அவரது மகள் திருமதி பூங்கோதை அவர்கள், 'வாழ்க்கையில் நலிவுற்று வருந்துவதாகவும், தன் தந்தைக்கு அளிக்கப் பட்டது போலவே தனக்கு அரசு நிதி உதவி வழங்க வேண்டும்' என்றும் முதல்வர் கலைஞர் அவர்களிடம் விண்ணப்பித்ததன் பேரில், அந்த வேண்டுகோளை மதித்து, உடனடியாக மாதம் ரூ.500 உதவித் தொகையைஅவரதுஆயுட்காலம்வரை அவருக்கு அரசு தருவதற்கு ஆணையிட்டார்.



நாமக்கல் கவிஞர் நினைவுச் சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு விழா

அண்ணல் காந்தி அடிகளிடம் முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பெருத்த மரியாதை உண்டு. அவரது போராட்ட முறைகளில் முதல்வருக்குப் பிடித்தம் உண்டு.

தென் ஆப்பிரிக்காவில் நடத்திய போராட்டத்தின் விளைவாக-அதில் கலந்து கொண்டு சிறை சென்று- இளம் வயதிலேயே தனது இன்னுயிரை நீத்த தில்லையாடி வள்ளியம்மைக்கு தென் ஆப்பிரிக்காவில் நினைவு மண்டபம் கட்ட முயன்றனர். அது நடைபெறவில்லை. அதற்காக அண்ணலே மனம் வருந்தியிருக்கிறார்.

அந்தத் தில்லையாடியில் வள்ளியம்மைக்கு 1971-இல் நினைவு மண்டபம் எழுப்பி, அண்ணல் காந்தியின் எண்ணத்தை நிறைவேற்றினார் முதல்வர் கலைஞர்.

அண்மையில் காந்தியடிகளின் பிறந்தநாளான 2.10.89 அன்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில் கலந்து கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள், நுங்கம்பாக்கம் நெடுஞ் சாலைக்கு 'உத்தமர் காந்தியடிகள் சாலை' எனப் பெயர் சூட்டினார்.

சென்னை கத்திப்பாரா சந்திப்பிலிருந்து அண்ணா நகர் வரையிலான சாலைக்கு பண்டித ஜவகர்லால் நேரு சாலை' எனப் பெயர் இட்டார்.

திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு 'சுப்பிரமணிய சிவா மாளிகை' என்று பெயர் இட்டார்.

விருதுநகரில் உள்ள, காமராசர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்கு 'குமாரசாமி ராஜா நகரம்' எனப் பெயர் சூட்டினார்.

மதுரை அருப்புக்கோட்டை இரயில் மார்க்கத்தில் வில்லாபுரம் - தெற்கு வாசல் ஆகியவற்றை இணைக்கும் ரயில்வே மேம்பாலத்திற்கு 'என்.எம்.ஆர். சுப்புராமன் மேம்பாலம்' என்று பெயர் சூட்டினார்.

இத்தகைய திருத்தொண்டின் வாயிலாக விடுதலைப் போர் வீரர்களிடம் தனக்குள்ள மரியாதையை, மதிப்பை - ஈடுபாட்டை- பாசத்தை - உணர்த்தி வருகிறார் முதல்வர் கலைஞர்.

—எஸ்.எஸ். சுந்தரம்

*With best compliments from:*

**THE TUTICORIN SPINNING MILLS LTD.,**
106, Palayamcottai Road, Tuticorin - 628 008

We spin Single, Double Yarns & Threads in Hank/Cone Form,
From 20s to 100s Carded/Combed from Domestic and Export Markets.

Spindles: 42800

Founder:
A.M.M. SINNAMANI NADAR

MANAGING DIRECTOR
A.M.M.S. GANESAN

JOINT MANAGING DIRECTOR
G. VETTIVEL, B.E.,

*With best compliments from:*

**M/s. ARASAN TEXTILE MILLS (P) LTD.,**
**1/1 South Cotton Road,**
**TUTICORIN-628 008**

சுவராஜ் மஸ்தா, T சீரிஸ் உலகின் முதன்மையான 6 டன் வாகனம். இந்தியச் சாலைக்கு ஏற்றவாறு உறுதியாக உருவாக்கப்பட்டது.

15% அதிகமான சரக்குப் பரப்பளவு மேலும் அதிகச் சரக்குகளை ஏற்றிச் செல்ல வழி செய்கிறது. ஒவ்வொரு டிரிப்பிலும் அதிக இலாபம் கிடைக்கும்.

மேம்படுத்திய டிசைன் முன்புற, பின்புற சஸ்பென்ஷன் ஸ்பிரிங்குகள் இன்னும் கனமான சுமைகளை ஏற்றிச் செல்ல வழி செய்கிறது.



**இவைகளைப் போல மற்றும் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டதுதான்**
**"சுவராஜ் மஜ்டா"**
**"மஜ்டா" விற்கு நிகர் "மஜ்டா" தான்**
**மேலும் விவரங்களுக்கு**

**ராஜீவ் & கோ**
**15/538, மேட்டுப்பாளையம் ரோடு, (அவினாசிலிங்கம் கல்லூரி அருகில்)**
**கோவை-641 043 போன்: 41868**



# ஏழைப் பெண்கள் நலனுக்கு ஏற்றமிகு திட்டங்கள்



**தமிழக அரசு பல்வேறு சமூக நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது.**

**இந்தத் திட்டங்களின் மூலம் ஏராளமான பெண்டிர் பயனடைந்து வருகின்றனர்.**

**'ஏழைப் பெண்களின் கண்ணீரைத் துடைக்கும் அரிய திட்டங்கள் எனப் பலரும் பாராட்டி வருகின்றனர். பத்திரிகைகளும் வரவேற்று எழுதியுள்ளன**

**இந்தத் திட்டங்களின் மூலம் 1989-90 நிதி ஆண்டில் 30.9.89 முடிய பயனடைந்தோர் விவரம் வருமாறு:**

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்**

சென்னை மாவட்டத்தில் 46 பேர்; செங்கை அண்ணா மாவட்டத்தில் 4,36 பேர்; வட ஆர்க்காடு மாவட்டத்தில் 626 பேர்; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 335 பேர்; தஞ்சை மாவட்டத்தில் 553 பேர்; திருச்சி மாவட்டத்தில் 466 பேர்; மதுரை மாவட்டத்தில் 213 பேர்; திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் 102 பேர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் 130 பேர்; சிதம்பரனார் மாவட்டத்தில் 129 பேர்; பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் 143 பேர்; காமராஜர் மாவட்டத்தில் 100 பேர்; திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 228 பேர்; புதுக்கோட்டை மாவட்டத்தில் 184 பேர்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 164 பேர்; சேலம் மாவட்டத்தில் 230 பேர்; பெரியார் மாவட்டத்தில் 135 பேர்; தருமபுரி மாவட்டத்தில் 139 பேர்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 142 பேர்; நீலகிரி மாவட்டத்தில் 70 பேர்; ஆக மொத்தம் இத்திட்டத்தின் கீழ் 4,571 பேர் பயனடைந்துள்ளார்கள்.

**டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்**

சென்னை மாவட்டத்தில் 1,865 பேர்; செங்கை-அண்ணா மாவட்டத்தில் 2,832 பேர்; வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1,156 பேர்; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 220 பேர்; தஞ்சாவூர் மாவட்டத்தில் 20 பேர்; திருச்சி மாவட்டத்தில் 475 பேர்; மதுரை மாவட்டத்தில் 309 பேர்; திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் 7 பேர்; சிதம்பரனார் மாவட்டத்தில் 56 பேர்; பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் 569 பேர்; திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 3,934 பேர்; புதுக்கோட்டை மாவட்டத்தில் 40 பேர்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 401 பேர்; சேலம் மாவட்டத்தில் 202 பேர்; பெரியார் மாவட்டத்தில் 149 பேர்; தருமபுரி மாவட்டத்தில் 87 பேர்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 568 பேர்; ஆக மொத்தம் 12,890 பேர் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளார்கள்.



**விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம்**

சென்னை மாவட்டத்தில் 10 பேர்; செங்கை அண்ணா மாவட்டத்தில் 24 பேர்; வட ஆர்க்காடு மாவட்டத்தில் 43 பேர்; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 5 பேர்; தஞ்சாவூர் மாவட்டத்தில் 75 பேர்; திருச்சி மாவட்டத்தில் 100 பேர்; மதுரை மாவட்டத்தில் 14 பேர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் 15 பேர்; சிதம்பரனார் மாவட்டத்தில் 15 பேர்;; பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் 13 பேர்; காமராஜர் மாவட்டத்தில் 5 பேர்; திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 31 பேர்; புதுக்கோட்டை மாவட்டத்தில் 38 பேர்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 33 பேர்; சேலம் மாவட்டத்தில் 4 பேர்; பெரியார் மாவட்டத்தில் 18 பேர்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 27 பேர்; நீலகிரி மாவட்டத்தில் 8 பேர். ஆக மொத்தம் 478 பேர் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளார்கள்.



**அன்னை அஞ்சுகம் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்**

சென்னை மாவட்டத்தில் 30 பேர்; செங்கை அண்ணா மாவட்டத்தில் 22 பேர்; வட ஆர்க்காடு மாவட்டத்தில் 34 பேர்; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 10பேர்; தஞ்சாவூர் மாவட்டத்தில் 21 பேர்; திருச்சி மாவட்டத்தில் 16 பேர்; மதுரை மாவட்டத்தில் 6 பேர்; திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் 2 பேர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 பேர்; சிதம்பரனார் மாவட்டத்தில் 3 பேர்; பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் 5 பேர்; காமராஜர் மாவட்டத்தில் 5 பேர்; திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 5 பேர்; புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 பேர்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 பேர், சேலம் மாவட்டத்தில் 29 பேர்; பெரியார் மாவட்டத்தில் 7 பேர்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 15 பேர்; ஆக மொத்தம் 219 பேர் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளார்கள்.



# சாதனைக்குச் சான்று

## நூறு நாட்களில் சாதனை!

தேர்தலின்போது மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் தி.மு.கழக அரசால் சுறுசுறுப்பாகச் செயல்பட முடிந்திருக்கிறது. வன்னியர் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவீத இட ஒதுக்கீடு; பெண்களுக்குச் சொத்தில் பங்கு; எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த பெண்களுக்குத் திருமணச் செலவுக்குரூ5 ஆயிரம் உதவி; கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு மாதம் 50 ரூபாய் வீதம் நான்கு மாதங்களுக்கு மொத்தம் 200 ரூபாய் உதவி.

-என்று திமு.கழகம் நூறே நாட்களில் மளமள வென்று சாதனைகளை அள்ளிக் குவித்திருப்பதற்கு இந்தப் பாரபட்சமற்ற கண்ணோட்டமும் அணுகுமுறையுமே காரணம்.

-''இதயம் பேசுகிறது' இதழிலிருந்து
(மே, 14-20, 1989)

## நிர்வாகத் திறமை

இரண்டாம் முறையாக ஆட்சிக்கு வந்திருக்கும் கலைஞர் கருணாநிதியின் நிர்வாகம், ஆரம்பமே நன்றாக இருக்கிறது. பொருளாதார நிபுணரை முதல்வரின் நிதித்துறை ஆலோசகராக நியமித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

''அனுபவம் என்பது மிகச் சிறந்த ஆசிரியனுக்குச் சமம். கலைஞர் கருணாநிதியின் கடந்த கால அனுபவங்கள் அவருக்குச் சிறந்த நிர்வாகத் திறமையைத் தரும்.

-முன்னாள் மத்திய அமைச்சர்
திரு. சி. சுப்பிரமணியம்
(திருச்சியில் ஒரு பேட்டியில்
பிப்ரவரி 5-ஆம் தேதி கூறியது)

## ஈடு இணையற்றது!

உள்ளாட்சி மன்றங்களுக்குப் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாக நீடிப்பு, சத்துணவுத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டமை, தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கம், சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் அமைப்பது, கிராம நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்திருப்பது, ஆறு இலட்சத்துக்கு அதிகமான மதுவிலக்கு வழக்குகளுக்கு விரைவில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்திருப்பது, ஏழை, எளிய மக்களுக்கு ஊறு ஏற்படாத வகையில் வருவாயைப் பெருக்குதல், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மீனவர் போன்றோருக்குச் சலுகைகள் அளித்திருப்பது போன்ற நீண்ட பட்டியல் நூறு நாள் சாதனையாக விரியும். Tap the Rich and Pat the Poor) என்றார் அறிஞர் அண்ணா. 'பணக்காரரிடம் எடுத்து ஏழைகளுக்குக் கொடு' என்ற வழியில் பெரியாருடைய சீர்திருத்தக் கருத்தும், ராஜாஜியின் அரசியல் விவேகமும், பெருந்தலைவர் காமராஜரின் சோஷலிச சமுதாய அரசியல் விழைவும் ஒருங்கு சேரப் பெற்ற தலைவர் கலைஞர் அவர்கள், 100 நாட்களில் செய்த பணியும், கொண்ட துணிவும், திறனும் சென்ற 40 ஆண்டு கால இந்திய வரலாற்றில் ஈடு இணையற்ற பெருமை மிக்கவை.

-பேராசிரியர் டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம்
எழுதிய கட்டுரையிலிருந்து,
'குங்குமம்' (5-11- மே, 1989)

## போற்றுதலுக்குரியது!

ரேஷன் கடைகளிலும், மருத்துவமனைகளிலும், பள்ளிகளில் மதிய உணவு வழங்குவதிலும் அமைச்சர்களின் திடீர் விஜயங்களினால் ஓரளவுக்கேனும்-பொறுப்புணர்வு அதிகரித்திருக்கிறது. மதிய உணவின்போது, பள்ளிக் குழந்தைகளுக்கு முட்டை வழங்குவது என்ற முடிவு போற்றுதலுக்கு உரிய ஒரு விஷயம். பருப்பு,· காய்கறி முதலியவற்றை உணவில் சேர்ப்பதாக பாவனை பண்ணிவிட்டுக் கணக்கெழுதி மோசடி செய்வது போல். முட்டையில் நிச்சயம் செய்ய இயலாது. முட்டை குறித்த நாளில் தரப்படவில்லையானால் புகார் கிளம்பும். மேலும் முட்டையில் உள்ளது போல் ஊட்டச்சத்து வேறு எதிலுமே கிடையாது. சைவ உணவுக்காரர்களுக்குக்கூட காந்தியடிகளே சிபாரிசு செய்த உணவு கருவடையா முட்டை. புதிய ஏற்பாட்டினால் கோழிப் பண்ணைகளின் முக்கியத்துவம் அதிகரித்து அவை சிறப்படையும்.

-'கல்கி' இதழிலிருந்து (16-4-1989)



# ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!




200 பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்குவதற்கு 13 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், 10 பெண்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா வாங்குவதற்கு 60 ஆயிரம் ரூபாயும் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது.




ஆதரவற்ற முதியோருக்கு அரசு வழங்கி வந்த உதவித் தொகை ரூ.35 லிருந்து ரூ.50 ஆக 1-5-89 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. உதவி பெறும் முதியோர் எண்ணிக்கைக்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த வரம்பு தற்போது முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. அதனால், தகுதியுடைய அனைவரும் உதவி பெறலாம்.




புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், நகர்கள், கட்டடங்கள் போன்றவற்றுக்கு நாட்டுக் குழைத்த நல்லோர்கள், தியாகிகள் பெயர்கள் சூட்டப்பட்டு வருகின்றன.




90 ஆயிரம் சத்துணவுத் திட்ட ஊழியர்களை நிரந்தரமாக ஆக்கி, பணிப் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது.




மரணமடையும் அரசு ஊழியர் குடும்பத்திற்கு, குடும்ப நல நிதியாக வழங்கப்பட்டு வந்த 20,000 ரூபாய் 40,000 ரூபாய் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு உள்ளது.

விடுதலை வீரர்களுக்கு வழங்கி வந்த மாத ஓய்வூதியம், ரூ.250/-லிருந்து ரூ.350/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,763 விடுதலை வீரர்கள் பயன் பெறுகின்றனர்.







பயிற்சி டாக்டர்களின் மாத ஊதியம் ரூ.750 லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப் பட்டது. அத்துடன் அரசு ஊழியர்களின் ஊதியம், ஊதியக் குழுவினால் பரிசீலிக்கப் படும்போது, பயிற்சி மருத்துவர்கள் மற்றும் பட்டமேற்படிப்பு மாணவர்களின் உதவித் தொகை குறித்தும் பரிசீலிக்கப்படும் என உறுதி வழங்கப்பட்டு உள்ளது.




தந்தை பெரியாரின் கனவு நனவாகும் வகையில் பரம்பரைச் சொத்தில் ஆண் வாரிசுகள் போல, பெண் வாரிசுகளும் உரிமை பெறச் சட்டத்திருத்தம்.

ஊனமுற்றோர், கைம்பெண், ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட உதவித்தொகை ரூ.[illegible] லிருந்து ரூ.50 ஆக உயர்த்தப்பட்டது.







[illegible] அதற்கு மேலும் படித்த [illegible]ன் திருமணச் செலவுக்கு ரூ.5,[illegible] நிதியுதவி அளிக்கப்படுகிறது




ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 8-ஆம் மாதத்திலிருந்து குழந்தை பெற்ற 2 மாதம் வரை மாதம் ரூ.50 வீதம் 4 மாதங்களுக்கு மொத்தம் ரூ.200 உதவித்தொகை வழங்கப்படுகிறது.




உள்ளாட்சி மன்றங்களின் பதவிக்காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டாக நீட்டிக்கப் பட்டது.




அரசுப் பணிகளில் சேர வயது வரம்பு 28 வயதிலிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது.




தமிழகத்தில் உள்ள மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் 20 சதவீதம் தனி இட ஒதுக்கீடு அளிக்கப் படுகிறது. இதன் மூலம் இட ஒதுக்கீடு பிரச் சினைக்குத் தீர்வு காணப்பட்டது.




83 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ஐந்து முறை ஐந்து கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது.

# பால் வளம் பெருகிட...

ரூ.68.19 கோடி செலவில் பல்வேறு பால்பெருக்குத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ரூ.6 கோடி செலவில் பால்பவுடர் தயாரிக்கும் ஆலை அமைக்கப்பட வுள்ளது.

பால் பண்ணைகளில் பணி புரியும் ஊழியர்க்கு தினமும் இலவச மாக அளிக்கப்பட்டு வந்த 150 மி.லிட்டர் பால் 500 மி.லிட்டராக (அரை லிட்டர்) உயர்த்தப்பட்டது.

தமிழகத்தின் தினசரி பால் உற்பத்தியை, தற்போதுள்ள அள வான 1,35,000 லிட்டரிலிருந்து 1,75,000 லிட்டராக உயர்த்தப் புதிய திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது.

1980-ஆம் ஆண்டு நவம்பரில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுப் பதவி நீக்கம் செய்யப்பட்ட தமிழ் நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தைச் சேர்ந்த 489 ஊழி யர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.



கடந்த மூன்றாண்டுகளாக வழங்கப்படாதிருந்த திரு.வி.க., பாவேந்தர் பாரதிதாசன் விருதுகள் ஒரு சேர வழங்கப்பட்டதுடன் விருது வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மதுரையில் நடைபெற்ற பால் வளத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் காட்டும் வகையில் மாதவரம் பால்வளத் தொழிலாளர்கள் ஒருநாள் அடை யாள வேலை நிறுத்தம் செய்த போது முந்தைய அரசினால் ஏறக் குறைய 500 பேர் வேலை நீக்கம் செய்யப் பெற்றனர். இந்த அரசு பொறுப்பேற்றதும் அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொண்டது.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் 17-இல், 13 ஒன்றியங்களிலும், இணையத் திலும் பணிபுரியும் ஊழியர்களுக்கு 1.6.88 முதல் புதிய சம்பள விகிதம் அமல்படுததப்படுகிறது. இதன்மூலம் 5,761 ஊழியர்கள் பயனடைகின் றனர். அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.3.6 கோடி அதிகம் செல வாகிறது. எஞ்சியுள்ள பால் உற் பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங் களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## ஏழு ஆலைகளை ஏற்றுக் கொண்டது அரசு.



இந்த அரசு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, தமிழ்நாட்டில் 22 ஆலைகள் மூடப்பட்டு இருந்தன. அரசு இந்தப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு முனைப்புக் காட்டியது. 7 ஆலைகளின் நிர்வாகத்தை அரசே ஏற்றுக் கொண் டது. ஏனைய 15 ஆலைகளைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருகிறது.

## மீனவர்களுக்குப் புதிய சலுகை

மீனவர்களுக்கும். அவர்களின் குடும்பங்களுக் கும் பொருளாதாரப் பாதுகாப்பு அளிப்பதற்காக தமிழக அரசு "மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தை" 1984-ஆம் ஆண்டிலிருந்து செயல் படுத்தி வருகிறது. ஆண்டு சந்தாவான 12 ரூபாயில் மத்திய அரசு 6 ரூபாயும், மாநில அரசு 3 ரூபாயும், மீனவர் 3 ரூபாயும் கட்டி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஆனால் விபத்துக் காப்புறுதித் திட்டம் மீனவர்களுக்குரிய நல்வாழ்வுத் திட்டம் என்ப தால் 1-7-89 முதல், மீனவரின் பங்கினையும் தமிழக அரசே செலுத்தி விடுகிறது. எனவே இக்காப்புறுதி நிவாரணத் திட்டத்தால் பயன்பெற மீனவர்கள் சந்தாப் பணம் எதுவும் கட்ட வேண்டி யது இல்லை.

**தொழில் வளர்ச்சியில்**

இந்தியாவில் 3-ஆம் இடத்தில் இருந்த தமிழகம் முந்திய ஆட்சிக் காலத்தில் 13-ஆம் இடத்திற்குத் தள்ளப்படும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அந்த நிலையை மாற்றி, தொழில் வளத்தில் தமிழகம் முன்னேற்றப் பாதையில் நடைபோடுவதற்குரிய வழி வகைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

முதல்வர் கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்றவுடன் ஐம்பதிற்கு மேற்பட்ட தொழிலதிபர்களை அழைத்துப் பேசி, தொழில் வளர்ச்சி பெறுவதற்காக அவர்களுக்குத் தேவைப்படும் வசதிகளை நிறைவேற்றித் தருவதாக உறுதி அளித்தார். வெளி மாநிலத் தொழிலதிபர்களையும், 'தமிழகத்திற்கு வந்து தொழில் வளம் பெருக்குங்கள்' என்று கேட்டுக் கொண்டார்.

மாதம் ஒரு தொழிற்சாலையைத் தொடங்குவதை இந்த அரசு தனது குறிக்கோளாகக் கொண்டு பீடு நடைபோடுகிறது.

# மாதம் ஒரு தொழிற்சாலை

**ரூ.236** கோடிக்கான 10 புதிய தொழிற்சாலைகள், அவற்றையொட்டி மேலும் 5 புதிய தொழிற்சாலைகள்-'டிட்கோ' மூலமாக, கூட்டுத் துறையில் 224 கோடி ரூபாய் செலவில்-தொடங்கப்படவிருக்கின்றன.

சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூருக்கு அருகில் ரூ.140 கோடி மூலதனத்தில் குதிரைமொழித்தேரியில் 'இலுமனைட்' என்ற மணலிலிருந்து டைட்டானியம் டையாக்லைடு தயாரிக்கும் தொழிற்சாலை,

திருச்செந்தூர் வட்டத்தில் ரூ.20 கோடி மூலதனத்தில் 'இலுமனைட்' என்ற பொருளைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை,

இவ்வாண்டிலேயே ரூ.9 கோடி மூலதனத்தில் மாக்னசைட் தொழிற்சாலை,

ரூ.10 கோடி மூலதனத்தில் கெனக்டர் என்ற தொழிற்சாலை ஆகியவை அமைக்கப்படும்.

வருகிற ஆண்டுகளில் மாதத்திற்கு ஒரு தொழில் தமிழகத்தில் தொடங்குகின்ற அளவிற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மூடிய மில்களைத் திறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பல மில்கள் திறக்கப்பட்டுள்ளன.

மாநில முழுவதும் தொழிலில் பின்தங்கியுள்ள 105 வட்டங்களுக்கு உதவிடும் வகையில் தொழில் ஊக்க உதவிகள் முறைப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டு உள்ளன.

ஆறு புதிய தொழில் வளர்ச்சி மையங்கள்.

கூட்டு இணைத் துறைகளில் (New Projects in Joint Sector and Associate Sector) புதிய திட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.

கடந்த ஆறு மாதங்களில் தொழில் வளர்ச்சிக்காகப் புதிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து இந்தியா முழுவதுமுள்ள தொழிலதிபர்கள் மனநிறைவு தெரிவித்துப் பாராட்டியுள்ளதோடு தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்யவும் ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர்.

ஆக்கியவரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்



உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA





16-11-1989 ஆ-1

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் ★
2
எழும்பூர், சென்னை-600008.




காமராசர் மாவட்டம் விருதுநகரில் 8-10-89 அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திரு. குமாரசாமிராஜா, திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பி ஆகியோரின் திருவுருவப் படங்களையும் பெயர்ப் பலகைகளையும் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் ஆகியோர் உடன் உள்ளனர்.

## இந்த இதழில் ...


| | |
|---|---|
| முறையான வழியில் நிறைவான பணிகள் | 2 |
| குணநாயகர் நேரு (மாண்புமிகு கலைஞர் கவிதை) | 5 |
| தொழில் மயமாகும் தமிழகம் | 8 |
| தமிழக அரசின், மனித நேயத் திட்டங்கள் | 9 |
| சிறுதொழில் வளர்ச்சிக்குச் சீரிய திட்டங்கள் | 14 |
| மகளிர் நலம் காக்கும் மறுமலர்ச்சித் திட்டங்கள் | 15 |
| வேலை வாய்ப்புஅளிக்கும் விசைத்தறிக் கூடம் | 17 |
| காற்றாலைகள் | 21 |
| ஏழைப் பெண்களுக்கு வாழ்வு தரும் திட்டம் | 24 |
| தென்னிந்தியாவின் வாணிப நுழைவாயில் | 27 |
| தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் | 29 |
| காவல்துறையின் பணிகள் சிறந்து விளங்கிட | 41 |
| போக்குவரத்து ஊழியர்களுக்குப் பொற்காலம் | 45 |
| ஏழை எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் | 47 |
| நீண்ட நாள் கோரிக்கைக்கு நல்லதோர் திட்டம் | 48 |



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல - கார்த்திகை - 1

மலர்: 20 16-11-1989 இதழ்: 10




# காகங்கள் கூடுவதும் மேகங்கள் கூடுவதும்

கூட்டுறவுத் துறை என்பது பேரறிஞர் அண்ணா அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட ஒரு துறை, போற்றப்பட்ட ஒரு துறை. நான் இதற்கு முன்பு முதல்வராகப் பொறுப்பேற்ற நேரத்தில் புதுக்கோட்டையில் ஒரு கூட்டுறவு வங்கியின் விழாவிலே கலந்து கொண்டபோது சொன்னேன். கூட்டுறவிற்குச் சின்னமாக வானவில்லின் வண்ணத்தை நாம் அமைத்துக் கொண்டிருக்கின்றோம். பல வண்ணங்கள் ஒன்று கூடியிருப்பதைப் போல, இந்தக் கூட்டுறவு இருக்க வேண்டும். அதிலே காணுகின்ற அந்தப் பொலிவும் எழிலும் இந்தக் கூட்டுறவுத் துறையிலேயும் இருந்திட வேண்டும் என்பதை, சுட்டிக் காட்டிவிட்டு ஒன்றைச் சொன்னேன்.

கூட்டுறவு என்பது காகங்கள் கூடி, இருப்பதைப் பகிர்ந்து கொண்டு போவது அல்ல. கூடுவது, காகங்கள் கூடுவதைப் போல இருக்கக் கூடாது. கூட்டுறவு மேகங்கள் கூடுவதைப்போல இருக்க வேண்டும். மேகங்கள் கூடுவது மழையைத் தருவதற்காக. மக்களுக்கு நன்மைகளைக் கொடுப்பதற்காக கூட்டுறவு இருக்க வேண்டும் என்ற கருத்தை அன்றைக்கே நான் தெரிவித்திருக்கிறேன். அந்த வகையிலே இந்த ஆட்சியில் கூட்டுறவுத் துறை நல்ல முறையில் செயல்படும்.

*(28-8-'89 அன்று சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் பவளவிழா புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை)*



# முதல்வர் கலைஞர்

# முறையான வழியில் நிறைவான பணிகள்

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று தேர்தல் நேரத்திலே நூற்றுக்கணக்கான திட்டங்களை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று கூறி இந்த ஆறு, ஏழு மாத காலத்திலேயே எழுபத்தைந்து சதவிகித வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஒரே அரசு இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலே உள்ள தி.மு. கழக அரசுதான்.

இருந்தாலும்கூட ஏழை, எளியவருக்கு இலவசக் கல்வி குறிப்பாக எந்த ஜாதியிலே பிறந்த பெண்ணாக இருந்தாலும் அவர்கள் ஏழைகளாக இருப்பார்களேயானால் அவர்களுக்குப் பட்டப்படிப்பு வரையிலே இலவசக் கல்வி, பட்டப்படிப்பு வரையிலே ஆதி திராவிடர்களுக்கு இலவசக் கல்வி, பட்டப் படிப்பு வரையிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச கல்வி , திருமணமாகாமல் இருக்கின்ற ஏழை வீட்டுப் பெண்களுக்கு, அவர்கள் எட்டாவது வரையிலே படித்திருப்பார்களேயானால் படிக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்துவதற்காக இந்த நிபந்தனையைப் போட்டு இந்த ஆறுமாத காலத்திலே ஏறத்தாழ ஐயாயிரம் பெண்களுக்கு இந்த திருமண உதவி தலைக்கு ஐயாயிரம் என்று தரப்பட்டிருக்கிறது.

கர்ப்பவதிகளுக்கு ஏழைகளாக இருந்தார்களேயானால் ஆதரவற்ற நிலையிலே உள்ளவர்களுக்கு இருநூறு ரூபாய் அவர்களின் பேறு காலத்திலே முதலிலே நூறு ரூபாயும் பிறகு நூறு ரூபாயுமாக இருநூறு ரூபாய் அவர்களுக்கு அந்தக் குழந்தையைக் காப்பாற்ற அவர்களின் உடல்நலத்தைப் பேணுவதற்காக 200 ரூபாய் வழங்கப்படுகிறது. இதுதவிர இலவச அரிசி, இலவச வேட்டி, சேலை இவ்வளவும் ஏழை எளியவர்களுக்கு வழங்குகின்ற இந்த ஆட்சிக்கு இருக்கின்ற ஒரே சங்கடம் உணவுப் பிரச்சினையிலே இன்னும் நாம் போதுமான அளவிற்கு ஏழை எளியவர்களுக்குச் செய்ய முடியவில்லை என்ற ஏக்கம் எனக்கு இருக்கின்றது. அது என்னுடைய இதயத்தைத் துளைத்துக் கொண்டிருக்கிறது. சரியான உறக்கம் இல்லாமல் நான் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன். காரணம் வேண்டுமென்றே நமக்கு மேலேயிருக்கிற ஒரு அரசு டெல்லியிலே இருக்கின்ற அரசு நமக்குத் தர வேண்டிய அரிசியைத் தர மறுக்கிறது. காரணம் தேர்தலை, அரசியலை மனதிலே வைத்துக்கொண்டு இப்படி மக்களுடைய வயிற்றிலே அடிக்கின்ற காரியத்தை அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள்.



அதற்கு ஒரே உதாரணம் உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால் நாங்கள் தேர்தலிலே வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று வள்ளுவர் கோட்டத்திலே பதவிப் பிரமாணம் செய்து கொண்டு, அன்று மாலை கடற்கரையிலே நடைபெற்ற பாராட்டு விழா கூட்டத்திலே கலந்து கொண்டு மறுநாள் நாங்கள் கோட்டைக்குள்ளே போய் அமருகிறோம். டெல்லியிலிருந்து உத்தரவு வருகிறது. என்ன உத்தரவு தெரியுமா? இதுவரையிலே 1.75 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கின்ற மோட்டா ரக அரிசியை 2.44 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறோம். 2.25 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கின்ற சன்னரக அரிசி ரூ.3.04க்கு உயர்த்தியிருக்கிறோம். 2.50 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிற மிகவும் சன்னரக அரிசியை ரூ. 3.25 என்று நாங்கள் உயர்த்தியிருக்கிறோம் என்று அரிசி விலையை உடனடியாக உயர்த்தி, மத்திய அரசு அறிவித்தது. ஆனால் சிலர் என்னைப் பார்த்துக் கேட்டார்கள், மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தச் சொல்லியிருக்கிறதே, இந்தியாவிலேயே உள்ள எல்லா மாநிலங்களிலும் உயர்த்தி விட்டார்களே, நீங்கள் உயர்த்துவீர்களா என்று கேட்டபோது நான் சொன்னேன், இதனால் எத்தனைக் கோடி நஷ்டம் வந்தாலும் சரி நாங்கள் அரிசி விலையை உயர்த்தப் போவதில்லை என்று.

இன்றைக்கும் நாங்கள் தந்து கொண்டிருக்கிற மோட்டா ரகம் ரூ.1.75க்குத்தான் தொடர்ந்து தருவோம். அதைப் போல சன்னரகம் ரூ.2.25க்குத்தான் தொடர்ந்து தருவோம். அதைப்போல மிகவும் சன்னரகம் அதை ரூ.2.50க்குத்தான் தொடர்ந்து தருவோம் என்று சொல்லியதன் காரணமாகவும், சத்துணவுத் திட்டத்திற்கு அதிக விலை கொடுத்து அரிசியை வாங்கி நாங்கள் குழந்தைகளுக்குச் சோறு போடுவோம், முட்டை வழங்குவோம், ஆக இந்தக் காரணத்திற்காகவும், ஏறத்தாழ அதிகச் செலவு உண்மையான விலை போக நாங்கள் கையிலிருந்து — அரசாங்கம் கையிலிருந்து செய்ய வேண்டிய அதிகச் செலவு கிட்டதட்ட 280 அல்லது 290 கோடி ரூபாய்.

நம்முடைய கைத்தறித்துறையை எடுத்துக் கொண்டால் நான் முதலில் முதலமைச்சராக 76-ஆம் ஆண்டு வரை இருந்தேனே அப்போது 13 நூற்பாலைகள் அரசு கூட்டுறவு நூற்பாலைகளாக 13 இருந்தன. அந்தப் பதிமூன்று ஆலைகளிலும் அரசுக்கு நல்ல வருமானம் வந்து கொண்டிருந்தது. பிறகு பத்து வருடம் இன்னொரு ஆட்சி அது என்ன ஆட்சி என்று உங்களுக்குத் தெரியும். அந்த ஆட்சியில் 13-ஆக இருந்த நூற்பாலை 18 ஆலைகளாக வளர்ந்தது. பதினெட்டு ஆலைகளாக வளர்ந்த பிறகு இலாபம் வர வேண்டும் அல்லவா? இலாபம் வரவில்லை. 38 கோடி ரூபாய் இந்தப் பத்தாண்டு காலத்திலே அந்த நூற்பாலைகளிலே நஷ்டம் வந்தது.

நாம் ஆட்சிக்கு வந்த இந்த ஆறு மாத காலத்தில் இன்றைய தினம் 33 கோடி ரூபாய் வந்த நஷ்டமும் இன்றைக்கு இல்லை. அதற்கு மாறாக ஒரு கோடி ரூபாய் இலாபம் இப்போது ஆரம்பமாகியிருக்கிறது.

சாராய சாம்ராஜ்யத்தில் 300 கோடி ரூபாய் எங்கேயோ போய்க் கொண்டிருந்தது. ஆனால் அந்தச் சாராய சாம்ராஜ்யத்தினுடைய அடிவேரையே இன்றைக்கு வீழ்த்திவிட்டு, ஒரு செங்கல்கூட, சாராய சாம்ராஜ்யத்தின் கோட்டையிலே இருக்கக்கூடாது என்று அந்த சாராய சாம்ராஜ்யத்தின் கோட்டையை அடித்து, துவைத்து, தூள்தூளாக ஆக்கிவிட்டு, (பலத்த கைதட்டல்) இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்திற்கு முன்பு 120 கோடி ரூபாய் அதிலே வந்த வருமானத்திற்குப் பதிலாக 200 கோடி ரூபாய் அதிகமாக இந்த ஆண்டு 320 கோடி ரூபாய் சாராய சாம்ராஜ்யத்தை அழித்ததன் காரணமாக நமக்கு வரத் தொடங்கியிருக்கிறது.

இப்படியெல்லாம் இந்த ஆட்சியின் சாதனைகள் மக்களுக்காகச் செய்யவேண்டிய காரியங்கள் அத்தனைக்கும் நாம் நேர்மையான வழியில், நியாயமான வழியில் நமக்கு வரவேண்டிய பணத்தை, அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணத்தைச் சேகரித்து இந்தப் பணிகளை இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறோம்.

*(25.10.89 அன்று சென்னையில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழாவில்)*



# விவசாயிகளுக்காக

## தமிழக அரசின்

## சலுகைகள்-உதவிகள்

| தேர்தல் அறிக்கையில் சொன்னது | | ஆட்சிக்கு வந்தபின் செய்தது |
|---|---|---|
| சிறு விவசாயிகளின் பழைய கூட்டுறவு கடன் பாக்கி அனைத்தும் நீக்கப்படும் |  | ரூ. 106 கோடி கூட்டுறவுக்கடன் ரத்து செய்யப்பட்டது. (முந்தைய ஆட்சியில் ரத்து செய்வதாக அறிவிக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்காகக் கட்டப்படாத 67 கோடி ரூபாயைக் கட்டும் சுமையையும் இப்போது அரசு ஏற்றுள்ளது) |
| விவசாயிகள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய அபராத வட்டி நீக்கப்படும். |  | அபராத வட்டி சுமார் ரூ. 10 கோடி ரத்து செய்யப்பட்டது. |
| விவசாயிகள் பயன்படுத்தும் பம்பு செட்டுகள் உள்ளிட்ட எல்லா சாதனங்களுக்கும் விற்பனை வரி நீக்கப்படும். |  | அதன்படியே விற்பனை வரி ரத்து செய்யப்பட்டது. இதனால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய ரூ. 4 கோடி இப்போது சலுகையாக விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. |
| விவசாயத் தொழிலாளர்கள் இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு உடனடியாக ரூ.3000/- கிடைக்க பாதுகாப்புத் திட்டம் வகுக்கப்படும். |  | விவசாயத் தொழிலாளி விபத்துக்குள்ளாகி மரணம் அடைந்தால் ரூ.10,000 நிதி உதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. |

### இவை மட்டுமல்ல; இதோ பல புதிய திட்டங்கள்!

★ பாசன ஆதாரங்களை ஆய்வு செய்து ஒருங்கிணைந்த பாசன முறைகளை விவசாயிகள் பெற, உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

★ 1989 பிப்ரவரித் திங்கள் முதல் ஜூன் திங்கள் முடிய 10,197 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

★ தங்கு தடையின்றி விவசாயிகள் மின்சாரம் பெற, 14 மணி நேரம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.

★ வறட்சியால் பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரி ரூ.363.55 இலட்சம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ விவசாயிகள் கடன் பெறுவதில் உள்ள சங்கடங்களை நீக்க விரைவில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடத்தப்பட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.





# குணநாயகர் நேரு

## முதல்வர் கலைஞர்



(1970 நவம்பர் 14-ஆம் நாளன்று தமிழக அரசின் சார்பில் சென்னைப்பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் 'நேரு கண்ட ஜனநாயகம்' என்னும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமை வகித்துப் பாடிய கவிதை)

மூன்னை இருள் விலக்குதற்கு
முயல்கின்ற தமிழ் அரசு
முதுபெரியோன் காந்தியாரின்
மூத்த பிள்ளை நேருவுக்கு...
முத்தமிழால் கவி தொடுக்கும்,
புவியரங்கில் புகழ்குவித்த பண்டிதர்க்குக்
கவியரங்கில் மாலை சூட்டும்...
பூத்திருக்கும் தோட்டத்தில் புகுந்துவிட்ட என்றனுக்குக்
காத்திருந்த காட்சியொன்றைக் கவியாக்கித் தருகின்றேன்,
சிரிக்கின்ற மல்லிகையின் காதுகளில் செண்பகம்தான்
ஏதோ சேதி தனைச் சொல்ல;
சேர்ந்திருவர் சாமந்தியிடம் ஓடி....
அவள் செவியில் வாய் வைத்தார்...
பின்னர்
மூவருமே முல்லையிடம் முனகிவிட்டு
அவளோடு
நால்வருமே நந்தவனம் முழுவதும்
நடைபோடத் தொடங்கி விட்டார்
யாரைத்தான் தேடுகின்றார் பூப்பெண்கள்?
கட்டுதற்கு
நாரைத்தான் தேடியலைகின்றாரோ—என எண்ணி
நான் வியந்தேன் ...
தென்றலிலே மணம் பரப்பித் தேடுகின்றார்
தேடுகின்றார்
தெரியவில்லை யாரை என்று...
''முழங்காலை வலிக்குதடி'' என்றாள் முல்லை
''சிவந்ததடி என் பாதம்'' எனச் செண்பகம் இளித்தாள் பல்லை ...
சாமந்தி மல்லிகை இருவர்க்கும் பெருந்தொல்லை—
பூங்காவின் மூலையொன்றில் புலம்பல் ஒலி கேட்டவுடன்
பூப்பெண்கள் ''அதோ, அதோ!'' எனச் சொல்லி
அந்த இடம் பறந்திட்டார் ...

''பூமானே! புகழ்க்குன்றே! போனாயோ என் தலைவா?
கோமானே! கொள்கை வேந்தே! உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே?
எனையெடுத்து முத்தமிந்து இதயத்தில் ஏற்றிக் கொண்டாய் —இன்று
எனைவிடுத்து நீ மட்டும் நெடுந்தொலைவு போய்விட்டாய் ...
என்ன நியாயம்?
இதழுக்குத் தேன் தருவாய்-பதிலுக்கு
நான் தருவேன் ... மறந்தா விட்டாய்?

மார்பகத்தில் அணைத்திருப்பாய்
மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரளும்
மங்கையென்னைப் பிரிவதற்கு உன் மனம்தான் கல்லோ?''
எனக் கதறும் ஒலி கேட்டு
இனிய நறும் பூப்பெண்கள் அருகே சென்றார் ...
மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டி
மயங்கிவிழும் நிலைமையிலே ரோஜா நின்றாள் ...
மல்லிகை முல்லை அருகே சென்று—
''என்னடி ரோஜா இன்னமும் அழுகை?

நல்லவர் இருந்தார் நானிலம் வாழ ...
வல்லவர் இருந்தார் வாரி அணைக்க ...
போனது வருமோ? புலம்பலை நிறுத்து!
பூக்களின் ராணி! புன்னகை காட்டு!''
ஆறுதல் கூறினர், அழகு ரோஜா
தேறுதல் பெறாமல் தேம்பி யழுதாள்.
''இரவு உமிழும் எச்சில் என்பேன் பனித்துளியை-என்
இறைவனது இதழ் முத்தம் அமுதம் என்பேன் ...
அன்றமுதம் தந்தெனக்கு ஆசை காட்டி ...
இன்றென்னை எச்சில் பனித்துளியில்
நனைத்து விட்டார்; என் செய்வேன்?
முடிசூடா மன்னரவர் இனி என்னைச் சூடார்
என நினைக்கும் போதெல்லாம்
முள்ளாகக் குத்துதடி மேனியெல்லாம்!
வாழ்வில் சிரிப்பில்லா எனக்கு இந்தச் சிவப்பெதற்கு?
மனத்தில் மகிழ்வில்லா எனக்கு நறு மணந்தான் எதற்கு? ...
இந்தியச் சிம்மாசனத்தில் அவர் இருந்தார்—அவர்
இதயச் சிம்மாசனத்தில் நானிருந்தேன் ..

உறங்குகின்றார் விழித்தெழுவார்; படி
இறங்கி வந்து பாவையெனை அழைப்பதற்குள் ... அவர் நெஞ்ச
அரங்குதனில் ஆடுதற்குச் சிவப்பாடை புனைந்து நின்றேன்
அதற்குள் காலக்
குரங்கின் கை 'மாலை'யாக ஆக்கிவிட்டார் என் வாழ்வை

போய்விடுங்கள் எனை விடுத்துத் தனியாக!
புனிதனவன் பிறந்த நாளில் கண்புனலை அவன்
காலடிக்குக் காணிக்கை யாக்குதலே
என் கடமை'' ...
ரோஜாவின் சொற்கேட்டுச் சோர்ந்து போனேன் ... தன்
ராஜாவின் பிரிவாலே வாடுகின்ற அவளை யெண்ணிப்
பேசாமல் திரும்பி விட்டேன், இன்றென்

மனைவி கூந்தல் மணம் வீசாமல் போகட்டுமென்று
மலர் எதுவும் பறிக்காமல் வந்துவிட்டேன்-இன்று
மலர் பறித்தால், அது மாவீரன் நேருவுக்கு மாலை தொடுத்திடவே! ... நம்
மடி பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின்
கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை வீரன்
அடி கொடுத்தால் வாங்கிக் கொண்டு
அடக்குமுறை தாங்கிக் கொள்ள
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலை
இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!
என்னெயிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம்—எனினும்
என்னெயிட்டார் விடுதலை வேள்விக்கென்போம்!
பணமலைக்கிடையே பிறந்தார் எனினும் ஏழையை அணைக்கும்
குணமலையாகத் திகழ்ந்தார் என்போம்!
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்;
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்—

இடி இடிக்கும் பேச்சில்-இளமை
துடி துடிக்கும் எழுத்தில்-தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில்-அதிர்
வெடி முழக்கும் செயலில்-விடாப்
பிடி யிருக்கும் குணத்தில்-விடுதலைக்
கொடியிருக்கும் கையில்-கொஞ்சம்
முடியிருக்கும் தலையில்

(இங்கென்ன வாழ்கிறதோ? எனக் கேட்காதீர் எனைப் பார்த்து!)

நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே நேருவானார்...இந்திய
நீர் எல்லைக்கோடு தன்னைப் பெரும்பகைவர் கடந்தபோது-என்ன
நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து, எதுவும்
நேராது நான் இருக்குமட்டும் எனச் சொல்லி நேரு வானார்

துணிவிருந்தால் உள்ளத் தூய்மையிருந்தால்
துன்பம் நேருமா? எனக் கேட்டார் குழந்தையிடம்—
இன்பமே நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும்-
இதனால் 'நேரு மாமா' வானார்...
மதம் கடவுள் நம்பிக்கை, இவைகளிலே
அவர் கொள்கை தனி எனினும்-பிறர்

மனம் புண்படாமல் நல்வழியில் ஆட்சி செய்தார்-தன்
மரணத்தின் பின்னாலே மதச் சடங்கு வேண்டாமெனத்-தக்க
தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்
நடுநிலைத் தன்மை நலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது பூங்குன்றனார் நவின்ற—
''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மொழிக்குத்
தோதாய்க் கொள்கை தொகுத்தே சொன்னார்.
காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க் கர்த்தபம் ஆகும்
ஏலத்தில் சில பேர் கோபுர உச்சியில் குந்திக் கொள்வர்; இந்திய
ஞாலத்தின் தலைவராய் ஜவகர் ஆனது இவ்வித மல்ல!- அவர்
சேலத்து மாம்பழம் - சென்னைக் கடற்கரை -
கொற்கை முத்து - கொள்ளேகால் பட்டு -
தஞ்சைக் கோயில் - தண்புனல் காவிரி -
தறியில் காஞ்சி - தடந்தோள் பாண்டியன் -
கருத்தில் மாறுதல் இருந்த போதிலும்-
காலமானார் நேரு என்றதும்- கண்ணீர் உகுத்தார் கலங்கி அழுதார்
காராக்கிரகம் கிடந்த அண்ணா ...
கண்ணிய அரசியலைப் போற்றிடும் நாட்டில்
கண் நிகர் நேருவைப் புகழ்வோம் பாட்டில்!
படை துள்ளி வரும் - பகை
அள்ளி வரும் - எரி
கொள்ளி வரும் - கரும்
புள்ளி வரும் - சீனக்
கள்ளி வரும் - எனச் சிலர்
எள்ளி வரும்போது - விடி
வெள்ளி வரும் எனப் - பகை
கிள்ளி எறிந்தான் ... இன்று திருப்
பள்ளி அயர்ந்தான் - நேரு -
திருப்பள்ளி அயர்ந்தான்!

'வாய் மடித்துக் கிடந்த தலைமகனை நோக்கி
மணியதரத் தேதேனும் வடுவுண்டாயோ?'' எனத்
தாய் அடித்து மோதி அழும் காட்சிகளைப்
பேய் ஆட்டம் போடுகின்ற போர் முகத்தை
நாய் நரிகள் தீனி தின்னும் கொடுமைக் கூத்தைக்
காய், பழம், பூ, பிஞ்சு, சாய்ந்து விழும் சமர்க்களத்தை - நம்
கலிங்கத்துப் பரணி சொல்லும்; அந்தக்
கலிங்கத்தில் அமைதி பூண்ட அசோக மன்னன்
கண்டெடுத்த அறவழியில் உலகு காக்க நேரு பிரான்
கழுகுகளின் இறக்கை வெட்டி வெண்புறாவைப் பறக்க விட்டார்
விண்ணின் மேலே! ...

''தலையாகிய அறமே புரி
சரி நீதி உதவுவாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசறைவாய்'' இது
அலை மோதிடும் புதுவையின்
கலைமேவிய பாவலன் - நம்
நிலை மாறிடப் பாடிய காவியம்!
ஜனநாயகம் ஜனநாயகமென
ஜவகரும் முழங்கிடச்-சிலர்தம்
தனிநாயகம் சிறந்திடச் செயல்பட்டதை மறந்திடோம்—
பணநாயகம் கணநாழியில் தகர்ந்திடக்
குணநாயகர் நேருவும் உடன் முனைந்திடக்
காலந்தான் போதவில்லை
காலமுமே பொறுக்கவில்லை!





# தொழில் மயமாகும் தமிழகம்

முன்பு தி. .. கழக ஆட்சி நடைபெற்றபோது தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே மூன்றாம் இடத்தில் தமிழகம் இருந்தது. முந்திய ஆட்சிக் காலத்தில் 13-ஆம் இடத்திற்குத் தள்ளப்படும் நிலை ஏற்பட்டு விட்டது. தமிழகத்தைத் தொழில் மயமாக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் அரசுப் பொறுப்பை ஏற்றதும் முதல்கட்டமாக-ஐம்பதிற்கு மேற்பட்ட தொழிலதிபர்களை அழைத்துப் பேசி, தொழில் வளர்ச்சிக்காக அவர்களுக்குத் தேவைப்படும் வசதிகளை நிறைவேற்றித் தருவதாக உறுதி அளித்தார். அனைத்திந்திய அளவிலும் தொழிலதிபர்களையும் அழைத்து, அவர்களுடன் கலந்துரையாடி, தமிழகத்தில் தொழில்களைத் துவக்க ஊக்கம் ஊட்டினார்.

தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையில் 'மாதம் ஒரு தொழிற்சாலை' என்ற இலக்கில் தமிழக அரசு, உறுதியான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

ஏற்கெனவே தி.மு. கழக ஆட்சி இருந்த காலத்தில், முதன் முதலாக இராணிப்பேட்டையில் தொழில் முன்னேற்ற நிறுவனம் அதாவது சிப்காட் தொடங்கப்பட்டு, இன்று இராணிப்பேட்டை தொழில் வளாகம் 1,300 கோடி ரூபாய் முதலீட்டில் நடைபெற்று வருகிறது.

மீண்டும் தமிழக அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், முதல்வர் கலைஞர் சிப்காட் தொழில் வளாகத்தை 31-7-89 அன்று கடலூர் அருகே உள்ள குடிக்காட்டில் தொடங்கி வைத்தார். இரசாயனம் மற்றும் மருந்து தயாரிக்கும் தொழில்களுக்கெனத் திட்டமிடப்பட்டு, கடலூர் சிப்காட் தொழில்வளாகம் ரூபாய் 3 கோடிக்கு மேல் செலவிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஆலம்பாடி கிராமத்தில் அமைய இருக்கும் பில்கோ-கண்ணாடி தொழிற்சாலை, கடலூரில் வள்ளிக்கிழங்கிலிருந்து பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் உஸ்தா-தே பயோடெக் தொழில் நிறுவனம், பூச்சிகொல்லி மருந்து தயாரிக்கும் டான்டக் அக்ரோ கெமிக்கல்ஸ் ஆகிய மூன்று தொழிற்சாலைகளுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 28-9-89 அன்று அடிக்கல் நாட்டியது குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினமே, விருத்தாச்சலத்தில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் கற்குழாய் தொழிற்சாலையில் உற்பத்தியை மீண்டும் துவக்கி வைத்ததும் தமிழகத்தின் தொழில் வள வரலாற்றில் பெருமிதம் தரும் செய்தியாகும்.

இவ்வாறு தமிழகம், தொழில்மயமாகும் மாநிலமாக வளர்ந்து வருவதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.







# தமிழக அரசின் மனித நேயத் திட்டங்கள்

- பிச்சைக்காரர் மறுவாழ்வு
- கண்ணொளி வழங்கும் திட்டம்
- கை ரிக்ஷா ஒழிப்பு
- ஊனமுற்றோர் நல்வாழ்வு
- கருணை இல்லங்கள்
- ரிக்ஷா, ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்களுக்கு நல்வாழ்வுத் திட்டம்
- ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி ரூ. 5,000
- கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுதவி ரூ. 200
- ஏழை எளியோருக்கு ஆண்டில் 5 முறை 5 கிலோ இலவச அரிசி
- முதியோர் உதவித் தொகை மாதம் ரூ.35லிருந்து ரூ.50 ஆக உயர்வு.
- ஏழை எளியோருக்கு இலவச சேலை, வேட்டி
- ஏழைப் பெண்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி
- கலப்புத் திருமணத் தம்பதியருக்கு நிதி உதவி ரூ. 5,000



# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ், ஒரு ஏழைப் பெண்ணுக்கு, ரூ. 5 ஆயிரத்துக்கான காசோலையை வழங்குதல்.

பெண்கள் சமுதாயத்தின் கண்கள் போன்றவர்கள். அதனால் பெண்களின் மறுமலர்ச்சிக்குத்தமிழ்நாடு அரசு முதலிடமும், முன்னுரிமையும் அளித்துள்ளது. சமுதாயத்தில் பெண்களின் தகுதியை உயர்த்தவும், படிக்கின்ற ஆர்வத்தை ஊக்குவிக்கவும் கொண்டு வரப்பட்ட திட்டம்தான், ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ. 5,000 நிதி உதவி அளிக்கும் திட்டம். மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டம் என இத்திட்டம் அழைக்கப்படுகிறது.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 66-வது பிறந்த நாளான 3-6-1989-ஆம் நாள் முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**நிதி உதவி பெறத் தகுதி உள்ளவர்கள்**

நமது மாநிலத்தில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள், 8-ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்திருக்க வேண்டும். திருமணத்தின் போது 18-வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

**ஏழைக் குடும்பம் எது?**

நிலமற்ற விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராகவோ அல்லது சிறு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராகவோ இருக்க வேண்டும். அந்தக் குடும்பத்திற்குச்சொந்த நிலம் இருக்கலாம். அந்த நில உடைமை $2\frac{1}{2}$ . ஏக்கர் நஞ்சையாக இருக்கலாம். அல்லது 5 ஏக்கர் புன்செய்யாக இருக்கலாம்.

குத்தகை நிலத்தில் பயிர் செய்யலாம். அவ்வாறு இருந்தால், ஒரு ஏக்கர் குத்தகை நிலம் அரை ஏக்கர் சொந்த நிலத்திற்குச் சமம் என்ற அடிப்படையில் ஒரு குடும்பத்தின் நில உடைமை கணக்கிடப்படும்.

விவசாயம்சாராத வேலைகள் செய்து வாழும் ஏழைக் குடும்பமாக இருக்கலாம். அத்தகைய குடும்பத்தின் ஆண்டு வருமானம் 5000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

**விண்ணப்பம் செய்யும் முறை**

ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்பங்கள் இலவசமாகக் கிடைக்கும். வறுமை நிலை, வயது, கல்விச் சான்று ஆகியவற்றை வருவாய்த் முறையிலிடம் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து, சமூக நலத்துறையைச் சார்ந்த (எக்ஸ்டென்சன் ஆபீசர்) விரிவாக்க அலுவலரிடத்தில் விண்ணப்பத்தைக் கொடுக்க வேண்டும். விண்ணப்பத்திலுள்ள விவரங்கள் சரியானவையா என்பதையும், திருமணம் நிச்சயமாகியுள்ளதா என்பதையும் இவர் கிராமத்திலுள்ள குறைந்தது இரண்டு சாட்சிகளிடமாவது விசாரித்து அறிந்து, விண்ணப்பத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு (பிடிஓ) அனுப்புவார். ஊராட்சி ஒன்றிய ஆணையர் திருமண உதவி அனுமதி வழங்குவார்.

திருமணத்திற்கு 15 நாள் முன்னதாக ரூ. 5,000 உதவித்தொகை முழுவதுமாக வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முழுப் பொறுப்பு சமூக நலத்துறை இயக்குநரைச் சார்ந்தது. மாவட்டங்களில் மாவட்ட சமூக நல அலுவலர்களும் சென்னையில் மாநகராட்சி ஆணையரும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள்.

இந்தச் சீரிய திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட அனைவரின் ஒத்துழைப்பையும் அரசு அன்புடன் வேண்டுகிறது.





மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், கருவுற்ற பெண்ணுக்கு நிதியுதவி வழங்குதல்.

# டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

கருவுற்ற தாய்மார்களுக்கு அரசின் நிதியுதவி: 200 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டம், 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்' என அழைக்கப்படுகிறது. 3-6-1989 முதல் இத் திட்டம் செயலாக்கப்படுகிறது.

**திட்டத்தின் நோக்கம்**

கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச் சத்து மிகவும் அவசியம். ஆனால், வறுமையின் காரணமாக, கருவுற்ற பெண்கள் போதுமான அளவு ஊட்ட உணவு பெற முடிவதில்லை. உழைக்கவும் இயலவில்லை. இந்தக் குறையினை நீக்கி, அவர்களுக்கு உதவி செய்யும் கருணை உள்ளத்துடன் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது.

குழந்தை பிறப்பதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பிருந்தும், குழந்தை பிறந்த பின் இரண்டு மாதம் வரையிலும் ஆக மொத்தம் நான்கு மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் மொத்தம் 200 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. தற்போது செய்யப்பட்டுள்ள மாற்றத்தின்படி பிரவசத்திற்கு முன்பு அல்லது பிரசவத்திற்குப் பின்பு ரூ. 200 ஒரே சமயத்தில் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. குழந்தை இறந்தே பிறந்தாலும இந்த நிதி உதவி உண்டு. முதல் இரண்டு பிரவசத்திற்கு இந்த உதவி.

**உதவி பெறத் தகுதி உள்ளவர்கள்**

பதினெட்டு வயது நிரம்பிய ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த, கருவுற்ற பெண்கள் அனைவரும் இத்திட்டத்தினால் பயனடையலாம்.

**ஏழைக் குடும்பம் எது?**

நிலமற்ற விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராகவோ அல்லது சிறு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராகவோ இருக்க வேண்டும். அல்லது நில உடைமை இரண்டரை ஏக்கர் நஞ்சை அல்லது ஐந்து ஏக்கர் புன்செய்க்குக் குறைவாக இருத்தல் வேண்டும்..

குத்தகைதாரர்களுக்கு ஒரு ஏக்கர் குத்தகை நிலம் அரை ஏக்கர் சொந்த நிலத்திற்குச் சமம் என்ற அடிப்படையில், ஒரு குடும்பத்தின் நில உடைமை கணக்கிடப்படும்.

விவசாயம் சாராத குடும்பங்களுக்கு ஆண்டு வருமானம் 5000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

கிராமங்கள், நகரங்களில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் கருவுற்று இருப்பதை, சுகாதார நிலையத்தில் பதிவு செய்து இருக்க வேண்டும். கருவுற்ற தாய்மார்கள் நிதி உதவிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதற்குத் தகுதிச்சான்று தனியே தரவேண்டியதில்லை. குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டையை நேரடியாகக் காட்டினால் போதும். எத்தனை குழந்தைகள் பெற்றவர் என்பதற்குக் கிராமச் சுகாதாரச் செவிலியர் அளிக்கும் சான்றே போதுமானது.

விண்ணப்பங்களை நிரப்ப சத்துணவு ஊழியர்களும், குழந்தை நல அமைப்பாளர்களும் உதவி புரிவார்கள். விண்ணப்பங்கள் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகங்களில் இலவசமாகக் கிடைக்கும்.

கிராமச் சுகாதாரச் செவிலியர், விண்ணப்பங்களைச் சரிபார்த்து, விசாரித்து, கருவுற்றதைப் பதிவு செய்திருப்பதாகச் சான்றளித்து, உதவித் தொகை அனுமதிக்காக, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அவற்றை அனுப்புவார். அவர் உதவித் தொகையை அனுமதிப்பார். கிராமச் சுகாதாரச் செவிலியர் அந்தத் தொகையை வழங்குவர்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் முழுப் பொறுப்பு, சமூகநலத் துறை இயக்குநரைச் சார்ந்தது. சென்னையில் மாநகராட்சி ஆணையரும், மாவட்டங்களில் மாவட்டச் சமூகநல அலுவலர்களும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள்.

இந்தச் சீரிய திட்டம் சிறபபாக நிறைவேற்றப்பட, அனைவரின் ஒத்துழைப்பையும் அரசு அன்புடன் வேண்டுகிறது.

# ஏழை-நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த எல்லா மகளிருக்கும் இலவசப் பட்டப் படிப்பு

## ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்



பெண் இனத்தைப் போற்றிப் பெருமைப்படுத்தி வரும் தமிழ்நாடு அரசு, வேலை வாய்ப்பில் அவர்களுக்கு 30 சத விகித இடஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளதை அனைவரும் அறிவர்.

மகளிர் கல்வி மேன்மையுற, மற்றுமொரு திட்டமாக, இளங்கலைப் பட்டப் படிப்பு வரை கல்வி இலவசம் என அரசு அறிவித்துள்ளது. மகளிருக்கான இந்த இலவசக் கல்வித் திட்டத்திற்கு "ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்" என்று பெயர்.

தமிழகத்திலுள்ள எல்லா ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும் நடப்புக் கல்வி ஆண்டிலிருந்து (1989-90) எல்லா அரசு மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப் படிப்பு வரை கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. இப்பொழுது பட்டப் படிப்பில் சேரும் பெண்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த உதவியினைப் பெற, பெற்றோரின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது.

இந்தச் சீரிய திட்டம் சிறப்புற நிறைவேற்றப்பட, அனைவரின் ஒத்துழைப்பையும் அரசு அன்புடன் வேண்டுகிறது.






# முதியோருக்கு உதவும் அரசு

ஆதரவற்ற முதியோருக்கு அரசு வழங்கி வந்த உதவித் தொகை ரூ.35 லிருந்து ரூ.50 ஆக 1-5-89 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. உதவி பெறும் முதியோர் எண்ணிக்கைக்கு, முன்பு விதிக்கப்பட்டிருந்த வரம்பு தற்போது முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. அதனால், தகுதியுடைய அனைவரும் உதவி பெறலாம்.

முதியோருக்கு உதவும் அரசு ஆதரவற்ற முதியோருக்கு அரசு முன்பு மாதத்திற்கு உதவித் தொகை ரூ.35 வழங்கி வந்தது. முதியோர் உதவித் தொகைக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டிருந்தது. இதனால், உதவித் தொகை பெறத் தகுதி உடையவர்கள் நீண்ட காலம் காத்திருக்க வேண்டி இருந்தது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் தலைமையில் உள்ள அரசு பொறுப்பேற்றதும், முதியோர் உதவித் தொகையை ரூ.35லிருந்து ரூ.50 ஆக உயர்த்தியது. உதவி பெறும் முதியோர் எண்ணிக்கைக்கு விதிக்கப்பட்டிருந்த உச்ச வரம்பை முற்றிலும் நீக்கி விட்டது. இதனால், ஏற்கெனவே பலன் கிட்டாமல் காத்திருந்த 30,000 பேரும், மொத்தத்தில் 4 இலட்சம் பேரும் இத்திட்டத்தால் பயன் பெறுகிறார்கள்.

# தூய்மையான நிர்வாகம்

தூய்மையான, திறமையான நிர்வாகம் அளிப்பதாகத் தனது தேர்தல் அறிக்கையில் கொடுத்திருந்த வாக்குறுதியை, தி.மு. கழக அரசு நிறைவேற்ற முயன்று வருகிறது. அந்த அரசு, மேற்கொள்ளும் ஒவ்வொரு நல்ல நடவடிக்கையையும் நாம் ஆதரித்து உற்சாகமூட்ட வேண்டும்.

-முன்னாள் மத்திய அமைச்சர்
திரு. சி. சுப்பிரமணியம்
(பாரதியவித்யா பவன் பொன் விழா மற்றும்
கே.எம். முன்ஷி நூற்றாண்டு விழா-
மார்ச். 3. 89)

**சாதனைக்குச் சான்று**



# சிறு தொழில் வளர்ச்சிக்கு சீரிய திட்டங்கள்

● அரசின் சலுகைகள் ஏராளம்!

● தொழில் முனைவோருக்கு ஒரு பொற்காலம்!

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கான முனைப்பான நடவடிக்கைகள் — முன்னேற்றப் பாதைக்கு வழிகாட்டுகின்றன! தொழில் வளர்ச்சியில் புதிய திருப்பு முனை!

மாநிலத் தொழில் வளம் மாபெரும் வளர்ச்சியை எட்டிட தொழில் ஆர்வலர்தம் எண்ணங்கள் ஈடேறும் காலம் இது!

இதற்கு அரசு தரும் சலுகைகள்:

**மாநில மூலதன முதலீட்டு மானியம்:**

அரசு அறிவித்துள்ள பிற்பட்ட வட்டங்களில் அமைக்கப்படும் சிறு தொழில் ஒவ்வொன்றுக்கும் ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல் 15 சதவீத மானியம் வழங்கப்படும்.

கீழ்க்கண்ட தொழில்களுக்கு, ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல் 20 சதவீத மானியம் வழங்கப்படும்.

மின் அணுவியல், மோட்டார் வண்டி துணைப்பாகங்கள், மருந்துகளும் மருந்துக் கலவைத் தயாரிப்புத் தொழில்களும், உணவுப் பொருள் பதப்படுத்துதல், சூரிய சக்தி சாதனம், ஏற்றுமதிக்கென தங்கம் மற்றும் வைர நகை தயாரிப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டங்களில் சணல் பதப்படுத்தும் தொழில், மாசுகட்டுப்பாட்டுச் சாதனம், விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் அவற்றின் துணைப் பொருட்கள், தோல் பொருட்கள், கதவுகள், சன்னல்கள், சட்டங்களுக்கான அலுமினியம், பி.வி.சி. போன்ற செலவு குறைந்த கட்டடப் பொருட்கள்.

**ஜெனரேட்டர்களுக்கு மானியம்:**

உயர் அழுத்த/குறைந்த அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் சிறு தொழில் அமைப்புகள் தொழில் உபயோகத்துக்கு புதிய ஜெனரேட்டர்களை வாங்கினால் ரூ. 5 இலட்சத்திற்கு மிகாமல் 15 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

**வட்டி இல்லாத விற்பனை வரி தள்ளிவைப்புத் திட்டம்:**

அனைத்து புதிய சிறு தொழில் அமைப்புகள் விற்பனை வரியை 5 ஆண்டுகளுக்குப் பிறகு அரசுக்குச் செலுத்த வகைசெய்கிறது. விரிவாக்கம் செய்யும் சிறுதொழில் அமைப்புகளுக்கும் இந்த ஊக்குவிப்புச் சலுகை உண்டு. எனினும் இத்தகைய இனங்களில் விற்பனை வரி தள்ளிவைப்புச் சலுகை மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் பொருந்தும்.

மேற்கண்ட திட்டங்கள் தொழில் மற்றும் வணிகத் துறை இயக்ககத்தால் நிறைவேற்றப்படுகின்றன.

**சிட்கோ-**

தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு ஆற்றும் பணிகள்:

**கட்டமைப்பு வசதிகள்:**

தமிழ்நாட்டில் பரவலாக அமைந்துள்ள 52 தொழிற்பேட்டைகளை சிட்கோ நிர்வாகம் செய்து வருகிறது. புதிய தொழிற்பேட்டைகளை அது அமைத்து வருவதுடன், சென்னைக்கு அருகில் கீழ்க்கண்ட இடங்களில் தற்போதுள்ள தொழிற்பேட்டைகளையும் விரிவாக்கம் செய்து வருகிறது.

1. காக்களூர், 2. திருமழிசை, 3. ஆலந்தூர் (விரிவாக்கம்), 4. மறைமலைநகர் (விரிவாக்கம்).

இந்த தொழிற்பேட்டைகளில் மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் மற்றும் தொழிற்கூடங்களை வேண்டும் தொழில் முனைவோர் சிட்கோவை அணுகலாம்.

**மூலப் பொருட்கள் விநியோகம்:**

மூலப்பொருட்களை சிட்கோ கொள்முதல் செய்து சிறுதொழில் அமைப்புகளுக்கு விநியோகம் செய்கிறது. இரும்பு மற்றும் எஃகு, பொட்டாஷியம்குளோரைட், கோக், ஈயம், துத்தநாகம் மற்றும் ஃபாட்டி ஆஸிட் ஆகியவை இந்த மூலப் பொருட்களாகும். அண்மையில் HDPE, LDPE, PVC மற்றும் டைடானியம் டைஆக்சைட் ஆகியவைகளும் விநியோகப்பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.

அரசுத் துறைகளால் அறிவிக்கப்படும் ஒப்பந்தக் கோரிக்கைகளில் **சிறுதொழில் அமைப்புகளின் சார்பில் சிட்கோ பங்கு கொள்கிறது.**

அரசு துறைகளுக்கும் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் சிறுதொழில் அமைப்புகளுக்கும் இடையே, வாங்குவோர்-விற்பனையாளர் சந்திப்புக்களை சிட்கோ ஏற்பாடு செய்கிறது.

சர்வதேச சந்தைகளில் சிறு தொழில் தயாரிப்புகளை அறிமுகம் செய்ய சர்வதேச பொருட்காட்சிகளில் சிட்கோ பங்கு ஏற்று சிறுதொழில் அமைப்புகளின் தயாரிப்புப் பொருட்களை காட்சியில் வைக்கிறது.





# மகளிர் நலம் காக்கும் மறுமலர்ச்சித் திட்டங்கள்

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம், ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம் ஆகிய சமூகநலத் திட்டங்களைத் தமிழக அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. தமிழகம் முழுவதும் 31.10.89 வரை பயனடைந்தோர் விவரம்:**




| திட்டத்தின் பெயர் | பயனடைந்தோர் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம் | 6,464 | 323.20 |
| 2) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம் | 24,129 | 28.53 |
| 3) ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம் | 1,015 | 7.66 |
| 4) டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம் | 61 | 3.05 |

## நகராட்சி, நகரியங்களில் அலுவலர்கள் அரசு ஊழியர்கள் ஆக்கப்பட்டனர்

**தமிழ்நாடு நகராட்சி அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக 28.8.'89 அன்று சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில், நகராட்சி மற்றும் நகரியங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வரிடம் கோரிக்கை கொடுக்கப்பட்டது.**

**அவர்களின் வேண்டுகோளை ஏற்று அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 முதல் நகராட்சி மற்றும் நகரியங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும், பொது சுகாதார ஊழியர்கள் உட்பட அரசு ஊழியர்களாக அறிவித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.**

**இதனால் சுமார் 30 ஆயிரம் நகராட்சி ஊழியர்கள் பயன் பெறுவார்கள்.**

# தெலுங்கு கங்கைத் திட்டம்



சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக முன்பு உருவாக்கப்பட்ட திட்டம் தெலுங்கு - கங்கைத்திட்டம்.

மிக உற்சாகத்தோடு ஆரம்பிக்கப் பட்டு, மூன்றாண்டுகளாகக் கவனிக் கப்படாமல் நின்று விட்ட அத் திட்டத்தை மீண்டும் தொடருவதற் காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு.என்.டி. ராமராவ் அவர்களுடன் 18.6.89 அன்று ஐதராபாத்தில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

அந்தப் பேச்சு வார்த்தை 20 நிமிடத்திலேயே முடிவுற்றது. சிக் கல்கள் தீர்க்கப்பட்டு விட்டன. 1992-93 ம் ஆண்டிற்குள் தெலுங்கு கங்கை திட்டப் பணிகள் முடிக்கப் பட்டு, சென்னைக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற இனிக்கும் செய் தியை முதல்வர் கலைஞர் அறிவித் தார்கள்

அத்துடன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்களையும் மற்றும் அரசு உயர் அலுவலர் களையும் நேரில் சென்று பணிகள் எந்த அளவுக்குத் துரிதமாக நடை பெறுகின்றன என்பதைப் பார்த்து வரும்படியும் பணித்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர்களும், உயர் அலுவலர்களும் தெலுங்கு - கங் கைத் திட்ட வேலைகளை நேரில் சென்று பார்த்து வந்தார்கள். பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.



சாதனைக்குச் சான்று

## இருபதே நிமிடங்களில் ஒரு நல்ல முடிவு!

'எம்.ஜி.ஆர். ஆரம்பித்த பணியாயிற்றே, நாம் ஏன் அதைத் தொடர வேண்டும்? முன்பு அ.தி.மு.க. அரசு நாம் ஆரம்பித்த வீராணம் திட்டத்தை அம்போ என்று விட்டு விட வில்லையா?' என்று முதல்வர் நினைக்கவில்லை. மாறாக, ஆந்திர முதல்வரைச் சந்தித்து, இருபதே நிமிஷங்களில் ஒரு நல்ல முடிவுக்கு வந்தார். யாருக்குமே புரியாத காரணங்களுக்காக எம்.ஜி.ஆர்- முன்பு நிறுத்தி வைத்திருந்த தவணைத் தொகை களைத் தருவதாக ஒப்புக் கொண்டார். அடுத்தாற் போல் தரப்பட வேண்டிய தொகைகளுக்கும் நடக்க வேண்டிய காரியங்களுக்கும் ஒரு திட்டம் வகுத்துத் திரும்பியிருக்கிறார். இதன் மூலம், குடி நீர்க் கஷ்டத்தை வருஷா வருஷம் அனுபவித்து வரும் சென்னைவாசி ஒவ்வொருவருடைய நன்றிக் கும் பாத்திரமாகியிருக்கிறார். இங்கே, இப்போது நிலத்தடி நீருக்குக் கூடப் பஞ்சம் வந்துவிட்டது மட்டுமல்ல; மிக அதிகமாக நிலத்தடி நீர் எடுக்கப் படுவதால் கடல் நீர் உட்புகுந்து எல்லாமே உப்பு மயமாகி விடும் அபாயமும் அதிகரித்திருக்கிறது. இந்தச் சமயத்தில் வறட்டுக் கௌரவம் பாராமல் முதல்வர் செயல்பட்டிருக்கும் விதம் பாராட்டுக் குரியது.

*(9.7.1989-ஆம் நாளிட்ட 'கல்கி' இதழின் தலையங்கத்திலிருந்து)*



## புதுக்கோட்டை மாவட்டத்தில்

# வேலைவாய்ப்பு அளிக்கும் விசைத்தறிக் கூடம்

ஏழை நெசவாளர்களின் வாழ் வில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க வும்-இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்கும் கைத்தறித் துறையைக் காப்பாற்றவும் தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரு கிறது.

நூல் விலையைக் கட்டுப்படுத்தி, தட்டுப்பாடின்றி நெசவாளர்களுக்குக் கிடைக்கச் செய்வது-உற்பத்தி செய்யப் படும் கைத்தறித் துணிகளைத் தேக்க மின்றி விற்பனை செய்வது-கைத்தறி நெசவாளர்களை-கூட்டுறவுச் சங்கங் களில் உறுப்பினர்களாக்கிப் பயன் பெறச் செய்வது-போன்ற ஆக்கப் பணிகளை அரசு நிறைவேற்றி வரு கின்றது.

கைத்தறித் துறையின் வளர்ச்சிக்கு உதவும் மற்றொரு பணி-விசைத்தறிக் கூடங்களின் தோற்றமாகும்.

ஏழை எளிய மக்களுக்கு-வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழும் ஆதிதிராவிட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நிறுவனமாக மட்டுமின்றி-கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலை உற்பத்தி செய்துதரும் நிலையமாகவும், இந்த விசைத்தறிக் கூடம் விளங்கு கின்றது.

இத்தகைய விசைத்தறிக் கூடங்களில் ஒன்று, புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியை அடுத்த திருநாளூரில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 27 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக் கப்பட்டுள்ள இந்த விசைத்தறிக் கூடத் தின் திறப்பு விழா- புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. குற்றாலிங்கம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கடந்த 2-9-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் பேசுகை யில் "திருநாளூர் விசைத்தறிக்கூடம் 48 தறிகளைக் கொண்டது. இந்த விசைத் தறிக் கூடத்தின் மூலம் சுமார் 100 பேர் பயனடைவார்கள். இத்திட்டத் திற்கு ஊரக வளர்ச்சித் திட்ட மானிய மாக ரூ. 10 இலட்சமும், சிறப்பு உள்ளடக்கத் திட்ட மானியமாக ரூ.10 இலட்சமும், தாட்கோ மூலம் விளிம்புத் தொகையாக (Margin Money) ரூ. 5 இலட்சமும், தமிழக அரசின் மூல தனக் கடனாக ரூ. 2 இலட்சமும் பெறப்பட்டுள்ளன. இந்த விசைத்தறிக் கூடத்தை இந்தப் பகுதி மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.



கைத்தறித் துறை துணை இயக்குநர் பொறுப்பு வகிக்கும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. வி. தங்கவேலு, இணை இயக்குநர் திரு. வீ. தங்கவேலு, புதுக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. பெரியண்ணன், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. பழ. சுப்பையா, முன்னாள் பெருந்



# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,

# தென்னார்க்காடு மாவட்டம், கடலூர்-1

## நலிந்தோர் மேம்பாட்டிற்கு நல்லதோர் திட்டம்:

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரின் வளமான வாழ்விற்கும், கிராம முன்னேற்றத்திற்கும் அரசு வழங்கப்படும் வளர்ச்சிப் பணிகளின் நலனை எய்திட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயல்படுத்தப்படும் கீழ்க் கண்ட திட்டங்களுக்கு ஆதரவு தர வேண்டுகிறோம்.

## அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

(மானியத்துடன் கடன் வசதி அளித்து சுய வேலை செய்வதை ஊக்குவித்தல்)

பயன் பெறும்
குடும்பங்கள்: 17,300
ஒதுக்கீடு : ரூ.444.390 இலட்சங்கள்

## ஆ) ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்:

1989-90-ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை 13,417

ஒதுக்கீடு: ரூ.1676.51 இலட்சங்கள்

ஒவ்வொரு வீட்டிற்கும் மாநில அரசு வழங்கும் ரூ.4,000/-க்கான தொகையுடன் இந்த ஆண்டில் 5,907 கான்கிரீட் தளம் ஒட்டிய வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகிறது.

## இ) மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்

1987-88-இல் 10 வட்டாரங்களிலும் 88-89-இல் 10 வட்டாரங்களிலும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டு கூடுதலாக 6 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆக மொத்தம் 16 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேற்கண்ட அனைத்து திட்டங்கள் சார்பாக விபரங்கள் அறிய வேண்டிய இடம்:-
வட்டார வளர்ச்சி அலுவலகம் (திட்டம்), ஊராட்சி ஒன்றிய அலுவலகம்

**இரா. தனபதி,** பி.காம்.,
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
கடலூர்

**தேவேந்திரநாத் சாரங்கி இ.ஆ.ப**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மற்றும் பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
தென்னார்க்காடு மாவட்டம், கடலூர்



தலைவர் திரு. இரா. இராசன் ஆகியோர் உரையாற்றியபின், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு விசைத்தறிக் கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். அவர் தம் உரையில்,

"தமிழ்நாட்டில் உள்ள 1,665 நெசவாளர் சங்கங்கள் மூலம் 70 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கைத்தறித் துணிகள் தேக்கமின்றி விற்பனை செய்ய அரசு மாவட்டந்தோறும் கைத்தறிக் கண்காட்சிகளை நடத்திவருகின்றது. 1987-ஆம் ஆண்டு நடைபெற்ற கண்காட்சிகளில், ரூ. 18 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்கப்பட்டன. 1988-ஆம் ஆண்டு ரூ. 20 கோடி மதிப்புள்ள துணிகள் விற்கப்பட்டன. நடப்பாண்டில் இந்த விற்பனை ரூ. 25 கோடியாக உயர்ந்துள்ளது. கோ.ஆப்டெக்ஸ் மூலம் ரூ. 115 கோடி மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

"தமிழ்நாட்டிலுள்ள 18 நூற்பாலைகளில் 17 ஆலைகள் ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்கி வந்தன. இந்த ஆலைகள் கடந்த 6 மாதக் காலத்தில் 87 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் 41 நூற்பாலைகள் மூடிக் கிடந்தன. அவற்றில் 21 ஆலைகள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 20 ஆலைகளில் 10 ஆலைகள் பல்வேறு காரணங்களால் திறக்க முடியாத நிலையிலே உள்ளன. மீதமுள்ள 10 ஆலைகளைத் திறக்கத் திட்டமிட்டு ஒவ்வொரு ஆலை குறித்தும் தனித்தனியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மழையூர், கே. புதுப்பட்டி ஆகிய இடங்களில் ரூ.14 இலட்சம் செலவில் 2 விசைத்தறிக் கூடங்கள் அமைக்கப்பட உள்ளன.

கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நூலின் விலையை ஏறாமல் தடுக்க-அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்கீழ் நூலையும் சேர்க்குமாறு மத்திய அரசிடம் கேட்கப்பட்டு உள்ளது." என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**இரெ. மகாலிங்கம்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**புதுக்கோட்டை மாவட்டம்**

# கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்-ஒரு கண்ணோட்டம்

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், இன்று 736 பேருந்துகளை இயக்கி வருகிறது. ஆரம்பிக்கப்பட்ட நாளில் நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்ட மக்களின் சேவையைக் கருதிச் செயல்பட்டது.

மாவட்டங்களுக்குத் தனித்தனிப் போக்குவரத்துக் கழகம் தேவை என்ற கருத்தில், நேசமணி போக்குவரத்துக் கழகம் நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படத் தொடங்கியது. நாகர்கோயிலில் செயல்பட்டு வந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலியில் 1.4.1983 முதல் செயல்படத் தொடங்கியது.

1.4.1983-இல் 418 ஊர்திகள், 304 வழித் தடங்களில் செயல்பட்டு வந்தன. தற்சமயம் 31.8.1989-இல் 736 ஊர்திகள் 543 தடங்களில் ஓடிக் கொண்டிருக்கின்றன. கழகப் பேருந்துகளில் 6.49 இலட்சம் மக்கள் தினசரிப் பயணம் செய்கின்றனர். நாள்தோறும் 2.55 இலட்சம் கிலோ மீட்டர் இயக்கப்பட்டு வருகிறது. மக்கள் தொகை 1,500 அதற்கு மேலும் உள்ள கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அரசு ஆணையின்படி ஆய்வு செய்யப்பட்டு திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 7 கிராமங்களும்; சிதம்பரனார் மாவட்டத்தில் 8 கிராமங்களும் கண்டறியப்பட்டன. இவற்றினுள் 7 கிராமங்களுக்குத் தற்பொழுது பேருந்து வசதி செய்யப்பட்டு விட்டது. மீதமுள்ள 8 கிராமங்களுக்குச் சாலை வசதி இல்லாததால், உடனடியாகப் பேருந்து வசதி செய்ய இயலவில்லை.

புதிய வழித்தடங்கள் மூலமும், ஏற்கெனவே இயங்கி வந்த வழித்தடங்களை மாற்றியதன் மூலமாகவும், இதுவரை பேருந்து வசதியற்று இருந்த 35 சிறிய கிராமங்கள் (மக்கள் தொகை 1,500-க்கும் உட்பட்டது) தற்சமயம் பேருந்து வசதி பெற்றுள்ளன. இதனால் சுமார் 50,000 மக்கள் பயன்பெற்றுள்ளனர். குறுகலான சாலை கொண்ட வழித் தடங்களில் சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்தக் கழகத்தில் 11 பணிமனைகள் உள்ளன. விரைவில் ஒன்று சங்கரன்கோவிலில் ஆரம்பிக்கப்பட உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மாவட்டச் சுற்றுலா மையம் ஒன்று, பாபநாசத்தில் அமைக்க இக்கழகம் மூன்று இலட்ச ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளது. பயணிகளின் வசதிக்காக 250 நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகளின் வசதிக்காகச் "சாலையோரச் சிற்றுண்டிச்சாலை" க்யத்தாறில் செயல்பட்டு வருகிறது. இதேபோல் 'மூன்றடைப்பு' என்ற இடத்தில் இன்னொன்று வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

திருநெல்வேலியிலிருந்து சென்னை செல்ல, சொகுசு இருக்கை வசதிகளுடன் கூடிய பேருந்துகள் இயங்கி வருகின்றன.

# தென்னார்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

## கடலூர் 607 001

**வாடிக்கையாளர்களுக்கும், விவசாயப்பெருங்குடி மக்களுக்கும், பொது மக்களுக்கும், தொழில்துறைப்பிரமுகர்களுக்கும் எங்களது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்**

அதிக வட்டி
பல்வேறு சிறப்புச்சேமிப்புத் திட்டங்கள்
மற்றும் ஓய்வூதிய திட்டங்கள்
அனைத்துவகை வைப்புகளுக்கும் வாரிய நியமன வசதி
மற்றும் காப்புறுதி
குறைந்த கட்டணத்தில் அனைத்துவகை வங்கி
துரித சேவை
வாடிக்கையாளர்களுக்குத்தனிக் கவனம்
விவசாயக் கடன் உதவிகள்

***உங்கள் வங்கி***

**தென்னார்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி**

**கடலூர்**

**மற்றும் கிளைகள்**

இரா. இராஜாராமன், பி.ஏ
காரியதரிசி

எப்.எக்ஸ். பெர்ணாண்டோ,
பி.எஸ்ஸி., பி.எல். எச்டிசி.,
தனி அலுவலர்






# காற்றாலைகள்

**ந**மது தமிழக மாநிலம் மிகவும் நல்ல காற்றுச் சக்தியின் வளத்தைப் பெற்றிருக்கிறது. மிகவும் நீளமான கடற்கரை அமையப் பெற்றுள்ள மாநிலம் இது. ஆகையால், கடற்கரைப் பகுதிகளில் ஆண்டு முழுதும் தேவையான காற்று வீசுகிறது. இதனால் நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட, தமிழகம் மிகவும் சிறந்ததாக விளங்குகிறது. ஆகையால், நீர் இறைக்கும் பணிகளுக்குக் காற்றாலைகளை நிறுவிட விவசாயிகளிடையே மிகுந்த ஆதரவு ஏற்பட்டிருக்கிறது.

### தேசிய காற்றாலைகள் செயல் விளக்கத் திட்டம்

தமிழ்நாட்டில் நீர்ப் பாசனத்திற்காகச் சுமார் 500 நீர் இறைக்கும் காற்றாலைகள் ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கின்றன. 'தேசிய காற்றாலைகள் செயல் விளக்கத் திட்டத்தின்' கீழ், இந்திய அரசின் மரபு வழிச்சாரா எரிசக்தித் துறையின் நிதியுதவியினால், ரூ.15,000 மதிப்புள்ள இத்தகைய காற்றாலைகள் நீர்ப்பாசனங்களுக்காக விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்குவதும், மேலும் டீசல் பம்புகள், மின் பம்புகள் போன்ற வழக்கமான ஆதாரங்களைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, நீர்ப்பாசனக் காரியங்கட்குப் புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி வளங்களை அவர்கள் நாடுவதற்கு செயல் நோக்கம் அளிப்பதும், இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். மேலும், ஊரகச் சமூகத்திற்கு வேளாண்மைப் பணிகள் பொருட்டு வேண்டிய எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மக்களுக்குக் குடிநீர் வழங்கிடவும் இத்திட்டம் உதவுகிறது. நீர்ப்பாசனப் பணிகளுக்காக விவசாயிகளுக்கு ரூ.15,000 மதிப்புள்ள காற்றாலைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இருந்த போதிலும், காற்றாலையை நிறுவுவதற்கு வேண்டிய அடித்தளப் பணிகளுக்கு ஆகும் செலவைப் பயனடைபவரே மேற்கொள்ள வேண்டும். கிணற்றின் ஆழம் மற்றும் விட்டம் ஆகியவற்றைப் பொறுத்து, இச்செலவு ஏறத்தாழ ரூ.3,000 முதல் ரூ.6,000 வரை மாறுபடுகிறது.

### தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி ஆதாரங்களைப் பரப்பும் முக்கிய நோக்கத்தோடு, மத்திய அரசின் மரபு வழிச்சாரா எரிசக்தித் துறைக்குத் தொடர்பு நிறுவனமாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் இந்த காற்றாலைகள் திட்டத்தைத் தமிழ்நாட்டில் செயலாற்றி வருகிறது. உழவர்களுக்குக் காற்றாலைகளை ஒதுக்கீடு செய்வதில் கடைப்பிடிக்கப்படுகிற வழிமுறை இதோ விவரிக்கப்படுகிறது.

தமது நிலங்களில் நீர் இறைக்கும் பணிகளுக்காகக் காற்றாலைகளை நிறுவ ஆர்வம் உள்ளவர்கள், சென்னை-34-இல் உள்ள தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பிக்கலாம். தனி நபரிடமிருந்து இத்தகைய கேட்பு வரப்பெற்றதும், காற்றாலை வழங்குவதற்கான விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும். அன்னார் இத்தகைய விண்ணப்பப் படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தபின்


**செ. சந்திரசேகரன்,**
செயற்பொறியாளர்
தமிழ்நாடு
எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

தொலைபேசி: 2265
தொலைபேசி:
வளவனூர் கிளை: 33
கிழக்கு பாண்டிரோடு: 2235

## விழுப்புரம் கூட்டுறவு நகர வங்கி வரையறை இ.34, விழுப்புரம்,

**கிளைகள்: வளவனூர் மற்றும் கிழக்குப் பாண்டிரோடு**

## வங்கிச் சிறப்புகள்

★ விழுப்புரம் நகரில் தோன்றிய முதல் வங்கி

★ 72 ஆண்டுகளாய் இமயமலைபோல் இருந்துவரும் வங்கி

★ தமிழகக் கூட்டுறவு வங்கிகளில் நடுவிரல்போல் உயர்ந்து விளங்கும் வங்கி

★ நகரில் டெபாசிட்டுகள் அதிகம் பெற்று நல்லமுறையில் இயங்கிவரும் வங்கி

★ காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் பணத்திற்குப் பாதுகாப்பு

★ வைப்புகளுக்கு மற்றெல்லா வங்கிகளைக் காட்டிலும் 1 சதவிகிதம் கூடுதல் வட்டி

★ டிராப்டுகளுக்கும் பில்களுக்கும் குறைவான கமிஷன்

★ ஏழை எளிய மக்கள் வாழ்வில் ஏற்றமும் மாற்றமும் பெற இடையறாது இன்றும் பாடுபடும் வங்கி

★ தான் பெற்ற கடனைத் தவணை தவறாமல் செலுத்தும் உறுப்பினர்களுக்கு கட்டிய வட்டித் தொகையில் 10 சதவீதத்தைக் கொடையாக அளிக்கும் வங்கி

★ உறுப்பினர்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில் 18 சதவிகிதம் ஈவுத்தொகை வழங்கிய இணையில்லாச் சிறப்பு

★ கன்னலைப்போல் வார்த்தையில் கனிவு, மின்னலைப்போல் சேவையில் விரைவு

**எங்கள் முன்னேற்றம் உங்கள் பார்வைக்கு**

| | 1965 | 1975 | 1985 | 1989 |
|---|---|---|---|---|
| டெபாசிட் நிலுவை (ரூ. இலட்சத்தில்) | 10 | 44 | 290 | 563 |

இப்படிக்கு

**க. தேவநாதன்,** பி.ஏ., பி.எல். எச்.டீ.சி.
செயலர்

**இரா. பாக்கியம்**
தனிஅலுவலர்



தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்குத் திரும்ப அனுப்ப வேண்டும்.

இந்த விண்ணப்பம் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தில் திரும்ப வரப்பெற்றதும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனப் பொறியாளர்கள் வழங்குவோரின் பிரதிநிதியுடன் விண்ணப்பித்தவருக்குத் தகவல் அளித்து அன்னாரது நிலத்தை ஆய்வு செய்வர். அன்னாரது நிலம் தகுந்தது எனக் கருதப்பட்டால், மேற்கூறிய நில ஆய்வின் போதே, காற்றாலையை நிறுவுவதற்கு வேண்டிய அடித்தள விவரங்கள் பயனடைபவர்க்கு அளிக்கப்படும். காற்றாலையை நிறுவ அடித்தளக் கட்டுமானப் பணிகளைச் செய்து முடிப்பதற்குப் பயனடைபவரே தக்க வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்டுமானப்பணிகளைப் பயனடைபவர் செய்து முடித்ததும், அதனை அவர் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும். கட்டுமானப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டன என்று பயனடைபவரிடமிருந்து தகவல் கிடைத்ததும், காற்றாலையை வழங்கிட ஒதுக்கீடு ஆணை ஒன்று அளிக்கப்படும். இந்த ஆணை கிடைக்கப் பெற்றதும், 'வழங்குவோர்' பயன் அடைபவர் நிலத்திற்குக் காற்றாலையை அனுப்பி வைத்து, நிறுவி, இயக்கியபின் பயனடைபவரிடம் ஒப்படைப்பார்.

தற்போது, தேசிய காற்றாலைச் செயல் விளக்கத் திட்டத்தின் கீழ், 12 பியு 500 எனப்படும் காற்றாலை விவசாயிகளுக்கு நீர்ப்பாசனக் காரியங்களுக்காக வழங்கப்படுகிறது. இவை 12 இறக்கைகளையும் 5 மீட்டர் விட்டமுள்ள ஒரு சுழல்வானையும் (Rotor) கொண்டவை. சிகரத்தின் (Tower) உயரம் 7 மீட்டராக இருக்கும். 6 அங்குலம் மற்றும் அதற்கு மேலும் விட்டமுள்ள ஆழ்குழாய்க் கிணறுகளிலும் (Borewells) திறந்த வெளிக் கிணறுகளிலும் காற்றாலையை நிறுவலாம்.



இவை ஒரு வினாடிக்கு 1.75 மீட்டர் என்ற காற்றின் வேகத்தில் (ஒரு மணிக்கு 6.3 கிலோமீட்டர் அளவில்) அதாவது மரத்தின் இலைகள் அசைய ஆரம்பிக்கத் தேவைப்படுகிற காற்றின் வேகத்தில் சுழலும். தரை மட்டத்திலிருந்து அதிகப்பட்சமாக சுமார் 50 முதல் 60 அடி ஆழத்திலிருந்து காற்றாலைகள் நீரை இறைக்கும். 6 முதல் 10 மீட்டர் ஆழத்திலிருந்து ஒரு மணிக்கு 12 முதல் 14 கிலோமீட்டர் என்ற சராசரி காற்று வேகத்தில் சுமார் 2,000 லிட்டர்கள் நீரை இக்காற்றாலைகள் வெளிக் கொணரும். நிறுவி இயக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடக் காலத்திற்கு இக்காற்றாலைகள் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன. இந்தக் காற்றாலைகளின் அமைப்பில் ஏதும் குறைபாடுகள் ஏற்பட்டிருப்பின் வழங்குவோரையோ அல்லது தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தையோ உழவர்கள் தொடர்பு கொண்டு அதனைச் சரிசெய்து கொள்ளலாம். உத்தரவாதக் காலம் முடிவுற்ற பின்னர், வேண்டுமானால் காற்றாலைகளின் முறையான பராமரிப்பிற்கு வழங்குவோருடன் விவசாயிகள் பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளலாம்.

ஊரகச் சமூகத்திற்கு வேளாண்மைப் பணிகள் பொருட்டு வேண்டிய எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மக்களுக்குக் குடிநீர் வழங்கிடவும் காற்றாலைகள் உதவுகின்றன. தமிழகத்தில் 12.00 இலட்சத்திற்கும் மேற்பட்ட மின் பம்பு செட்டுகள் வயல்களுக்கு நீர் இறைத்து வருகின்றன என்பது இத்தருணத்தில் தெரிவிக்கப்படுகின்றது. தவிர, ஆண்டுதோறும் 35,000 40,000 பம்புசெட்டுகள் இந்த மிகப் பெரிய எண்ணிக்கையுடன் சேர்க்கப்படுகின்றன. ஆண்டு முழுவதும் காரிய சாத்தியமாக இயங்குவதற்குச் சாதகமான காற்றுச் சூழ்நிலையில் காற்றாலை நிறுவப்பட்டிருப்பின், அது சராசரியாக ஆண்டிற்குச் சுமார் 2,000 கிலோவாட் திறன் கொண்ட மின் ஆற்றலைச் சேமிக்க உதவும் என்று ஏற்கெனவே கணக்கிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து வேளாண்மைப் பணிகளுக்காக மின் இணைப்புப் பெறுவதற்குச் சுமார் 5 வருடங்கள் ஆகின்றன என்றும் தெரிய வருகின்றது. இந்த மாதிரியான நிலையில் விவசாயிகளுக்கு நாங்கள் கூறும் யோசனை: "விவசாயிகளே, நீர் இறைக்கும் பணிகளுக்கும், மின்திறனைச் சேமிக்கவும் காற்றாலைகளை உபயோகியுங்கள்" மேற்கொண்டு தேவைப்படும் தகவலுக்கு எழுத வேண்டிய முகவரி: "தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 'ஜாவர் பிளாசா', 4வது தளம் 1-ஏ, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600 034"

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.



# ஏழைப் பெண்களுக்கு வாழ்வு தரும் திட்டம்

பின்தங்கிய மாவட்டமாகிய தருமபுரி மாவட்டத்தில் தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி வழங்கும் திட்டம் ஏழை மகளிர்க்கு ஜாதி, மதம் வேறுபாடின்றி பயன் அளித்து வருகிறது.

இம்மாவட்டத்திற்கு 504 பெண்களுக்கு ரூ.25,20,000 (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்து இருபதாயிரம்) நிதியுதவி வழங்க அரசு குறியீடு நிர்ணயித்து உள்ளது. இதுவரை 100 பெண்களுக்கு ரூ.5,00,000 (ஐந்து இலட்சம்) திருமண நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பயன் அடைந்த 100 பெண்களில் 25 வயதுக்கு மேல் 2 பெண்களுக்கும், 30 வயதுக்கு மேல் ஒரு பெண்ணுக்கும் உதவி கிடைத்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.



**திருமதி சுமதி தன் கணவருடன்**

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த இந்த தம்பதியரைப் பேட்டி கண்டதில் அவர்கள் கூறியதாவது:

அரூர் அருகே உள்ள கீழ் செங்கம் பாடி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணன். ஏழை விவசாயி. இவரது மகள் கே. தமிழ்ச்செல்வி (வயது 19). இவர் 10ஆம் வகுப்பு வரை படித்து உள்ளார். இவருக்கும் சண்முகம் என்பவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு பணம் இல்லாததால் இரண்டு வருடங்களாகத் தள்ளிப் போடப்பட்டு வந்தது. செய்தித் தாள்களின் வாயிலாக இத்திட்டம் பற்றி அறிந்து அரசுக்கு விண்ணப்பித்து, பணம் கிடைத்ததால் திருமணம் செய்துகொண்டார். இத்திட்டம் பற்றி இவரது தகப்பனார் திரு. கிருஷ்ணன், ''இத்திட்டத்தால் எங்களைப் போன்ற மிகவும் ஏழைகள் பயன் அடைவார்கள். இத்திட்டத்தைக் கொண்டு வந்த தமிழக அரசுக்கும், முதல்வர் கலைஞருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

அரூர் வட்டம் கோபிநாதம்பட்டி என்ற ஊரைச் சேர்ந்த விதவைத் தாய் குப்பம்மாள். இவரது கணவர் 2½ ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து விட்டார். இவர் மகள் பெயர் ப. புஷ்பாராணி. இவர் + 2 படித்து உள்ளார். கிராமத்தில் முக்கிய சேவிகா, கிராம சேவகர்கள் இத்திட்டம் பற்றிக் கூறினார்கள். பிறகு அரூர் என்ற ஊரில் லாரி டிரைவராக உள்ள சேகர் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இத்திட்டம் குறித்து புஷ்பாராணி கூறியதாவது:-

''எனது தந்தை இறந்த பின் என்னையும் எனது இரண்டு சகோதரர்களையும் வளர்க்க எனது தாய் குப்பம்மாள் மிகவும் கஷ்டப்பட்டார். இந்த நிலையில் எப்படி என்னைத் திருமணம் செய்து கொடுக்க முடியும் என்று தினமும் தனிமையில் கவலைப்படுவார்.

இந்த நிலையில் தமிழக முதல் அமைச்சர் அறிவித்த திருமண உதவித் திட்டம் எங்கள் வயிற்றில் பாலை வார்த்தது.''

**பயன் அடைந்தோர் பகர்வன:**





கிருஷ்ணகிரியைச் சேர்ந்த முஸ்லீம் பெண் ஷாநவாஸ் (வயது 19) +2 வரை படித்துள்ளார். இவரது தந்தை ஒரு நோயாளி. இவரின் ஒரே அண்ணன் ஆட்டோ டிரைவர். அண்ணனின் வருமானத்தில் குடும்பம் நடைபெற்று வந்தது.

''இத்திட்டத்தினால் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும் என்ற உணர்வு முஸ்லீம் குடும்பங்களில் உண்டாகியுள்ளது. எனது திருமணம், எங்கள் தெருப் பெண்களை யாவது படிக்க வைக்கும் என்று நம்புகிறேன்'' என்று ஷாநவாஸ் கூறினார்.

**திருமதி தமிழ்ச்செல்வி தன் கணவருடன்**

மேலும் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த வேலு என்பவர் தச்சுத் தொழில் கூலி வேலை செய்பவர். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துள்ள இவரது மகள் சுமதிக்குத் திருமணம் செய்ய வசதியில்லாததால் மிகவும் கவலைப்பட்டார். இந்த நிலையில் அரசு அறிவித்த இத்திட்டத்தை அறிந்த பின்னர்தான் பெட்டிக்கடை வைத்துள்ள 8ஆவது படித்துள்ள எஸ். ஜெயக்குமார் என்ற மாப்பிள்ளையைப் பார்த்து திருமணம் செய்து வைத்தார்.

இத்திட்டம் பற்றி சுமதி கூறியது: ''என்னைப் போன்ற ஏழைப் பெண்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக்கொடுக்க இத்திட்டம் உதவுகிறது.''



★ அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், தேவைக்கும், பொருத்தமில்லாத காரியங்கள் பழக்கத்தின் பேராலோ, வழக்கத்தின் பேராலோ, தெய்வத்தின் பேராலோ, மதத்தின் பேராலோ, சாதி வகுப்பின் பேராலோ, மற்றெதன் பேராலோ நடத்தப்படக் கூடாது.

★ மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டும்; அதுதான் ஒழுக்கம்.

-தந்தை பெரியார்

தருமபுரி மாவட்டம் பர்கூர் அருகே உள்ள ஒரு கிராமத்தில் கர்ணமாக வேலை பார்த்து வந்தவர் இராமச்சந்திரராவ். இவர் தற்சமயம் லாட்டரி சீட்டு விற்று பிழைப்பு நடத்தி வருகிறார். இவருக்கு 4 பெண்கள். பிள்ளை எதுவும் இல்லை. மூன்று பேருக்கு ஏற்கனவே திருமணம் முடிந்து விட்டது. 4ஆவது பெண் பிரபாவதி 26 வயது; எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து விட்டு பணம் இல்லாததால் திருமணம் செய்ய இயலவில்லை. இதற்கு முன்னர் நிச்சயதார்த்தம் செய்யப்பட்டு பணம் இல்லாததால் நின்றுவிட்டது.

இந்த நிலையில் இத்திட்டத்தின் மூலம் பணம் பெற்று தனது மகள் பிரபாவதியை ஆலங்காயத்தில் டீக்கடை வைத்துள்ள கிருஷ்ணன் என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்துள்ளார். இதுகுறித்து இராமச்சந்திரராவ் கூறியதாவது,

''எங்களது நிலையை உணர்ந்து இத்திட்டத்தை அறிவித்த தமிழக அரசையும், முதலமைச்சரையும் நாங்கள் என்றும் மறக்கவே மாட்டோம்'' என்று உணர்ச்சிவசப் பட்டுக் கூறினார்.

**மு. கிருஷ்ணன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தருமபுரி**



12708.

## தமிழ்நாடு மின்சார வாரியம்
## வடசென்னை அனல்மின் திட்டம்

### ஒப்பந்த நீட்டிப்பு அறிக்கை

**பணியின் பெயர்:** வடசென்னை அனல் மின் திட்டம் - முதல் கட்டப்பணி - மின் திட்டம் நோக்கி செல்லும் புதிய நிரந்தர சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கேயும், புலிக்காடு காயலின் (Pulicot Backwaters) குறுக்கேயும் முன் தகைவு செய்யப்பட்ட கான்கிரீட் பாலங்கள் (Prestressed Concrete Bridges) கட்டுதல்

**ஒப்பந்த வரையறை எண்:** எஸ்.இ.சி.டி.1-8

மேற்குறிப்பிட்ட பணிக்கான ஒப்பந்தங்களை பெறுவதற்கும் திறப்பதற்குமான நாள் 15.11.89லிருந்து நீட்டிக்கப்பட்டு, கீழ்க்குறிப்பிட்ட நாள், நேரத்தில் திறக்கப்படும்.

1. ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் : 1989, டிசம்பர் 6ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை

2. தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் : 1989, டிசம்பர் 6ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி

முந்திய ஒப்பந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மற்ற விதிகளிலும், நிபந்தனைகளிலும் எவ்வித மாறுதலும் இல்லை.

**தலைமைப் பொறியாளர்**
பொதுவியல்/வடிவமைப்பு

டிஐபிஆர்/590/செ.அ./89/ஏடிடி




# தென்னிந்தியாவின் வாணிப நுழைவாயில்


**ஆர். ஜெயமோகன் பிள்ளை, இ.ஆ.ப.**
தலைவர்
துறைமுகப் பொறுப்புக் கழகம், தூத்துக்குடி


மூவேந்தர் காலத்தில் முத்துக் குளிக்கும் துறைமுகமாகத் திகழ்ந்து வந்த தூத்துக்குடி, இன்று இந்திய நாட்டின் சொத்துக் குவிக்கும் துறைமுகமாகத் திகழ்கிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இத்துறைமுகம் பெரிய துறைமுகமாக மாறிய பின்பு, தன் பணியில் 10 ஆண்டுகளைத் தாண்டியுள்ளது. இந்தக் குறுகிய கால இடைவெளியில் இப்பகுதிக்கும், இப்பகுதியில் வாழுகின்ற மக்களுக்கும் நல்ல சேவைகளைச் செய்து, மேலும் தன் சேவைகளைத் தொடர முன்னேறிக் கொண்டிருக்கிறது.

தூத்துக்குடித் துறைமுகத்தை மையமாகக் கொண்டு செயல்படும் அனல் மின் நிலையம், ஸ்பிக் உரத் தொழிற்சாலை, ஆல்ககாலிக் கெமிகல்ஸ், தாரங்கதாரா தொழிற்சாலை போன்ற நிறுவனங்களினாலும், பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பயன் பெறுகின்றன. இத்துறைமுகத்தின் சேவையைக் கொண்டு இந்த நிறுவனங்கள் மேலும் விரிவாக்கப்பட்டு வளர்ச்சி பெறுகின்றன.

இத்துறைமுகத்திற்குப் பல சிறப்பு அம்சங்கள் உண்டு. அன்னியப் பொறியியல் வல்லுநர்களின் ஆலோசனையோ அல்லது உதவியோ இன்றி, முழுக்க முழுக்க நம் பொறியியல் வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. எந்தப் பருவ காலத்திலும் கப்பல்களில் சரக்குகளை ஏற்றி இறக்க பருவ நிலை இடைஞ்சல்கள் இல்லை. மற்ற துறைமுகங்களில் ஏற்படுவது போல் கடல் நீர் மட்டத்தில் ஏற்றத் தாழ்வுகள் குறிப்பிடும் அளவுக்கும் இல்லை. அடிக்கடி துறைமுகத்தில் தூர்மண் எடுக்க வேண்டிய நிலையும் இத்துறைமுகத்தில் இல்லை. இவ்வளவு வசதிகளுடன் ஒழுக்கமும், கடமை உணர்வும் கொண்ட தொழிலாளர்களும் இத்துறைமுகத்தில் இருப்பது மேலும் ஒரு வரப்பிரசாதமாகும்.

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இத்துறைமுகம் இப்பத்து ஆண்டுகளில் புரிந்துள்ள சாதனைகளின் பட்டியல் மிக நீளமானது.

### சரக்குப் பெட்டகங்கள்:-

1988-89-ஆம் ஆண்டில் இத்துறைமுகம் 51.40 இலட்சம் டன் சரக்குகளைக் கையாண்டு உள்ளது. இக்குறியீடு இத்துறைமுகத்தின் மிகச் சிறந்த சாதனையாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் சரக்குகளைக் கையாளும் முறை மிக நவீனமாகி விட்டது. இந்த நவீன முறையில் சரக்குப் பெட்டகங்கள் மூலம் சரக்குகளைக் கையாளும் முறை மிகவும் குறிப்பிடத்தக்கது. இம்முறையின் மூலம் சரக்குகளைத் துரிதமாகவும் சேதமின்றியும் கையாளலாம். இத்துறைமுகத்தில் இந்த நவீன வசதியில் சரக்குகளைக் கையாள சிறந்த வசதிகள் உள்ளன.



1982-83-ஆம் ஆண்டில் 718 டிஇயூ களைக் கையாண்டு, 1988-89-ஆம் ஆண்டில் 8,782 டிஇயூகளைக் கையாளும் அளவிற்கு இத்துறைமுகம் உயர்ந்துள்ளது. இப்பெட்டகங்கள் மூலம் பட்டாணி, பனை மரப்பொருட்கள், பருத்தி நூல் மற்றும் துணிகள் முந்திரிக் கொட்டை, கயிறு, தேயிலை, கருவாடு, கழிவுக் காகிதம், மிளகாய் வத்தல், மற்றும் நாட்டு மருந்துகள் கையாளப்படுகின்றன. சரக்குப் பெட்டகங்களைக் கையாளுவதற்குப் போதிய சிறந்த உபகரணங்களும், சரக்குகளைச் சேமித்து வைக்க பரந்த நிலப்பரப்பும் இத்துறைமுகத்தில் உள்ளன. தற்பொழுது இத்துறைமுகத்தின் மூலம் பதினொன்று சரக்குப் பெட்டகக் கப்பல் கம்பெனிகள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா நாடுகளுக்கும் மற்றும் கருங்கடல் நாடுகளுக்கும் சரக்குகளை ஏற்றிச் செல்கின்றன.

மேலும் குளிர்ப்பதனப் பொருட்களை ஏற்றுமதி செய்யத் தேவையான குளிர்ப்பதன வசதிகளும் இத்துறைமுகத்தில் செய்யப்பட்டுள்ளன. பெங்களூரிலிருந்தும் சரக்குப் பெட்டகங்கள், இத்துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டு ஏற்றுமதி ஆகி உள்ளன.

ரஷ்யா, மற்றும் கருங்கடல் நாடுகளுக்குத் தேயிலை சரக்குப் பெட்டகங்களில் ஏற்றி இத்துறைமுகத்தின் மூலம் அனுப்பப்படுகிறது. தூத்துக்குடிக்கு அருகில் உள்ள மீளவிட்டான் அகல ரெயில் பாதை நிலையத்தில் இருந்து சரக்குப் பெட்டகங்கள் துறைமுகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

சரக்குப் பெட்டகப் போக்குவரத்து மேலும் முன்னேற்றமடையும் என்பதைக் கருத்தில் கொண்டு, இத்துறைமுகத்திற்கு மேலும் பல புதிய கருவிகளையும், சாதனங்களையும், வாங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# FROM SODA ASH GROW MIGHTY OAKS.

DCW Limited, formerly Dhrangadhra Chemical Works Ltd, started India's first Soda Ash factory in 1939. Today, this little Soda Ash factory has grown into a mighty oak.

DCW now has three major divisions – the Soda Ash division at Dhrangadhra (Gujarat State) and the Caustic Soda and PVC Resin divisions, both at Sahupuram (Tamil Nadu State).

DCW is one of India's largest producers of Salt, Soda Ash, Caustic Soda and PVC Resins. It is also one of few in India who produce Trichloroethylene and upgraded Ilmenite – the latter being almost wholly exported.

The product range also includes Calcium Chloride, refined Soda Bicarb, Ammonium Bicarbonate, Magnesium Chloride, Bromine, Liquid Chlorine and Hydrochloric Acid.

It is said that sound management and a conscious policy of developing your people will ensure that you live happily ever after. DCW has been doing it for almost 50 years.

DCW

"NIRMAL" 3RD FLOOR, NARIMAN POINT,
BOMBAY 400 021
TEL: 202 4278, 202 4330, 202 4427, 202 0743.
TELEX: 011-2362. CABLE: SODACHEM.

Enterprise/DCW/12




# தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்

இந்திய அரசு - இலங்கை அரசுடன் 1964-இல் ஏற்படுத்திக் கொண்ட சாஸ்திரி சிரிமாவோ உடன்படிக்கையின்படி இலங்கையிலிருந்து இந்தியாவிற்குத் திருப்பியனுப்பப்படும் தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் சீரிய நோக்குடன், தேயிலை வளர்ப்புப் பணித் திட்டம் தமிழக அரசால் 1968-இல் ஆரம்பிக்கப்பட்டு, அரசு வனத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வந்தது. பின்பு 1.4.1976-இல் இத்திட்டம் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ற பெயரில் ஒரு தமிழக அரசு நிறுவனமாக உருவாக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்காக ஏற்படுத்தப்பட்ட பல வேலை வாய்ப்புகளில், இத்தேயிலைத் தோட்டக் கழகத்தில் அளிக்கப்படும் மறுவாழ்வு வசதி மற்றும் வேலை வாய்ப்புகள் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில், இலங்கையிலிருக்கும் இந்திய துணை உயர் ஆணையாளர், (மறுவாழ்வுப் பிரிவு) தமிழக அரசு மறுவாழ்வு இயக்குநருடன் கலந்தாலோசித்து, பரிந்துரை செய்து அனுப்பப்படும், தாயகம் திரும்பியோர் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. இந்த மறுவாழ்வுத் திட்டத்தின்படி இதுவரை இக்கழகம் 2,331 குடும்பங்களை ஏற்றுஉள்ளது.

அதன்படி இக்கழகம் ஏறக்குறைய 4,967 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலையும், அதே குடும்பத்தைச் சார்ந்த சுமார் 2,000 உறுப்பினர்களுக்கு விளைச்சல் காலத்திற்கு ஏற்ப தற்காலிக வேலையும் அளித்து வருகிறது.

இக்கழகத்தில் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் 50 விழுக்காடுகளுக்குமேல் பெண் தொழிலாளர்கள் வேலை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களும், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுமாக இக்கழகத்தின் தோட்டங்களில் மொத்தம் 25,000 பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்கத்திய மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட கொளப்பள்ளி தேயிலைத் தோட்டம் 1.7.1984-ஆம் ஆண்டில் இக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

அறுவடை செய்யும் பச்சைத் தேயிலையின் அளவுப் பெருக்கத்திற்கேற்ப, தொழிற்சாலையின் தயாரிப்புக் கொள்ளளவும் உயர்த்தப்பட்டு உள்ளது. இதுவரையில் ஆண்டொன்றுக்கு 6 மில்லியன் கி.கி. பதப்படுத்தப்பட்ட தேயிலை தயாரிக்கும் கொள்ளளவு கொண்ட நான்கு தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. தென் இந்தியா தேயிலை ஏல விற்பனை மையங்களில் அதிக விலை பெறுகின்றதாலும், தரத்தை நிர்ணயிப்பதாலும், செலவினங்களைக் கட்டுப்படுத்துவதாலும் தேயிலைத் தயாரிப்பு என்பது ஒரு விலை மதிப்புமிக்க தொழில் நுட்பமாகும்.

நீர் பாசனம், மண் வளம், ஈரத் தன்மையை மேம்படுத்துதல் மண் பாதுகாப்பு முறைகள் ஆகியவற்றைச் செய்வதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் மேலும் 285 எக்டேர் பரப்பைத் தெளிப்பு நீர்ப்பாசன முறையின் கீழ் கொண்டு வரவும், மற்றும் 699 நிலப்பரப்பில் மண்வளப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1988-89-ஆம் ஆண்டில் ரூ.77.19 இலட்ச மதிப்பில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இக்கழகத்தில் கிடைக்கின்ற அடிப்படை வசதிகளை வைத்துக் கொண்டு, புதிய முறைக்கான ஆராய்ச்சியும், தேயிலைச் சாகுபடி மற்றும், மனித வள மேம்பாடு ஆகியவற்றில் பயிற்சியும் எல்லா ஊழியர்கள் மட்டத்தில் நடத்தப்படுகின்றன.



தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் ஒரு முக்கிய பிரதானத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதாவது, மரணம், உடல் நலமின்மை, ஓய்வு ஆகிய இயற்கையான காரணங்களால் ஒரு தொழிலாளியால் வேலை வாய்ப்பு உருவாகுமானால், அந்த வேலையானது அந்தத் தொழிலாளியின் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்படுகிறது. இதனால், அந்தத் தொழிலாளியின் குடும்ப வருமானம் பாதிக்கப்படாதபடி பார்த்துக் சொள்ளப்படுகிறது. இந்தச் சிறப்பான திட்டம் தமிழ்நாட்டில் வேறு எந்தத் தேயிலைத் தோட்ட நிறுவனத்திலும் செயல்படுத்தப்பட்டு வருவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின்கீழ் ஏற்கப்பட்டு உள்ள இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு, வாடகையில்லாக் குடியிருப்புகள், குடிநீர் வசதிகள், இலவச மருத்துவ வசதிகள், குழந்தைக் காப்பகங்கள், ஆரம்பக் கல்வி, ஊதியத்துடன் கூடிய பிரசவக் கால விடுப்பு (84 நாட்கள்) ஒவ்வொரு 20 நாள் வேலைக்கும் 1-நாள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு, ஆண்டுக்கு 14 நாட்கள் உடல் சுகவீன விடுப்புடன் 2/3 பாகம் ஊதியம், வருடத்தில் 9 நாட்களுக்குத் தேசிய மற்றும் பண்டிகை விடுப்பு, குளிர்காலப் போர்வைகள் அளிக்கப்படுதல், வேலை இடங்களில் இலவசத் தேநீர், பெண் மற்றும் ஆண் தொழிலாளருக்குக் குடும்பக் கட்டுப்பாடு ஊக்கத் தொகை, வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை, தொழிலாளர் நஷ்ட ஈட்டுத் தொகை முதலிய வசதிகள், போனஸ், ஆகிய நல்வாழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் எல்லாத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் 264 சதுரஅடி பரப்புடைய வீட்டுவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிலாளியின் வீடும் சுமார் ரூ.23,000 அளவில் கட்டப்பட்டதாகும்.

# வளமான வாழ்வுக்கு

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

## உரங்கள்




மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்

VIJAY

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்

மணலி, சென்னை 600 068

அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343




# வளரும் வேளாண்மை

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலும் பரவலாக நடவு செய்யப்பட்டுள்ள கரும்புப் பயிரை இடைக்கணுப் புழுக்கள் தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது. இப்புழுக்களின் தாக்குதலால் எக்டருக்கு 8.6 முதல் 19.0 மெட்ரிக் டன்கள் வரை சேதம் ஏற்படுகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் இடைக்கணுப்புழுக்களின் தாக்குதல் பயிர் வளர்ச்சிப் பருவத்தில் ஏற்படுவதால் வளர்ச்சிகுன்றி மகசூல் வெகுவாகப் பாதிக்கும்.

இடைக் கணுப்புழுக்கள் நீளமானதாகவும், தம் உடலில் நீண்ட வரிகள் கொண்டு வெண்ணிறமாக இருக்கும். இப்புழுக்கள் சுமார் 5 முதல் 7 மாத வயதுள்ள கரும்பில் இடைக்கணுப் பகுதிகளைத் துளையிட்டு உட்சென்று உண்டு வாழும். இப்புழு ஒன்றுக்கு மேற்பட்ட கரும்பினைத் தாக்கவல்லது. சேதமுற்ற இடைக்கணுப் பகுதிக்கு மேலிருந்து கணுக்களின் பருமனும், நீளமும் குறையும். கரும்பு வலுவிழந்து ஒடிந்துவிடும். கரும்பின் எடை குறைவதுடன் மகசூலும் குறையும். சர்க்கரைக் கட்டுமானமும் குறைவாகவே இருக்கும்.

சுமார் 6 மாத வயதுள்ள கரும்புப் பயிரில் அதன் வளர்ச்சி காரணமாகத் தெளிப்பான்கள் கொண்டு மருந்தடிப்பது மிகவும் கடினம். அவ்வாறு மருந்தடித்தாலும் வயலைச் சுற்றியுள்ள கரும்பின் மீதே மருந்து படியும் கிளைப்புப் பருவத்தில் சிம்புகள் வெடித்து அதிக குருத்துகள் தோன்றுவதால் பார்களுக்கு இடையில் நடந்து சென்று மருந்தடிப்பது சுலபமல்ல. வயல்களின் நடுவிலுள்ள, பயிரில் தோன்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனவே, இடைக் கணுப் புழுக்கள் தோன்றியுள்ள இத்தருணத்தில் டிரைக்கோ கிராமா கிலோனிஸ் என்னும் ஒட்டுண்ணிகள் வயலில் விட்டு உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் உத்தி மிகவும் சிறந்தது.

இந்த ஒட்டுண்ணிகள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்களிலும் பெருவாரியான சர்க்கரை ஆலை மையங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தானிய சேமிப்புக் கிடங்கில் காணும் 'கார்சைரா' என்னும் பூச்சியின் முட்டைகளை ஒட்டுண்ணிகள் தாக்கி தம் முட்டைகளை அதன் மீது இடுவதால் இக் கார்சைரா முட்டைகளை ஒட்டுண்ணிப் பெருக்கத்திற்கு உபயோகிக்கிறார்கள். ஒட்டுண்ணி முட்டைகள் அட்டையில் ஒட்டப்பட்டு எல்லா ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்களிலும் விற்பனைக்கும் கிடைக்கிறது. இதன் மூலம் ஏக்கருக்கு 15 ரூபாய் செலவாகும். இந்த அட்டைகளை கரணை நட்ட நான்காம் மாதம் முதல் பதினைந்து நாட்கள் இடைவெளியில் ஆறுமுறை வயலில் கரும்புப் பயிரில் கட்ட வேண்டும்.

இவ்வாறு செய்வதால் அட்டைகளில் ஒட்டப்பட்டுள்ள முட்டைகள் பொரிந்து ஒட்டுண்ணிகள் வெளியே சென்று இடைக்கணுப்புழுக்களின் தாய் அந்து இட்ட முட்டைகளைத் தேடி அழிக்கும். விவசாயப் பெருமக்கள் மேற்கூறிய உயிரியல் முறையில் கரும்பு இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

**சுண்ணாம்பு கலந்த கரிசல்மண் நிலங்களில் பயிரிடப்படும் உளுந்து பயறுக்கு டை-அம்மோனியப் பாஸ்பேட்**

நாம் உட்கொள்ளும் உணவு வகைகளில் பயறு வகைகள் தான் மிகவும் அதிகமாகப் புரதச்சத்து உள்ளவை மானாவாரி நிலங்களில் தானியப் பயிர்களின் இடையே ஊடு பயிராகப் பயிடப்படுவது பழக்கத்தில் உள்ளது. புரதத் தேவைதனைப் பூர்த்தி செய்வதற்காகத் தற்போது தனிப் பயிராகவே, அதுவும் பாசனப் பயிராகப் பயிரிடப்படுகின்றது. பயறு வகைகளில் புரதம் தயாரிப்பிற்கு மணிச்சத்து (பாஸ்பரஸ்) மிகவும் தேவைப்படுகின்றது. மேலும் உயர் விளைச்சல் தரக்கூடிய தரமான பயறு வகை விதைகள் கண்டுபிடிப்பின் காரணமாகச் செடிகள் எடுத்துக்கொள்ளும் பயிர் ஊட்டகங்களின் அளவும் அதிகரிக்கப்படுகிறது.

மணிச்சத்தினைப் பயிறுக்கு அளிப்பதற்கு டை-அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் சூப்பர் பாஸ்பேட் முக்கிய உரங்களாகக் கருதப்படுகின்றன இந்த இருவகை உரங்களிலிருந்தும் மணிச்சத்து பயன்படுத்தும் திறன் மண் வகைகளுக்கேற்ப மாறுபடுகின்றது.

சுண்ணாம்பு கலந்த கரிசல் மண்ணிற்கு உகந்த உரத்தை அறிவதற்கென, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், மண்ணியல் துறையிலுள்ள மண் ஆய்வு மற்றும் பயிர் ஏற்புத் திட்டத்தில் உளுந்துப் பயரில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வின் முடிவுப்படி அதிக மகசூல் பெற 68 கிலோ மணிச்சத்தை சூப்பர் பாஸ்பேட் உரமாக இட வேண்டும். ஆனால் அதே மகசூல் பெற 44 கிலோ மணிச்சத்தை டை-அம்மோனியம் பாஸ்பேட் உரமாக இட்டால் போதுமானது என அறியப்பட்டது. டை-அம்மோனியம் பாஸ்பேட் குருணை வடிவமாக இருப்பதால், மண்ணில் மணிச்சத்து நிலை இருத்தப்படாமல் பயிருக்குக் கிடைக்கின்றது. மேலும் சூப்பர் பாஸ்பேட் மண்ணில் மாற்றமுறும்பொழுது, வெளிப்படும் இரசாயனப் பொருட்களால் மண் இயக்க நிலை அமிலத் தன்மையில் காணப்படுவதால் மணிச்சத்தினைப் பயிர்களுக்குக் கிடைக்காமல் மாற்றமுற வழி செய்கின்றது. ஆனால் டை-அம்மோனியம் பாஸ்பேட் மணிச்சத்தினைத் தொடர்ந்து செடிகளுக்கு அளிக்கும் தன்மை கொண்டதாக விளங்கியது.

எனவே, சுண்ணாம்பு கலந்த கரிசல்மண்ணிற்கு மணிச்சத்தை டை-அம்மோனியம் பாஸ்பேட் உரமாக இட்டால் அதிக மகசூல் பெறுவதுடன் உரச் செலவினையும் குறைக்கலாம். ஒரு எக்டருக்கு ஏறக்குறைய ரூ.150 குறைய வழி செய்யலாம்.

**வெளியீடு:**
**வேளாண் தகவல் பணி மையம்,**
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்
கோவை-641 003

# பம்ப் ஓடினுல் பயிர் ஓங்கி வளரும், பம்ப் நின்றுல் வேலே ஓய்ந்துவிடும்



விவசாயிகளின் வாழ்க்கை
அவர்களுடைய பயிரில் இருக்கிறது என்ருல்
பயிரின் உயிர் நீரை நம்பியிருக்கிறது.
பயிருக்கு காலாகாலத்தில் நீர்
கிடைக்காவிடில் நல்ல விதைகள், தரமான
உரம் மற்றும் உளம் தளராத உழைப்பு
எல்லாமே வீணுகிவிடும்.

வளர்ந்து நிற்கும் பயிருக்கு நீர்
தேவைப்படும்போது, கிணற்றில் நீர்
இருப்பினும் பம்ப் எரிந்து போய்விட்டாலோ,
உடைந்துவிட்டாலோ,
கெட்டுப்போய்விட்டாலோ அல்லது
திருட்டுப்போய்விட்டாலோ விவசாயிகளின்
வாழ்க்கை பாழாய்ப்போய்விடும்.

இந்தமாதிரி கஷ்ட காலத்தில்
விவசாயிகளுக்கு உதவி செய்கிறது

நியூ இந்தியாவின்
விவசாய பம்ப்ஸெட் இன்சூரன்ஸ்.
விவசாய பம்ப்ஸெட் இன்சூரன்ஸ்
திட்டத்தில் ஸப்மெர்ஸிபிள் பம்ப்ஸெட்
உள்பட எல்லாவகை பம்ப்ஸெட்டுகளுக்கும்
இன்சூர் செய்யலாம்.

விவசாய பம்ப்ஸெட் இன்சூரன்ஸ் ப்ரீமியம் :
மோட்டாரின் ஹார்ஸ் பவருக்கேற்றபடி
ஆண்டுக்கு குறைந்தபட்சம் 50 ரூபாய்.

நியூ இந்தியாவின் 1000க்கும் அதிகமான
அலுவலகங்கள் நாடு பூராவும் பரவியுள்ளன.

மேலும் விவரங்களுக்கு உங்கள்
அருகாமையிலுள்ள அலுவலகத்தில்
விசாரியுங்கள் அல்லது ஏஜெண்ட்டை
சந்தியுங்கள். உங்களுக்கு சேவை செய்யவே.
எட்டாத தூரத்தில் உள்ள கிராமங்களில்கூட
நியூ இந்தியாவின் கிராம பிரதிநிதிகள்
காத்திருக்கிருர்கள்.

விவசாய பம்ப்ஸெட்
இன்சூரன்ஸுக்கு

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

கஷ்ட காலத்தில் உங்களுக்கு ஆதரவு







# தமிழகத்தில் கூட்டுறவுப் பணிகள்

கூட்டுறவு என்பது கூடி வாழ்வது, கூடித் தொழில் செய்வது, கூடிப் பலன்களை நுகர்வது என்ற அடிப்படையில் மக்களிடையே இயல்பாக மலரும் உணர்வாகும். இது ஒரு இயக்கமாக உலகெங்கும் வெற்றி கண்டு வருகிறது.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வேகமாக வளர வேண்டுமென்று மறைந்த பிரதமர் பண்டித நேரு பெருமகன் விரும்பினார். "கூட்டுறவோடு அல்லது கூட்டுறவு இயக்கத்தோடு இந்தியாவைப் பிணைக்க வேண்டுமென்பது என் நோக்கம். அதுவே இந்தியாவின் ஊர்கள் தோறும் அடிப்படைச் செயலாக இருக்க வேண்டும். இந்தியாவின் பொது எண்ணமே கூட்டுறவு அணுகுமுறையில் அமைய வேண்டும்" என்று அவர் விரும்பினார். பண்டித நேரு அவர்களுடைய பிறந்த நாளான நவம்பர் 14-ஆம் நாள் தொடங்கி, ஒரு வாரம் அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இரெ. ஆறுமுகம், இ.ஆ.ப.,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,

அவருடைய நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாடும் இவ்வேளையில் கூட்டுறவு வார விழா அமைவது சாலவும் பொருத்தமானதாகும்.

கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளை நன்கு உணர்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களும் "தனி உடைமைக்கும், பொது உடைமைக்கும் இடையில் தங்கும் இடமாக கூட்டுறவு உள்ள தென்று கருத்து" தெரிவித்துள்ளார்கள்.

இந்தக் கூட்டுறவுவியக்கம் செம்மையாக நடைபெற வேண்டும், இதில் ஈடுபடுபவர்கள் சேவை மனப்பான்மை உடையவர்களாக இருக்க வேண்டுமென்ற கருத்தில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் "கூட்டுறவு என்பது காகங்கள் கூடி இருப்பதைப் பகிர்ந்து கொண்டு போவது அல்ல — கூடுவது காகங்கள் கூடுவதைப் போல இருக்கக் கூடாது. கூட்டுறவு, மேகங்கள் கூடுவதைப் போல இருக்க வேண்டும். மேகங்கள் கூடுவது மழையைத் தருவதற்காக! மக்களுக்கு நன்மைகளைக் கொடுப்பதற்காக கூட்டுறவு இருக்க வேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறு அறிஞர்களும், தலைவர்களும் போற்றுகின்ற கூட்டுறவியக்கம் தமிழகத்தில் பல்வேறு துறைகளில் நல்ல சாதனைகளைப் புரிந்து வருகிறது. இன்னும் ஏற்றம் பெறுவதற்கான திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழில் வளம் வேகமாக முன்னேற்றமடைந்துள்ள இன்றைய நிலையிலும் இந்தியா அடிப்படையில் விவசாய நாடுதான். 70 சதவிகித மக்கள் விவசாயிகள் தான். ஆகவே தமிழ்நாட்டிலுள்ள 4,700 தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்குப் பயிர் சாகுபடி செய்யத் தேவையான ரொக்கம், தரமான விதைகள், உரம், பூச்சிகொல்லி மருந்து முதலிய இடுபொருள்களைத் தந்து உதவுகின்றன. 1988-89-ஆம்

## TNPSC விளம்பர எண். 62

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

*கீழ்க்கண்ட பதவிகளுக்கு 4.12.89-க்குள் ஆணையத்தின் அலுவலகத்தில் வந்து சேருமாறு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித்தகுதி (க.க) முதலியவை ஒவ்வொரு பதவிக்கும் பின்னால் கொடுக்கப்பட்டுள்ளன.*

*1. தமிழ்நாடு மீன் வளப்பணியில் 13 மீன் துறை உதவி இயக்குநர் பதவிகள். (ஆ.தி.வ/ ப.வ.2; மி.பி.வ. மற்றும் சீ.ம.2 (ஓர் இடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது); பி.வ.4 (ஓர் இடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது); ப.போ.5 (ஓர் இடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) குறிப்புகள் (i):- தெரிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.*

(ii) Regular members in the Tamil Nadu Fisheries Department may also apply even if a period of five years has elapsed since their first appointment to the service provided they possess the qualifications prescribed for the post except age.

*33 வயதிற்குக் குறைவாக (1.7.89 அன்றுள்ளபடி)*

Note: Persons who have put in a minimum service of five years in the Fisheries Department and who satisfy the other qualifications except age may also apply relevant rule will be relaxed by the Government in their favour if they come up for selection.

Eg: "Must possess a M.F.Sc. degree or a Doctorate in Zoology or Marine Biology:

or

A first class degree in M.A./M.Sc. in Zoology or Marine Biology with a minimum of three years of Research experience as evidenced by published scientific papers. Provided that, preference shall be given to the candidates possessing M.F.Sc. degree, and only if sufficient number of M.F.Sc. candidates are not available, the candidates possessing other qualifications, shall be considered".

*2. தமிழ்நாடு மீன் வளப்பணியில் ஒரு மீன் 'வளப் பொருளியலர்* (Fishery Economist) *பதவி (ப.போ.1), ரூ.2,200-4,000; 35 வயதிற்குக் குறைவாக (1.7.89 அன்றுள்ளபடி)*

Notes: (i) Persons who have put in a minimum service of five years in the Fisheries Department and who satisfy the other qualifications except age may also apply. Relevant rule will be relaxed by the Government in their favour if they come up for selection.

(ii) Regular members of the Fisheries Department may also apply for this recruitment even if a period of five years has elapsed since their first appointment to the service provided they possess the qualifications prescribed for the post except age.

(தொடர்ச்சி : 36 ஆம் பக்கம்)



## அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா

*36-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழா நவம்பர் திங்கள் 14 முதல் 20 வரை தமிழ்நாடு எங்கும் சிறப்பாகக் கொண்டப்படுகிறது. விழாவிற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும், மாவட்ட மத்திய வங்கிகளும் இணைந்து மேற்கொள்ளும்.*

*கூட்டுறவு வார விழா ஏழு நாட்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இயக்கத்தின் பல்வேறு அம்சங்களை வலியுறுத்துகின்ற வகையில் கொண்டாடப்படுகிறது.*

*14-11-89 கூட்டுறவு நாள்.*

*15-11-89 வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிநாள்.*

*16--11-89 தொழில் மற்றும் கைத்தறி வளர்ச்சி நாள்.*

*17-11-89 மகளிர், நலிவுற்றோர் மற்றும் ஊனமுற்றோர் நாள்.*

*18-11-89 கூட்டுறவு மூலம் வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நுட்ப நாள்.*

*19-11-89 கூட்டுறவு மூலம் ஒருமைப்பாடு நாள்.*

*20-11-89 கூட்டுறவு மூலம் பதனீடு, விற்பனை மற்றும் விநியோக நாள்.*

*ஆண்டில் 205 கோடி ரூபாய் அளவில் வேளாண்மைக் கடன்களை கூட்டுறவு வங்கிகள் வழங்கியுள்ளன.*

*பயிர்க்கடன் வழங்குவதோடு அல்லாமல் கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல், உழவுமாடு, வண்டி வாங்குதல், பட்டுப் பூச்சி வளர்த்தல், பால் பண்ணை அமைத்தல் முதலிய விவசாயம் சார்ந்த துணைத் தொழில் மேற்கொள்வதற்காக மத்திய காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.*

*இத்தகைய கடன்கள் நலிந்த பிரிவு மக்களுக்குப் பயன்படும் வகையில் அளிக்கப்படுகின்றன. இன்னும் வேளாண்மை சாராத தச்சு, கருமார், பாய் கூடை முடைதல், போன்ற கிராமத் தொழில்களுக்கும் கடன்கள் வழங்கப்படுகின்றன. கிராம அளவில் செயல்படும் இத்தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கு மாவட்ட அளவில் செயல்படும் 16 மையக் கூட்டுறவு வங்கிகள் நிதியுதவி அளிக்கின்றன.*

*இவையன்றி நிலச் சீர்திருத்தம், பாசன வசதி, டிராக்டர்கள் வாங்குதல் போன்ற அபிவிருத்திக் காரணங்களுக்காகத் தமிழகத்திலுள்ள 181 கூட்டுறவு நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன்களை வழங்குகின்றன. 1988-89-ஆம் ஆண்டில் 28 கோடி ரூபாய் நீண்ட காலக் கடன்களாக வழங்கப்பட்டுள்ளன. 1989-90 நடப்பாண்டில் 310 கோடி ரூபாய் அளவிற்கு (குறுகிய) மத்திய மற்றும் நீண்ட கால வேளாண்மைக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.*

*விவசாயிகளின் அடுத்த தேவை, தாங்கள் விளைவிக்கும் விளைபொருளை ஆதாய விலைக்கு விற்க வேண்டுமென்பது தான். ஆனால் பெரும்பாலும் அறுவடைக் காலங்களில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காது. எனவே கூட்டுறவுச் சங்கங்கள், கிடங்கு வசதி, தானிய ஈட்டுக் கடன் முதலியவற்றை அளித்து நல்ல விலை வரும் வரை காத்திருக்க வாய்ப்பு அளிக்கின்றன. விளைபொருள்களுக்கு ஏல விற்பனை வசதியும் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து தருகின்றன. தமிழகத்தில் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இந்த வகையில் 1988-89-ஆம் ஆண்டில் 215 கோடி ரூபாய் அளவுக்கு வேளாண்மை விளைபொருள்களை விற்பனை செய்துள்ளன. நடப்பு 1989-90-ஆம் ஆண்டிலும் 210 கோடி ரூபாய் அளவுக்கு விளைபொருள் விற்பனை செய்யப் பணிகள் நடந்து வருகின்றன.*

*கிராமங்களில் மட்டுமன்றி நகரப் பகுதிகளில் வாழும் நடுத்தர மற்றும் நலிந்த பிரிவு மக்கள் தங்கள் பல் தேவைகளுக்கும் கூட்டுறவை நாடுகின்றனர். பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் வசதி அளிப்பதுடன் அவர்களிடையே சேமிப்பு உணர்வையும் ஊட்டுகின்றன.*

*தமிழகத்தில் நகர்ப் பகுதிகளிலுள்ள 134 நகரக் கூட்டுறவு வங்கிகள் மக்கள் வங்கிகளாகச் செயல்பட்டு நற்பணி புரிந்து வருகின்றன. இவை உற்பத்திப் பெருக்கத்தை நோக்கமாகக் கொண்ட முன்னுரிமை இனங்களுக்குக் கடன்களை வழங்குகின்றன. சிறு தொழில் முனைவோருக்கும், சுய தொழில் மேற்கொள்பவர்களுக்கும் பலவகையான கடன்களை நகர வங்கிகள் வழங்கி மக்கள் வாழ்வில் ஒளியேற்றுகின்றன. சமூகக் காரியங்களுக்கான கடன்களையும், வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவதற்கான நுகர்வுக் கடன்களையும் நகர வங்கிகள் வழங்குகின்றன. நகர வங்கிகள் கடந்தாண்டில் ரூ.302 கோடி அளவுக்கு பல்வேறு கடன்களை வழங்கியுள்ளன. நகர வங்கிகள் வட்டிக் கடைகள் என்ற நிலையில் இல்லாமல் சமுதாய வங்கிகள் என்ற பொறுப்பில் செயல்படுகின்றன. எளிய மக்கள் தொழில் புரிந்து வளம் பெற இவ்வங்கிகள் உதவுகின்றன. இந்த வகையில் சென்ற ஆண்டில் 12 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 15 கோடி ரூபாய் அளவுக்கு கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.*

*விலைவாசியைக் கட்டுப்படுத்தவும், தரமான நுகர் பொருட்களைச் சரியான எடையளவுகளில் விற்பனை செய்யவும் இன்று 3,959 நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. பிரதம பண்டகசாலைகள், மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், மாநில கூட்டுறவு நுகர்வோர் இணையமென மூன்று அடுக்குகளைக் கொண்டதாக இந்த அமைப்பு செயல்படுகிறது. சிறப்பங்காடிகளும், சிற்றங்காடிகளும் ஆங்காங்கு திறக்கப்பட்டு நுகர்பொருள்கள் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் செயல்படும் 52 சுய சேவைப் பிரிவுகளில் வாடிக்கையாளர்கள் தாமே பொருள்களின் தரத்தையும் விலையையும் சரிபார்த்துத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புள்ளது.*

க.க. மீன் வளப்பொருளியலைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பொருளியலில் ஒரு பி.எச்.டி. அல்லது எம்ஃபில் அல்லது முதல் வகுப்பு முதுகலைப்பட்டம்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தொட்டை எழுத்தில், விண்ணப்பம் கோரும் கடிதத்திலும் விண்ணப்பத்திலும் குறிப்பிட வேண்டும்.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ/சீ.ம., பி.வ., ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் பணிவேட்பாளருக்கான விதிமுறைகளில் தரப்பட்டுள்ளன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் எல்லா சலுகைகளும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கும் பொருந்தும்.

விண்ணப்ப படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.11.89 அன்றோ அதற்குப் பிறகோ வழங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில், செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்காக பெறப்பட்ட ரூபாய் 10/-க்கான (Account Payee) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்கு சென்னை-6க்கு செலுத்தத் தக்கதாகவும், சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருப்பின், அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**குறிப்பு:-** ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி கோரிக்கைக் கடிதம் ரூ.10/- அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலையுடன் அனுப்பப்பட வேண்டும்.

**சுருக்கங்கள்:** ஆ.தி.வ./ப.வ.: ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர்.

மி.பி.வ./சீ.ம. : மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர்

பி.வ. : பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

ப.போ. : பகிரங்க போட்டி.

DIPR/2318/MS/89/MCS



தரப் பரிசோதனை செய்து கலப்பட மற்ற பொருள்களை வாடிக்கையாளர் வாங்குவதற்கான ஏற்பாடுகள் கூட்டுறவுகளில் செய்யப்பட்டுள்ளன.

இவையன்றி மாநிலத்தில் அத்தியாவசியப் பொருள்களைப் பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்கான பொது விநியோகத் திட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே செயல்படுத்தப்படுகிறது. 21,134 நியாயவிலைக் கடைகள் மூலமாக 128 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டுப்பாட்டுப் பொருள்களை வழங்குகின்றன. இந்தியாவிலேயே பலம் பொருந்திய பொதுவிநியோக முறை தமிழகத்தில்தான் செயல்படுகிறது.

தமிழக அரசு இந்தாண்டு முதல் நடைமுறைப்படுத்தியுள்ள ஏழைக் குடும்பங்களுக்கு ஐந்து முறை ஐந்து கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம், கூட்டுறவுச் சங்க நியாய விலைக் கடைகள் வாயிலாகத்தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 83 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுகின்றன. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண ஏற்றதோர் பாதை கூட்டுறவு என்பதற்கு இத்திட்டம் இன்னும் ஒரு சான்றாகும்.

சமவெளிப் பகுதியில் மட்டுமன்றி மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு 18 லேம்ப் சங்கங்கள் சேவை புரிந்து வருகின்றன. இச் சங்கங்கள் 228 இலட்சம் ரூபாய் அளவுக்கு வேளாண்மைக் கடன்களையும், 167 இலட்சம் ரூபாய்க்கு நுகர் பொருள்களையும் வழங்கியுள்ளன. பழங்குடி உறுப்பினர்கள் மூலம் ரூ.45 இலட்ச அளவிற்கு சிறுவனப் பொருள்களைச் சேகரித்து இடைத் தரகர்களிடமிருந்து பழங்குடி மக்களுக்குப் பாதுகாப்பு அளித்துள்ளன. கூட்டுறவுச் சங்கங்களும், வேலை வாய்ப்பையும் வருவாயையும் அளிக்கின்றன. நலிவுற்றோர் வாழ்வில் பொலிவூட்டும் பணியில் இவை ஈடுபட்டுள்ளன.

இவை மட்டுமல்லாமல் - கைத்தறி நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றிடும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறு தொழில்கள் வளர்த்திடும் தொழிலியல் கூட்டுறவுகள், கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த கிராமக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், குடியிருக்கும் வீடு வழங்கும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், பால்வளம் பெருக்கிடும் பால்வளக் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் வாழ்வில் துயர் துடைக்கும் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் எனப் பல்வேறு துறைகளிலும் கூட்டுறவு நிறுவனங்கள் அந்தந்த மக்களுக்கு நற்பணியாற்றி வருகின்றன.

கூட்டுறவு நிர்வாகக் குழுவில் மகளிரும் பங்கேற்க வேண்டுமென்பதற்காக, புதிய கூட்டுறவுச் சட்டத்தில் அவர்களுக்கு 30 சதவிகித ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் நிர்வாகக்குழுவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முறையாக கூட்டுறவுத் துறையில் இது ஒரு சிறப்பான புதிய திட்டமாகும்.

இன்றைக்கு, கூட்டுறவியக்கம் தொடாத துறையில்லை. தொடராத இடமில்லை. மக்களுடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்கும் மாமருந்தாக கூட்டுறவியக்கம் செயல்படுகிறது. கூட்டுறவு நிறுவனங்கள், சமூக முன்னேற்றத்தின் சாதனங்கள். கூட்டுறவு நிறுவனங்களின் சேவையை எந்த அளவுக்கு உணர்ந்து பயன்படுத்திக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு மக்களின் சமூகப் பொருளாதார நிலை, மேம்பாடு அடையும்.

கூட்டுறவில் சேருவோம்; கோடி நன்மை பெறுவோம். உள்ளம் தோறும் கூட்டுறவு எண்ணம் அரும்பட்டும், இல்லம்தோறும் கூட்டுறவு உணர்வு மலரட்டும்.

**''மேகம்போல் வளம்பொழியக்**
**கூடுவோம்**
**மேன்மையுற கூட்டுறவை**
**நாடுவோம்.''**



**TNPSC Advt No 63**

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணியில், தொழில் மற்றும் வணிகத்துறையில் ஆய்வாளர் (உப்பு) பதவியில் உள்ள ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

(நியமன ஒதுக்கீட்டு விதி இப்பதவிக்குப் பொருந்தாது)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,400-40-1,600-50-2,300-60-2,600

**வயது:** 30க்குக் குறைவாக

**தகுதி:** (அ) வேதியியலில் ஒரு இளநிலைப் பட்டம்;

மற்றும்

(ஆ) உப்புத் தொழிலில் (Salt Industries) ஓர் ஆண்டிற்குக் குறையாத செயல்வழி அனுபவம்

**இறுதி நாள்: 4.12.1989 அன்று மாலை 5.30 மணி**
**வயது வரம்பு: 1.7.1989 அன்றுள்ளபடி**

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.10.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.10.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-6 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் Code No.0800ல் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Account Payee Demand Draft) உடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2180/MS/89/MCS



**சாதனைக்குச் சான்று**

**'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பாராட்டு!**

# தொழில் வளர்ச்சிக்குத் தமிழக அரசு தூண்டுகோலாக இருக்கிறது!

புதியதொரு தொழில் வளர்ச்சிக்குத் தமிழக அரசாங்கம் தூண்டுகோலாக இருக்கிறது என 'எக்ஸ்பிரஸ்' ஏடு தலையங்கம் தீட்டியுள்ளது.

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ஏட்டில் 13-9-89-ஆம் தேதி இதழில் வெளியாகியுள்ள தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி நடவடிக்கைகள் சுறுசுறுப்படைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்வந்து எடுத்துக்கொண்ட முயற்சிக்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பல ஆண்டுக் காலமாக ஒரு தேக்க நிலை ஏற்பட்டிருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே, எந்த ஒரு புதிய நிர்வாக முறை இதற்கே முன்னுரிமை அளிப்பது இயல்பேயாகும். தொழில் முனைவர்கள் தம்மை நேரில் சந்தித்துப் பேச வாய்ப்புகள் அளிப்பது மட்டுமின்றி, ஒரு காலத்தில் இந்த மாநிலம் வகித்து வந்த தலையாய இடத்தை மீண்டும் எட்டிப்பிடிப்பதற்காகக் கூறப்படும் யோசனைகளுக்குச் செவி சாய்ப்பதன் மூலம், இந்த விஷயத்தில் தமக்குள்ள செயலாக்கத்தை அவர் திட்டவட்டமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

தொழில் துறையை அவரே தமது நேரடிப் பொறுப்பில் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

தொழிலதிபர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். வெளி மாநிலத்தைச் சேர்ந்த பொதுத்துறை, தனியார் துறை ஆகிய இரு துறைகளையும் சேர்ந்த முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இவற்றின் விளைவாகக் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்று திட்டவட்டமான யோசனைகள் உருப்பெற்றிருக்கின்றன. இதுவரை இந்த மாநிலத்தில் முதலீடு செய்ய வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலதிபர்கள் தயங்கி வந்திருக்கின்றனர். அவர்களுக்கு இங்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும், இந்த மாநிலத்தில் சுமுகமான சூழ்நிலை கிடைக்கும் என்று உறுதியளிக்கப்பட்டிருப்பது. இந்தத் தேக்கத்துக்கு நிச்சயம் ஒரு முடிவு கட்டவே செய்யும்.

குறிப்பாக, மராட்டியத்திலும், குஜராத்திலும் உள்ளது போல் இங்கும் டிட்கோவில் 11 சதவிகித முதலீட்டுடன் கூடிய கூட்டுத்துறை, தனியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. தக்கதொரு கட்டத்தில் டிட்கோ தனது முதலீட்டை வாபஸ் பெறும் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இதனால் எல்லாம் டிட்கோவில் உள்ள முதலீட்டு வசதியை முன்பை விட இன்னும் பரவலாகப் பயன்படுத்திக் கொள்ளும் சாத்தியம் உள்ளது.

இந்த மாநிலத்திலுள்ள 105 வட்டங்களைப் பின்தங்கிய வட்டங்களாக மாநில அரசு அறிவித்துள்ளது. பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில்களுக்கு மூலதன மானிய உதவிகளை அறிவித்துள்ளது. பொதுவான சில தொழில்களுக்குச் சிறப்பு மானிய உதவி அளிக்க முன்வந்திருப்பது, புதியதொரு தொழில் துறை வளர்ச்சி வேகத்துக்குத் தூண்டுகோலாக அமையும்.

-(இந்தியன் எக்ஸ்பிரஸ்)
13-9-1989.

## TNPSC Advt No 64

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் பணியில், சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை உதவி இயக்குநர் (தொழிற் கல்வித்திட்டம்) (Vocational Programme) பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதிகள் இத்தேர்விற்கு பொருந்தாது)

**சம்பளம்:** *மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000*

**வயது:** *30 வயதிற்குக் குறைவாக*

**தகுதி:**

(a) A degree in Mechanical or Electrical or Automobile Engineering or Chemical Engineering or a Diploma in Automobile Engineering of the Madras Institute of Technology, Madras or a Diploma in any one of the above subjects awarded by the SBTET, Madras or of any recognised Institution or Board

And

(b) Practical experience in a factory or workshop for a period of not less than eighteen months in the case of degree holders and holders of Diploma of the Madras Institute of Technology Madras and three years in the case of other diploma holders

**இறுதி நாள்: 4.12.1989 அன்று மாலை 5.30 மணி**

**வயது வரம்பு: 1.7.1989 அன்றுள்ளபடி**

ஆதி.திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.10.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.10.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-6 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Account Payee Demand Draft) உடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2319/MS/89/Z






# காவல் துறையின் பணிகள் சிறந்து விளங்கிட...

1969-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் காவல் துறையினர் – தீயணைப்புத் துறையினருக்கு முதலமைச்சர் பதக்கம் வழங்கும் திட்டத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

1971-இல் முதலாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது.

1973-இல் தமிழ்நாட்டில் முதன்முதலில் பெண் போலீஸ் படை முதல்வர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டது.

இப்பொழுது காவல்துறையில் நவீனப்படுத்தி சீரமைப்புச் செய்ய, போலீஸ் கமிஷன் மீண்டும் முதல்வர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் கலந்து வேலையிழந்த காவலர்களுக்கு மீண்டும் வேலைவழங்கப்பட்டுள்ளது.

காவலர் குடியிருப்பு வசதித் திட்டம் தொடருகிறது.

28 ஆயிரம் போலீசார் வீடுகளுக்கு மின் விசிறிவசதி.

சென்னையைப் போல மதுரை, கோவை மாநகரங்களுக்கு போலீஸ் கமிஷனர்கள் அமைப்பு. 11 புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 88 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வசதிகள் செய்யப்பட்டுள்ளன

# மாநில கணக்காயர் அலுவலகம்

## (கணக்கு மற்றும் பணி வரவு)

சென்னை-18

## ''தமிழக அரசு ஊழியர்கள் கவனத்திற்கு''

தமிழக அரசு ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதியின் 1988-89-ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகள் (GPF அக்கவுண்ட் ஸ்லிப்) அனுப்பப்பட்டு வருகின்றன என்பதையும், அவை 1989-ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதிக்குள் உங்களுக்கு அனுப்பப்பட்டுவிடும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த கணக்கு அறிக்கைகள் 1989-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நீங்கள் பணி புரிந்த அலுவலகங்களுக்கு அனுப்பப் பட்டு வருகின்றன.

கணக்கு அறிக்கைகள் மிக்க கவனத்துடன் எந்தவிதக் குறை பாடும் இல்லாமல் தயாரிக்கத் தேவையான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. எனினும், தவிர்க்க இயலாத காரணங் களால் குறைகள் காணப்பட்டால் சம்பளப் பட்டியல் விவரங் களுடன் தங்கள் அலுவலக அதிகாரிகள் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

**''திரு. சி.வி. ராமன்,**
**கணக்கு அலுவலர்,**
**எப்.எம். I பிரிவு, (F.M.I. Section)**
**மாநில கணக்காயர் அலுவலகம்,**
**261, அண்ணாசாலை, சென்னை-600 018.**

என்றும் தங்களுக்காகப் பணிபுரிய காத்திருக்கிறோம். **''தங்கள் பொது வருங்கால வைப்பு நிதியின் நியமனப்பத்திரம் (நாமி னேஷன்) தாக்கல் செய்து விட்டீர்களா?''**

**சி.வி. ராமன்**
கணக்கு அலுவலர்



# நேருவின் வாழ்விே



1889 நவம்பர்த் திங்கள், 14-ஆம் நாள், மோதிலால் நேருவுக்கும் சொரூப ராணிக்கும் அலகாபாத்தில் பிறந்தார்.

1905 மே திங்களில் இங்கிலாந்தில் ஹாரோ பள்ளியில் சேர்ந்தார்

1910 பட்டப்படிப்பை முடித்து, சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்.

1912 வழக்கறிஞராக இந்தியா திரும்பினார்.

1916 பிப்ரவரி 8-இல் கமலாவை மணந்தார். டிசம்பரில் காந்தியடிகளுடன் முதல் சந்திப்பு.

1919 மோதிலாலுடன் சேர்ந்து 'இண்டி பெண்டன்ட்' என்ற செய்தி இதழைத் தொடங்கினார்.

1921 கிசான் கிளர்ச்சியில் ஈடுபட்டார். வேல்ஸ் இளவரசர் வருகையின்போது கடையடைப்பு நடத்தத் திட்டமிட்டதற் காக, டிசம்பர் 6-இல் கைது செய்யப் பட்டு , ஆறு மாதச் சிறைத்தண்டனை அடைந்தார்.

1925 அலகாபாத் நகராட்சித் தலைவரானார். பின்னர் அப்பதவியைத் துறந்தார்.

1927 நவம்பரில், மாஸ்கோவில் நடைபெற்ற ருசியப் புரட்சியின் 10-ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டார். 'சோவி யத் ருஷ்யா' என்ற நூலை எழுதினார்.

1930 ஏப்ரல் 14-இல் உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதனால், ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

1931 பிப்ரவரி 6-இல் மோதிலால் நேரு மறைவு.

1934 ஜனவரி 1-இல் 'உலக வரலாறு என்னும் நூலை எழுதி முடித்தார்.

1935 பிப்ரவரி 14-இல் தன் வரலாற்ை எழுதினார். செப்டம்பர் 4-இல் மனைவ மிகவும் உடல் நலம் குன்றியதா அவரைப் பார்ப்பதற்காக விடுதலை பெற்று ஐரோப்பா சென்றார். வெள் நாட்டிலிருக்கும்போதே காங்கிரஸ் தலை வராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1936 பிப்ரவரி 28-இல் கமலா சுவிட்சா லாந்தில் காலமானார். ஜூன் 2-இ இந்திய அரசியல் சட்டத்தின் மாதிரி படியை உருவாக்கினார்.

1938 நேருவின் தாயார் சொரூபராணி மறை

1939 சுபாஷ் சந்திர போஸுக்கும் காந்தியடி களுக்கும் இடையில் எழுந்த வேறு பாட்டைப் போக்க முயன்றார்.

1940 'இந்தியரைக் கேட்காமலே உலகப் போரில் இந்தியா கலந்து கொள்ளும்' என்று ஆங்கில அரசு அறிவித்ததனால் எழுந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டமைக்காக அக்டோபர் 31-இல் கைது செய்யப்பெற்று, இரண்டாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றார்.

1941 டிசம்பரில் விடுதலை பெற்றார்.

1942 ஜனவரி 1-இல் 'நேருவே என் வாரிசு' என்று காந்தியடிகளால் புகழ் மாலை சூட்டப்பெற்றார். ஆகஸ்டு 7-இல் பம்பாய் காங்கிரஸில் 'வெள்ளையனே

வெளியேறு' என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியதனால், ஆகஸ்ட் 8-இல் கைதானார். நீண்ட காலம் சிறைவாசம் பெற்றார்.

1944 ஏப்ரல் 13-இல் 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' என்ற நூலை, சிறையிலே எழுதத் தொடங்கி, செப்டம்பரில் முடித்தார்.

1945 ஜூலை 17-இல் முஸ்லீம் லீக் கேட்ட பாகிஸ்தான் பிரிவினையை வன்மை யாகக் கண்டித்தார்.

1946 மார்ச் திங்களில், 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' என்ற நூலை வெளியிட்டார். ஆகஸ்ட் 12-இல் இடைக்கால அரசாங் கத்தை அமைக்குமாறு, வைஸ்ராய் நேரு விடம் கேட்க, அவர் ஒப்புக் கொண்டார்.

1947 ஆகஸ்ட் 15-இல் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

1948 ஜனவரி 30-இல் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார். நேரு கண் கலங் கினார். வானொலியில் உருக்கமாக உரையாற்றினார்.

1950 ஜனவரி 26-இல் இந்தியா குடியரசு நாடு ஆகியது. மார்ச் திங்களில் இந்தியத் திட்டக் குழுவைத் தொடங்கினார். ஜூலை 14-இல் கொரியாப் போரை நிறுத்தச் சொல்லி மூன்று வல்லரசுகளுக் கும் வேண்டுகோள் விடுத்தார்.

1954 ஜூன் 25-இல் சீனப்பிரதமர் சூ-என்-லாயை வரவேற்றார். பஞ்சசீலம் என்னும் ஐந்து கொள்கைகளை விளக் கினார்.

1955 ஜூலை 15-இல் 'பாரத் ரத்னா' விருது பெற்றார்.

1957 ஜனவரி 12-இல் நாளந்தாவில் புத்தரின் 2,500-வது ஆண்டு விழாவில் பங் கேற்றார்.

1962 டிசம்பர் திங்களில், கோவா மக்களை போர்ச்சுக்கீசியரின் பிடியிலிருந்து விடுதலை பெறச் செய்தார்.

1964 ஜனவரியில், புவனேஸ்வரத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபொழுது நோய் வாய்ப்பட்டார். சிகிச்சைக்குப் பின் நலம் பெற்றார்.

மே 27 புதன் கிழமை காலை 6.20 மணிக்கு மீண்டும் நோய்வாய்ப்பட்டார். குருதிக் குழலில் கோளாறு ஏற்பட்ட தனால், பகல் 2 மணிக்கு மறைந் தார்.





# TEL

## தமிழ்நாடு வெடிமருந்து தொழிற்சாலை

**வெடிமருந்துகள்,
வெடி ஊக்கிகள்,
வெடி ஊக்கித் திரிகள் —
தரமேன்மைக்கும்
பாதுகாப்புக்கும்
புகழ் பெற்ற தயாரிப்புகள்**

குறுகிய காலம் —மூன்றே ஆண்டுகள் நிறைவான சேவை. நிகரற்ற சாதனை. இப்போது! டிலே டெட்டனேட்டர்கள் உங்கள் தேவைக்கு உடனடி சேவை!

**தமிழ்நாடு வெடிமருந்து தொழிற்சாலை**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
வேலூர் - 632 007.
பதிவு அலுவலகம்: 14, பாவா சாலை
அபிராமபுரம், சென்னை - 600 018.

டெல் வெடிமருந்துகள் தரத்தில் உயர்ந்தவை
ஆற்றலில் சிறந்தவை

DIPR /MS/89 - MOULIS


# போக்குவரத்து ஊழியர்களுக்குப் பொற்காலம்



## நீண்ட நாட்களாகப் பேசித் தீர்க்கப்படாத கோரிக்கைகளைப் பேசித் தீர்த்து புதிய வரலாற்றை உருவாக்கியுள்ளது தமிழக அரசு

| | |
|---|---|
| சம்பளம் | ★ குறைந்தபட்ச உயர்வு ரூ. 150<br>அதிகபட்ச உயர்வு ரூ. 450 |
| சர்வீஸ் வெயிட்டேஜ் | ★ இதுவரையில் கிடைத்திடாத சர்வீஸ் வெயிட்டேஜ் இப்போது 10 ஆண்டுகளுக்கு ஒரு இன்கிரிமெண்டும், 20 ஆண்டுகளுக்கு மேல் இரண்டு இன்கிரிமெண்ட் உயர்வும் கிடைத்துள்ளது. |
| நிரந்தர பேட்டா | ★ 14 ஆண்டுகளாகக் கிடைக்காமல் இருந்த நிரந்தர பேட்டா இப்போது ஓட்டுநர்-நடத்துநர்-பரிசோதகர்-ஓட்டுநர் பயிற்சி யாளர் ஆகியோருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 1/- வீதம் மாதத்திற்கு கூடுதலாக ரூ. 26 உயர்வு. |
| விடுப்பு | ★ மருத்துவ விடுப்பு 2 நாட்கள், பண்டிகை விடுப்பு 1 நாள் ஆக 3 நாட்களாகக் கூடுதலாக விடுப்பில் உயர்வு |
| சீருடை | ★ 3 செட் சீருடை டெரிகாட்டன் இப்பொது 4 செட் டெரி காட்டன் சீருடை உயர்வு |
| தையல் கூலி | ★ ரூ. 135-லிருந்து ரூ. 260 ஆக உயர்வு. |
| விரும்பி ஓய்வு பெறுபவர் | ★ ரூ. 5,000 ஆண்டுக்கு என்பதை மாற்றி ரூ. 7,500 ஆக உயர்வு |
| பண்டிகை முன்பணம் | ★ ரூ. 500-லிருந்து ரூ. 750 ஆக உயர்வு |
| திருமணக் கடன் | ★ ரூ. 2,000-லிருந்து ரூ. 3,000 வரை உயர்வு<br>ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 வரை உயர்வு |
| இடைக்கால நிவாரணம் | ★ தொடர்ந்து ரூ.80 கிடைக்கும் |
| சமன் செய்த புள்ளிக்கு பாதுகாப்பு | ★ சம்பளத்துடன் 120 புள்ளிகளை சமன் செய்தால்-விலைவாசி புள்ளிக்கு கூடுதல் தொகை உயரும்போது 530 புள்ளியிலிருந்து கூடுதல் தொகை கிடைத்திடும் வகையில் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| ஓய்வுபெற்ற மற்றும் இறந்த தொழிலாளர் நலன் | ★ ஓய்வுபெற்ற பின்பும் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு இலவசப் பயண அனுமதிச் சீட்டு, வாரிசுக்கு வேலை வாய்ப்பில் முன் னுரிமை, உடனடி வேலைவாய்ப்பு, குழந்தைகள் படிப்பு முடிகிற வரை பாஸ் வசதி. கல்வித் தொகை ரூ. 50 (இரண்டு குழந்தைகளுக்கு) |
| பென்சன் திட்டம் | ★ அனைத்து ஊழியர்களுக்கும் விரைவில் அமலாக்கம் செய்திட உயர்வு |
| கல்வி முன் பணம் | ★ -ரூ. 300-லிருந்து ரூ. 600 ஆக உயர்வு |

**இதுபோன்று இன்னும் ஏராளமான கோரிக்கைகளை நிறைவேற்றி 32 கோடி ரூபாய் கூடுதல் செலவினை ஏற்றுக் கொண்டு போக்குவரத்து ஊழியர்களுக்குப் புது வாழ்வு தந்துள்ளது தமிழக அரசு.**

## இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி :



# காமராஜர் மாவட்டத்தில் முதல்வர் கலைஞர் தொடங்கி வைத்த நலத் திட்டங்கள்

**கா**மராசர் மாவட்டம் விருது நகரில் 8-10-89 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 21,277 ஏழைகளுக்கு ரூ. 58,60,835 நல்வாழ்வுத் திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் ரூ. 2880.50 இலட்சம் ரூபாய் மதிப்பான திட்டங்களுக்குக் கால்கோள் நாட்டினார். ரூ. 1573.645 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்களைத் திறந்து வைத்தும், பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்தும் உரையாற்றினார்.

விழாவிற்கு மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு துரைமுருகன், மாண்புமிகு கைத்தறி அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு ஆகியோர் முன்னிலையில் விழா சிறப்பாக நடந்தது. காமராஜர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. டி. எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''இன்று, 21277 பேர் பயன் பெறுகின்ற அளவிற்கு ஐந்து கோடியே எண்பத்தியேழு இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உதவிகள் வழங்கப்படுகின்றன. அது தவிர இருபத்தெட்டுக் கோடியே எண்பது இலட்ச ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கு கால்கோள் நாட்டப்பட்டுள்ளது. சில திறந்து வைக்கப்பட்டுள்ளன.

''மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திற்கு மறைந்த முன்னாள் முதலமைச்சர் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பல பணிகளாற்றி, தியாகங்கள் செய்து அவர் ஆட்சிக் காலத்தில் அமைதி நிலவியது. நியாயம், நேர்மை, நிர்வாகத்திறன் இவைகளெல்லாம் செழித்துத் திளைத்தன என்று போற்றுகின்ற அளவிற்கு தமிழகத்திலே ஆட்சிபுரிந்த குமாரசாமி ராஜா அவர்களின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

''இவரைப் போலவே என்னுடைய அருமை நண்பரும் 'இளம் பெரியார்' என்று அனைவராலும் புகழப்பட்டவரும், அழைக்கப்பட்டவரும், சுயமரியாதைச் சுடரொளியும், விருதுநகர் வட்டாரத்திலே வாலிபர்களின் இதயத் துடிப்பாகத் திகழ்ந்தவரும் சட்டப்பேரவையில், நாடாளுமன்றத்தில் திறமை மிகுந்த 'பார்லிமென்டேரியன்' என்று பெயர் பெற்றவரும், துணிவின் உறைவிடமாகத் திகழ்ந்தவரும் அதே நேரத்தில் கொள்கை உறுதிப்பாட்டில் எந்தச் சலனத்திற்கும், சபலத்திற்கும் ஆளாகாதவருமான என்னுடைய அருமை உடன்பிறப்பு 'ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் பெயரால் அலுவலகத்திற்கு 'ஏ.வி.பி. ஆசைத்தம்பி மாளிகை' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது.

''காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர் பெயரால் வளாகம், திராவிட இயக்கத்தின் புயலாக விளங்கிய ஆசைத்தம்பி பெயரால் மாளிகை! இதுதான் தி.மு. கழக அரசு கட்டிக் காக்கின்ற அரசியல் நாகரிகம்-பண்பாடு! இதிலே இந்தியாவிலே வேறு எந்த கட்சிகளும் இதுபோல் மாற்றுக் கட்சியினரை எதிர்க் கட்சியினரைப் பாராட்டுகின்ற நிலை உண்டா என்று கேள்வி கேட்பதற்குப் பதிலாக அந்த நிலை ஏற்பட வேண்டுமென்று நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.''

விழாவிற்கு இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. இராஜேஸ்வரன், அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.வே. தங்கப்பாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். கருப்பசாமி, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சொக்கர், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ. சீனிவாசன், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ. தங்கம், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. இராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். திட்ட அலுவலர் திரு ப. கனகசபை நன்றி கூறினார்.

-எஸ். தீனதயாளன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காமராஜர் மாவட்டம்.



## ஏழை எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்

ஏழை எளிய மக்கள் குடியிருப்பதற்காக வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி வருகிறது தமிழக அரசு. கடந்த ஒன்பது மாதங்களில் (பிப்ரவரி முதல் அக்டோபர் முடிய) 2 லட்சத்து 25 ஆயிரத்து 483 மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1989-90 நிதி ஆண்டில் 3 இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குவது தமிழக அரசின் இலக்கு.

கடந்த 9 மாதங்களில் வழங்கப்பட்ட பட்டாக்கள் விவரம்:

| | ஆதிதிராவிடர் | மலைவாழ் மக்கள் | ஏனையோர் |
|---|---|---|---|
| பிப்ரவரி | 6,260 | 411 | 10,680 |
| மார்ச் | 5,741 | 100 | 15,677 |
| ஏபரல் | 2,389 | 21 | 5,206 |
| மே | 4,398 | 419 | 6,504 |
| ஜூன் | 9,948 | 56 | 14,869 |
| ஜூலை | 13,522 | 312 | 14,997 |
| ஆகஸ்ட் | 23,290 | 591 | 17,943 |
| செப்டம்பர் | 24,964 | 280 | 14,576 |
| அக்டோபர் | 10,092 | 4,329 | 17,908 |

**கடந்த 9 மாதங்களில் வழங்கப்பட்ட பட்டாக்கள்: 2,25,483**

127081
600 008

## நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலப்பட்டா

கடந்த ஒன்பது மாதங்களில் (பிப்ரவரி '89 முதல் அக்டோபர் முடிய) தமிழக அரசு நிலமற்ற ஏழை விவசாயிகள் 4,210 பேருக்கு நிலப்பட்டா வழங்கியுள்ளது.

வழங்கப்பட்ட நிலப்பட்டாக்கள் விவரம்:

| | ஆதிதிராவிடர்/பழங்குடியினர் | ஏனையோர் |
|---|---|---|
| பிப்ரவரி | 21 | 236 |
| மார்ச் | 109 | 406 |
| ஏப்ரல் | 39 | 179 |
| மே | 43 | 415 |
| ஜூன் | 152 | 506 |
| ஜூலை | 237 | 458 |
| ஆகஸ்ட் | 156 | 316 |
| செப்டம்பர் | 165 | 387 |
| அக்டோபர் | 72 | 313 |

**கடந்த ஒன்பது மாதங்களில் வழங்கப்பட்ட நிலப்பட்டாக்கள்: 4,210**

# நீண்ட நாள் கோரிக்கைக்கு

## நல்லதோர் தீர்வு

○ மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகித இடஒதுக்கீடு.

○ அவர்கள் நலன் காக்கத் தனித் துறை.



"........ வன்னியர் சமுதாயத்திற்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது ......"

—திரு. வன்னிய அடிகளாரார்.



"........ வன்னிய சமூகத்தினருக்கு நிச்சயமாகப் பலன் அளிக்கும்."

—திரு. ஏ.என். சட்டநாதன்.



"........ கலைஞர் அவர்களது ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்கு, கல்விக்கு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்புக்கும் இட ஒதுக்கீடு கொடுத்தது மிகவும் பாராட்டத்தக்கது."

—தமிழகச் சட்டமேலவையின் முன்னாள் தலைவர்
திரு. எம்.ஏ. மாணிக்கவேலர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பருத்தி வகைகள்



உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு



# மகளிர் நலம் காக்கும் தமிழக அரசின் மகத்தான திட்டங்கள்

- ★ பரம்பரைச் சொத்தில் ஆண்களைப் போல் பெண்களுக்கும் சம உரிமை வழங்கச் சட்டத் திருத்தம்
- ★ அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 சதவீதத் தனி ஒதுக்கீடு
- ★ எட்டாம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமணச் செலவுக்காக ரூ.5,000/- நிதியுதவி; ஐந்தாம் வகுப்பு வரை படித்த பழங்குடிப் பெண்களுக்கும் இந்த நிதியுதவி உண்டு.
- ★ கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு ரூ.200/- உதவித்தொகை
- ★ ஏழை நடுத்தரக் குடும்பப் பெண்களுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி
- ★ கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு ரூ.5,000/- நிதியுதவி
- ★ இளம் விதவைகளின் மறுமணத்தை ஊக்குவிப்பதற்காக ரூ.5,000/- நிதியுதவித் திட்டம்

## நாளெல்லாம் தொடர்கிறது நன்மைகளின் பட்டியல்